குண்டூசி

ஜூன் 54...எட்டு அணா

Distributors: **A. V. R. A. & Co.,** **Madras, Bombay.**



நீங்கள்

இன்று

உங்கள் பற்களை

மக்ளீன்

செய்தீர்களா?

ஆம், அதன் இரகசியம் இதுதான் . . .

பற்களைத் தவறாமல் சுத்தம் செய்து வருவதால் அவை நெடு நாளைக்கு ஆரோக்யமாக இருக்கின்றன என்பதைத் தெளிவாக்கி விடுவோம். பிரதி தினமும், இரு வேளையும் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உபயோகிப்பதால், அதிக வெண்மையான பற்களும், உறுதியான ஈறுகளும், நறுமணமுள்ள சுவாசமும் நிச்சயமாக உண்டாகின்றன. இவ்வித்தியாசத்தை நீங்களே காணலாம். மக்ளீன்ஸிலுள்ள ஒரு ப்ரத்யேகமான பொருள் பற்களின் மேல் படிந்துள்ள மங்கலான பூச்சை மாற்றி பற்களின் மேல் இயற்கையாக ஒளிரும் வெண்மையை வெளிக்கொணர்கிறது.



OFFICE OF THE REGISTRAR
13 JUL 1954

க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்

ஜூன்
11உ முதல்
தமிழ் நாடெங்கும்
எம். ஏ. வி. பிக்சர்ஸ்
மாங்கல்யம்
டைரக்ஷன் கே. சோமு
ஸ்டுடியோ கோவை ஸெண்ட்ரல்
MAV PICTURES COIMBATORE
BHARAT STUDIO

நாடுவது ஏன்?

T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
நாட்டிலே நற்பெயர்பெற்று நிலவுகிறது
தபால் பெட்டி 1151 சென்னை-21.
REGISTERED TRADE MARK

S. R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

குண்டூசி

ஆசிரியர்:
பி.ஆர்.எஸ்.கோபால்

மலை அசைகிறது!

சென்ற பத்து வருஷ காலத்தில் சினிமாத் தொழிலினர் செய்துள்ள முயற்சிகள், போட்டிருக்கும் கூச்சல்கள், இவை யெல்லாம் — உலகத்தில் பெரியதான இமய மலையையே கொஞ்சம் நகர்த்தியிருக்கக் கூடும்! ஆனல், அதன் அடிவாரத்தில் ராஜ்யபாரம் செய்யும் இந்திய சர்க்காரோ அதை விடப் பெரிய மலையாய்—துளியும் அசைந்து கொடாமலே—இருந்து வந்தனர். ஆனல், அவர்கள்கூட இப்பொழுது அசைந்து கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

சினிமாத் தொழிலினர் போட்டு வரும் கூச்சலைத் தாங்க முடியாமற் போகவே, சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு இந்திய சர்க்கார் சினிமா விசாரணைக் கமிட்டியொன்றை ஏற்படுத்தி, இந்திய சினிமாத் தொழிலின் நிலைமையை பரிசிலனை செய்யும்படி கூறினர். அக் கமிட்டியினர் தங்கள் விசாரணையை சாங்கோபாங்கமாக நடத்தி, ஒரு அறிக்கையை சர்க்காரிடம் சமர்ப்பித்தனர். அதில், சினிமாத் தொழில் அபிவிருத்திக்கு மிக சாதகமான பல நல்ல யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

"விசாரணை முடிந்து—அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டதே. இனி சர்க்கார் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளவைகளை அமலுக்குக் கொண்டு வருவார்கள்; சினிமாத் தொழிலுக்கு ஒரேயடியாய் நல்ல காலம் பிறந்துவிடும்" என்றெல்லாம் இத் தொழிலினர் எதிர்பார்த்து, மூன்று வருஷ காலமாய் காத்துச் சலித்து வந்தனர்.

கடைசியில், அந்த நல்ல காலமும் இப்பொழுது வந்து விட்டது. சமீபத்தில், செய்தி விளம்பர இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர்: "அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் பல சிபார்சுகளை அமலுக்குக் கொண்டுவரப் போவதாக" பார்லிமென்டில் அறிவித்திருக்கிருர். இச் செய்தி எமக்கும், சினிமாத் தொழிலினருக்கும் மிகுந்த சந்தோஷத்தையும், ஓரளவு ஏமாற்றத்தையும் அளிக்கிறது.

கூடிய சீக்கிரத்தில் நேஷனல் பிலிம் போர்டு என்ற ஸ்தாபனத்தை ஸ்தாபித்து, அதன் மேற்பார்வையில் ஒரு **பட உற்பத்தி ஆலோசனை இலாகாவையும், ஒரு பயிற்சிக் கழகத்தையும்** நடத்துவது என்று சர்க்கார் தீர்மானித் திருக்கின்றனர். பட உற்பத்தி ஆலோசனை இலாகா படக் கதை, ஸீனரியோ, நடிப்பு விஷயம், தயாரிப்பு முதலிய பல விஷயங்கள் பற்றி படத்தொழிலினருக்கு யோசனைகள் மட்டும் கூறி உதவுமாம்.

இவ்விரு ஸ்தாபனங்களும் நம் சினிமாத் தொழிலின் வளர்ச்சிக்கு மிக உதவுபவையாக இருக்கக் கூடும்.

ஆனல், இந்த ஸ்தாபனங்களின் செலவை சர்க்கார் எவ்வாறு சரிக்



பட்டை–7 ஊசி–9 பிரதி–81
ஜூன் – 1954

கட்டப் போகிறார்களோ தெரியவில்லை. ஒரு வேளை இதற்கான செலவை சினிமாத் தொழிலினரையே சுமக்கும்படி செய்துவிடுவார்களோ என்ற பயம் ஒருபுறம் ஏற்பட்டிருக்கிறது. வசூலிக்கப்படும் வரித் தொகையிலிருந்து சர்க்கார் நேஷனல் பிலிம் போர்டை நடத்துவதே நியாயம் என்று நாம் கருதுகிறோம்.

பொதுவாக, விசாரணைக் கமிட்டி அறிக்கையில் பெரும் பகுதியை சர்க்கார் அங்கீகரித்து விட்டதற்கு மிகப் பாராட்டுகிறோம். இவ்வறிக்கையில் மிக முக்கியமானவை இரண்டு. ஒன்று, சினிமாத் தயாரிப்பாளர்களுக்கு பண உதவி செய்ய ஒரு நிதி ஸ்தாபனத்தை ஏற்படுத்துவது. மற்றது, அமிதமான தமாஷா வரிப் பளுவைக் குறைப்பது. 'தற்போது சினிமாத் தொழில் உள்ள ஸ்திரமற்ற நிலைமையில் நிதி ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்துவது சாத்தியமில்லை' என்றும், வரி விசாரணைக் கமிட்டியின் சிபார்சு கிடைத்த பின்னரே வரிக் குறைப்பு விஷயம் ஆலோசிக்கப்படும் என்றும் டாக்டர் கேஸ்கர் கூறியிருக்கிறார். இது சினிமாத் தொழிலினருக்கு ஏமாற்றத்தையே அளிக்கிறது. எனினும் கூடிய சீக்கிரத்தில் சர்க்கார் தமாஷா வரியைக் குறைத்து, நிவாரணம் அளிப்பார்கள் என்று நம்புகிறோம்.

402

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ரூ. 6
வெளி நாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா ... ... 8 அணா
இலங்கை ... ... 50 சதம்
வெளி நாடு ... ... 12 அணா

கட்டுரையாளர்களுக்கு

'குண்டுசி'யில் வெளியிடுவதற்கு நல்ல சிறு கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யத் துணுக்குகள் முதலியவை வரவேற்கப் படுகின்றன. வெளியிடப்படுபவைகளுக்குத் தக்க சன்மானம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்படாத விஷயங்களைத் திரும்பப் பெற வேண்டுபவர்கள் போதிய ஸ்டாம்ப் உள்ள கவர்களை முன்னதாகவே வைத்து அனுப்பவேண்டும்.

குண்டூசி காரியாலயம்,
26, கிடங்குத் தெரு,
சென்னை—1.

குறிப்பு:—"குண்டுசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவைகள் நிஜ நபர் எவரையும் குறிப்பிடுபவை அல்ல. —ஆசிரியர்.

பாகவதமேளா

ஒரே ஒருவர் மேடைமீது தோன்றி நடனமாடும் சதிர் நாட்டியத்தை பரத நாட்டியம் என்று அழைத்து பழக்கப்பட்டுப்போன ரஸிகர்களுக்கு, மெலட்டூர் பாகவதமெளா (நாட்டிய நாடகக் கலையும் பரத நாட்டிய தத்துவத்தில் பிறந்தது தான் என்று கேட்கும்போது சற்று ஆச்சரியமாகவே இருக்கும். மலையாளத்து ராம நாடகம், கிருஷ்ண நாடகம், ஆந்திராவின் குச்சுபுடி நரட்டியம், இவைகளைப் போல பகவத் கதைகளை நாட்டியமாக நடிக்கப் பெறும் இந்த பாகவதமேளா கலை சுமார் 11-ம் நூற்றாண்டிலே இங்கு தோன்றியிருக்க வெண்டும். தஞ்சாவூர் ஜில்லா வரகூரில் வசித்து வந்த தீர்த்த நாராயண யோகியாரின் பிற்காலத்தில் சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு பாகவதமெளா பிரபலமடைந்திருக்கிறது. "கிருஷ்ணலீலா தரங்கினி"யையும் எழுதியவர் அவர்தான். அவர் காலத்திற்குப் பின் சுமார் 150 வருஷங்களுக்கு முள் மெலட்டூர் வெங்கடராம சாஸ்திரியார் பாகவதமேளாவின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டிருக்கிறார். அவர் தெலுங்கில் சுமார் பன்னிரண்டு நாட்டிய நாடகங்களையும் பாகவத மேளாவுக்காக இயற்றியுள்ளார்.

அவைகள் தஞ்சாவூர் ஜில்லாவில் சூலமங்கலம், ஊத்துக்காடு, சாலியமங்கலம், நல்லூர், தேப்பெருமா நல்லூர் முதலிய கிராமங்களிலும். மெலட்டூரிலும், கோவில் திருவிழாக் காலங்களில் நடைபெற்று வந்தன, தஞ்சாவூருக்கு சமீபத்தில் உள்ள மெலட்டூர் கிராமத்தில் வரதராஜஸ்வாமி தேவாலயத்தில் வருஷா வருஷம் மே, ஜூன் மாதங்களில் நரசிம்ம ஜெயந்தி உற்சவம் நடக்கும்போது, பாகவதமேளா நாட்டிய நாடகங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த கிராமம் சுமார் 500 பிராம்மண குடும்பங்களுக்கு, குடும்பத்திற்கு ஒரு வீடும், கொஞ்சம் பயிர் செய்யும் பூமியுமாக தஞ்சை மன்னன் அச்சுதபப நாயகனால் வழங்கப் பெற்றதாம். நாட்டிய நாடகக் கலைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அந்தக் குடும்பங்களுக்காக இவை மான்யமாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இவர்கள், பிரஹ்லாதா, மார்க்கண்டேயா, உஷா பரிணயம், ருக்மாங்கதா என்ற நான்கு நாட்டியங்களையே வழக்கமாக ஆடி வந்தனர். போன வருஷம் ஹரிச்சந்திராவையும் நடத்த ஆரம்பித்து, இப்போது ஹரிச்சந்திரா மிகப் பிரபல மடைந்துள்ளது. கோவிலின் முன்புறம் இதற்கென்று பிரத்யேகமாய் போடப் பெறும் ஓலைக்கீற்றுக் கொட்டகையில் இரவு சுமார் 9 மணிக்குத் தொடங்கும். இந்த நாட்டிய நாடகங்கள் பொழுது விடியும்வரை நடக்கும். இவர்கன் சுத்த கர்நாடகப் பாணியில் தேர்ந்தவர்களாம் பின்னணி இசை கீதம் பாட பல வருஷங்கள் அதற்கென்றே உழைத்து அநுபவம் பெற்ற நடிகர்கள் வேஷம் தாங்கி வந்து ஆடுவதும் இவைகளை ஆட்டிவைக்கும் கைதேர்ந்த நட்டுவாங்கமும், அத்தனையும் சாஸ்திரீய வரம்புக்கு மீறாமல் இருப்பதைப் பார்க்கும்போது, இத்தனை உயரிய கலையை நாமெல்லாம் அடிக்கடி ரஸிக்க முடியாமல் எங்கோ கிராமப் புறங்களில் ஒளித்து வைத்திருக்கிறார்களே என்று நோன்றுகிறது, நகரங்களுக்கு வந்தால், அதனுடைய பேன்மையும், பரிசுத்தமும் கெட்டுவிடுமோ என்ற பயமோ என்னவோ! சொல்கட்டும், தீர்மானமும், கரடுமுரடாக இல்லாமல் இசையோடு கலந்து அமுதமாக ஒலிக்கும்போது, அதற்கேற்ற அழகான அடவு ஜதிகளை நடிகர்கள் போடுவதும் கண்ணுக்கும், காதுக்கும். கருத்துக்கும்கூட விருந்தாக இருக்கிறது, வெறும் ஸ்ருங்கார ரஸமாகவே முழுக்க முழுக்க இல்லாமல் நவ-ரஸங்களுக்கும் இடமளிக்கும் பாகவதமேளா, காளிதாஸன் சொல்வதைப்போல 'எந்தவித ருசி உள்ளவர்களுக்கும் நாட்டியம் என்ற ஒரே கலை விருந்தளிக்கிறது' என்பதை இவ்வளவு காலம் கடந்தும் மெய்ப்பிக்கிறது. இன்னும் எத்தனை காலம்தான் கடந்தாலும் நாட்டியம் சாஸ்திரீய விதிகளை மட்டும் பின்பற்றி வந்தால், காளிதாஸன் வாக்கை அழியா வாக்காகக் காப்பாற்ற முடியும்.

தற்போது மெலட்டூர் பாலு பாகவநர் பாகவத மேளா மறுமலர்ச்சிக்காக மிக உழைத்து வருகிறார், அவர் பிரபல

மெலட்டூர் நடேச அய்யரிடம் பரதம் பயின்றவர்.

பாகவத மேளாவில் பெண் பாத்திரங்களையும் ஆண்களே தாங்கி நடிக்கின்றனர். யார் நடித்தால் என்ன? எல்லாவற்றையும் தெய்வத் திருப்பணி எனக் கருதி, உத்ஸவ காலங்களில் நியம நிஷ்டையோடு இருக்கும் நடிகர்கள் எந்த வேஷம் தாங்கி நடித்தாலும் அதை திறம்படச்செய்யும்போது, ஆண் பெண்ணாக வெஷம் தாங்கினால்தான் என்ன? அவர்களுக்கு தனிப் புகழும், சம்பாத்யமும் வேண்டுமென்றிருந்தால் கலையை வியாபார நோக்கோடு பார்ப்பார்கள். இந்த நோக்கம் இல்லாதிருக்கும்வரை, அந்தக் கலையில் தெய்வீக மணமும், சாஸ்திரீய சுத்தமும் இருப்பதற்கு கேட்பானேன்!

இவ்வருஷ பாகவதமேளா விழா, மெலட்டூரில் ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் தலைமையில் நடைபெற்றது. "ஹிந்து" பத்திரிகை துணை ஆசிரியர் ஸ்ரீ. ரகுநாதய்யர் விழாவை துவக்கிவைக்க, மே மாதம் 16-ம் தேதி முதல் நான்கு நாட்டிய நாடகங்கள் நடைபெற்றன. பாகவத மேளாவின் மறுமலர்ச்சிக்காக தற்போது ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் மிகவும் உழைத்து வருகிறார். மெலட்டூரில் வெங்கட்ராம சாஸ்திரியார் வசித்து வந்த இடத்தில் அவர் பெயரால் பாகவத மேளாவுக்கென்று நிரந்தரமாக ஒரு தனி கொட்டகை அமைக்க உதவிபுரிய வேண்டும் என்று கலாபிமானிகளை கேட்டுக் கொள்கிறார். ஆதரவு குன்றியிருக்கும் பாகவதமேளா கலையை பழையபடி புகழ் பெறச் செய்ய ரஸிகர்களும், கலாபிமானிகளும் தாராளமாய் உதவி புரிய வேண்டும். —"**நிழல்**"

ராஜா ராணி

நேஷனல் புரொடக்ஷன்ஸ் "ராஜா ராணி" என்ற ஒரு புதுப் படத்தை நியூடோன ஸ்டுடியோவில் படமாக்கத் தொடங்கிவிட்டனர். இப் படத்தின் கதை-வசனத்தை மு. கருணாநிதி எழுதியிருக்கிறார். பீம்ஸிங் டைரெக்ஷனில் உருவாகும் இப்படத்தில் சிவாஜி கணேசன், பத்மினி பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். இவர்கள் இதற்கு அடுத்தபடி "ஒரே வழி"யைப் படமாக்குவார்களாம். அதற்கான கதை—வசனத்தை 'அரங்கண்ணல்' எழுதியுள்ளாராம்.

அ. இ. சினி டெக்னீஷ்யன் மகாநாடு

அகில இந்திய சினி டெக்னீஷ்யன்கள் மகாநாடு பசுபதி சாட்டர்ஜி தலைமையில் பம்பாயில் நடைபெற்றது. மகாநாட்டில், பட வரும்படியில் 81 சதவிகிதமே பிலிம் தயாரிப்பாளருக்குக் கிடைப்பதனால் சினி டெக்னீஷ்யன்கள் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனரென்றும், இக்குறையைப் போக்க இந்திய பிலிம் சம்மேளனத்துடன் ஒத்துழைப்பதென தீர்மானிக்கப் பட்டது. சுயேச்சையாக தொழில் புரியும் டெக்னீஷ்யன்கள், அரைகுறையாகப் பூர்த்தியாகியிருக்கும் படங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடாது என்று மற்றொரு தீர்மானம் நிறைவேறியது. மேல் நாட்டுப் படங்களை 'காப்பி' அடித்து, இந்தியப் படத் தொழிலை குட்டிச் சுவராக்கக் கூடாதென்றும், இந்தியாவுக்கு ஏற்ற சூழ் நிலையிலேயே படங்கள் எடுக்கப்பட வேண்டும் எனவும் பலமாக வற்புறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. படத் தணிக்கையாளர் தொல்லைகளைப் போக்கவும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. திரைப்படக் கதைகளும், கதாசிரியர்களின் உரிமைகளும் தகுந்தபடி பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சினிமாத் தொழில் அபிவிருத்தியையும் சேர்த்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

புதுப் படங்கள்

சென்ற மாதம் 3ம் தேதி லியான் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் என்ற புதிய படக் கம்பெனியார் "ராஜ்கமல்" என்ற தங்கள் முதல் படத்தின் ஆரம்ப பூஜையை நடத்தினார்கள். பல புது முகங்கள் நடிக்கும் இப்படத்தை எஸ். கே. சாரி டைரெக்ட் செய்வாரென்று தெரிகிறது.

சென்ற மாதம் 21ம் தேதி, ரேவதி ஸ்டுடியோவில் "தங்கச் சுரங்கம்" என்ற தமிழ்ப் படத்தின் ஆரம்ப பூஜை நடைபெற்றது. இப்படம் ஏ. ஆர். எஸ். புரொடக்ஷன்ஸ், ஸ்ரீ சோணய்யா கம்பெனியின் கூட்டுத் தயாரிப்பாக இருக்கும். படத்தில் சிவாஜி கணேசன் பாலய்யா ஆகியோர் நடிப்பார்களாம்.

"மாங்கல்யம்" படத்தைத் தயாரித்த எம். ஏ. வி. பிக்சர்ஸார் அடுத்தபடி "பெண்ணரசி" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள்.

"உமா" பத்திரிகையின் முதல் ஆண்டு பூர்த்தி விழா மே மாதம் 1ந் தேதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஸ்ரீமதிகள் சூலமங்கலம் சகோதரிகள் இன்னிசை விருந்தளித்தார்கள். இவ்விழாவிற்கு ஸ்ரீ. 'கல்கி' அவர்கள் தலைமை வகித்து சிறப்பித்தார்.



"கற்கோட்டை"
தமிழ்ப் படத்தில்.

வாழ்க்கை வர்ணனை

எந்த வீட்டிலும் சரி; ஒரு குழந்தை பிறந்துவிட்டால் உடனே செய்யப்படும் காரியம் ஒன்று உண்டு. குழந்தையின் தகப்பனுரோ, உறவினரோ குடுகுடுவென்று ஒரு ஜோஸியனைத் தேடிச் செல்லுவார். குழந்தை பிறந்த நேரத்தை அவனிடம் கூறி, குழந்தையின் எதிர்காலத்தைத் தெரிந்து சொல்லும்படி கேட்பார்.

"இந்தக் குழந்தை பிரமாதமான பெயரெடுக்கும்", "பெரிய உத்தியோகம் செய்வான்", "ஏராளமான தனம் சம்பாதிப்பான்", "தகப்பனுக்கு (அல்லது மாமனுக்கு) ஆகாது"—என்று இது போல எதை எதையெல்லாமோ சொல்லுவான். கெட்ட பலன்களைச் சொல்லும் போது, கூடவே ஏதாவது பரிகாரத்தையும் சொல்லி வைப்பான். இதைக் கேட்கும் குழந்தையின் பெற்ருேர் மனக் கலவரம் அடைந்து பரிகாரங்களைச் செய்வ

தும் உண்டு. ஆனல், நல்ல பலன்களைக் கேட்டவுடன் பெற்றோர்கள் "அப்பாடா" என்று நீண்ட பெருமூச்சு விடுவார்கள். ஏதோ மனதில் இருந்த பெரும் சுமை இறக்கப்பட்டு விட்டது போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படும். கொஞ்ச காலம் வரையில் குழந்தையைப் பார்க்க வருவோரிட மெல்லாம் பெற்றோர் ஜோஸியன் கூறியதைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பேச்சுக் குறையும். அடுத்த குழந்தை பிறந்ததும் இந்



''கற்கோ[illegible]டை'' தமிழ்ப் படத்தில்கெம்ப்[illegible]ராஜ[illegible]டன்.

மேலே : ''அந்தா மன வான்ளு''.

இடதுபுறம் : ''லக்ஷ்மி'' —ஆகிய தெலுங்குப் படங்களில்.

தப் பேச்சு அடியோடு மறக்கப்பட்டு விடும்; அந்த புதுக் குழந்தையைப் பற்றிய பேச்சு ஆரம்பமாகி விடும்!

ஆனால், சமீபத்தில் தமிழ்ப் பட உலகில் பிரவேசித்துப் பிரபலம் அடையத் தொடங்கி யிருக்கும் ஆந்திர — தமிழ் நடிகை கிருஷ்ண குமாரியின் தாயார் அந்த வழக்கத்திற்கு ஒரு விதிவிலக்கு. கிருஷ்ண குமாரி பிறப்பதற்கு மருத்துவம் பார்த்த நர்ஸ் யதேச்சையாகக் கூறிய 'ஜோஸிய'த்தை அவர் இன்று கூட மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்! "இந்தக் குழந்தையின் இடுப்பைக் கவனிக்கையில், இதற்கு டான்ஸ் நன்றாக வரும்" என்று கூறினாளாம் அந்த நர்ஸ். இந்த ஆசி மொழிகளை தாயார் ஞாபகத்தில் வைத்து இதுவரை காத்து வந்தது பயனின்றிப் போகவில்லை. இன்றைய தினம் கிருஷ்ண குமாரி (நர்ஸின் ஜோஸியப்படியே) ஒரு நடன சினிமா நக்ஷத்திரமாக விளங்குகிறார் அல்லவா?

கிருஷ்ணகுமாரி 1934ம் வருஷம் மார்ச் மாதம் 6ந் தேதியன்று மேற்கு வங்காளத்திலுள்ள நைஹட்டி என்ற ஊரில் ஒரு கண்யமிக்க உயர்தர குடும்பத்தில் பிறந்தவர். ஆனால், அவரது சொந்த ஊர் ஆந்திர தேசத்திலுள்ள ராஜ மஹேந்திரபுரம்.

கிருஷ்ணகுமாரியின் தகப்பனாரான தெக்குவல்லா வெங்காஜி காகித உற்பத்தி பற்றிய விஷயங்களை இங்கிலாந்து சென்று, ஆராய்ச்சியுடன் கற்றுவந்த நிபுணர். கிருஷ்ணகுமாரி பிறந்தபோது அவர் மேற்கு வங்காளத்திலுள்ள ஆண்ட்ரு யூல் பேப்பர் மில்ஸில் ஒரு பெரிய உத்தியோகத்திலிருந்து வந்தார்.

கிருஷ்ணகுமாரி பிறந்த மறு வருஷத்தில் வெங்காஜி நைஹட்டியிலிருந்து ராஜமஹேந்திரபுரத்திற்கு வந்து ஆந்திரா பேப்பர் மில்ஸில் ஜெனரல் மானேஜர் பதவி ஏற்றார்.

மூன்று வருஷ காலத்திற்குப் பிறகு (1938ல்) அவர் இந்த உத்தியோகத்தை உதறி விட்டு, பீஹாரிலுள்ள டால்மியா பேப்பர் மில்ஸில் உத்தியோகம் பெற்றார். 1941ல் வெங்காஜி இந்த உத்தியோகத்தையும் விட்டுவிட்டு, ராஜமஹேந்திரபுரத்திற்கு வந்து தங்கினார். 1943ம் வருஷத்தில் அவர் சென்னையில் சர்க்கா

"விடுதலை" தமிழ்ப் படத்தில்.

ரமணா ரெட்டியாருடன். "பிச்சி புல்லய்யா" தெலுங்குப் படத்தில்

ரின் காகித நிபுணர் உத்தியோகம் பெற்ருர். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வெங்காஜி இதையும் விட்டு, புது உத்தியோகம் காரணமாக அஸாமுக்குச் சென்ருர். கடைசியில், 1949ம் வருஷத்தில்தான் அவர் சென்னைக்கு வந்து நிரந்தரமாகக் குடியேறினர். வெங்காஜி சென்ற இடங்களுக்கெல்லாம் அவரது குடும்பமும் (கிருஷ்ணகுமாரியும்) கூடவே சென்று

''மருதலு பெள்ளி'' தெலுங்குப்படத்தில்.

ஜுபிடரின் ''மனிதன்'' படத்தில்.

விட்டு, கடைசியில், சென்னை வாசிகளாக ஆகியிருக்கின்றனர். இதனல் கிருஷ்ணகுமாரிக்கு பதினைந்து வயது நிறைவதற்குள்ளாகவே பல மாகாணங்களுக்குச் செல்லவும், பலவித பாஷையினருடன் பேசவும், பழகவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

கிருஷ்ணகுமாரி முதன் முதலாக ராஜமஹேந்திரபுரத்திலுள்ள கான்வென்ட் பள்ளியில் சேர்ந்தார். ஒரு வருஷம் அங்கு

ஜுபிடரின் ''அழகி'' தமிழ்ப் படத்தில்.

''பிரியராலு'' தெலுங்குப் படத்தில்.

படித்த பின்னர் சென்னைக்கு வந்து, ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் பள்ளியில் முதல் பாரத்தில் சேர்ந்தார். பிறகு ராஜ மஹேந்திர புரத்திற்கே சென்று நான்காவது பாரத்தைப் படித்து முடித்தார். பிறகு குடும்பம் சென்னைக்கே வந்ததால் கிருஷ்ணகுமாரி ஆந்திர மஹில சபாவில் சேர்ந்து படிக்கலானர். ஆனல், அவருக்கு வயது குறைவாயிருந்ததனல் காசி சர்வகலாசாலைப் பரீக்ஷைக்கு அவர் எடுத்துக் கொள்ளப்பட வில்லையாம்.

மூன்று வருஷங்களுக்குப் பிறகு தகப்பனருடன் கூட கிருஷ்ணகுமாரி அஸாமுக்குச் சென்ருர். அங்கு அவர் கௌஹாத்தியில் படித்து மெட்ரிக் பரீக்ஷையில் தேறி, இன்டர் வகுப்பிலும் சேர்ந்தார். ஆனல், பூகம்பம் பற்றிய பயம் ஏற்படவே கிருஷ்ணகுமாரி படிப்பை

(தொடர்ச்சி 67ம் பக்கம்)

மேலே : 1. கற்கோட்டை 2. லக்ஷ்மி ஆகிய படங்களில் இடது புறம் : ''பள்ளி படசாலா'' தெலுங்குப் படத்தில்.

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் ஆகிய கலைகள் சம்பந்தமாக உங்களுக்குள்ள சந்தேகங்களைத் தீர்ப்பதற்கே இந்தப் பகுதி ஏற்பட்டிருக்கிறது. யாருடைய மனமும் நோகாதபடி தமாஷாகவே பதிலளித்து, மேற்சொன்ன கலைகளைச் சீர்திருத்துவதே என்னுடைய நோக்கமாகும்.

ஏ. தனபால் (நயினாதீவு, இலங்கை)

நாகேஸ்வர ராவ் எந்தப் படத்தில் அதி திறமையாக நடித்திருக்கிறார்?

மற்றெல்லாப் படங்களையும்விட நாகேஸ்வர ராவ் "தேவதாஸ்" படத்தில்தான் அற்புதமாய் நடித்திருக்கிறார்.

துரை. முருகேசன் (காரமடை)

ஒரு படம் வெளியாகி எவ்வளவு காலத்திற்குப் பிறகு மறு 'சர்டிபிகேட்' வாங்க வேண்டும்.

ஒருமுறை வழங்கப்படும் ஸர்டிபிகேட்டிற்கு ஐந்து வருஷ காலம் ஜீவன் உண்டு. அதன்பின் புது ஸர்டிபிகேட் பெறவேண்டும்.

ஏ.ஸி.எஸ். அஸன் (தலாவ, இலங்கை)

இலங்கையிலிருந்து இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வருபவர்களுக்கு சென்னையில் உள்ள சினிமா ஸ்டுடியோக்களைப் பார்ப்பதற்கு அனுமதி கிடைக்குமா?

"ஜெமினி ஸ்டுடியோ ஒரு காட்சிசாலை அல்ல"—என்று அந்த ஸ்டுடியோவின் வரவேற்புக் கூடத்தில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இதே போலத்தான் மற்ற ஸ்டுடியோக்களும் வேடிக்கை பார்ப்பதற்கான காட்சிசாலைகள் அல்ல. உங்களுக்கு ஸ்டுடியோ பார்ப்பது தமாஷான விஷயம். ஆனால் அவர்களுக்கோ இது தொல்லைதரும் விஷயம் என்பதைக் கவனியும். ஏதோ தாட்சண்யத்திற்காக அவர்கள் வேண்டியவர்களுக்கு மட்டும் அனுமதி அளித்து வருகிறார்கள்.

வி. பழனிவேலு (வாகனேரி)

டி. ஆர். ராஜகுமாரிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவர் என்ன நிறம் உடையவர்?

ராஜகுமாரி விவாஹம் செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அவரது நிறம் கருப்பு. ஆனால், 'கருப்பாய் இருப்பதானல்தான் கல்யாணமாகவில்லை போலிருக்கிறது' என்று தவறுக நினைத்துவிடப் போகிறீர்!

கோ. பெ. சாமி (அரியலூர்)

"ஔவையாரு"க்குப் பிறகு கே. பி. சுந்தராம்பாள் ஏதேனும் படத்தில் நடிக்கிறாரா?

இல்லை; அதுபற்றிய பேச்சைக்கூடக் காணோம்.

எஸ். நாகூர் (கொழும்பு)

பி. லீலா, பி. ஏ. பெரியநாயகி, டி. எஸ். பகவதி ஆகிய மூவரில் யாருடைய குரல் இனிய குரல்?

மூவரும் இனிய குரல் பெற்றவர்களே—ஆனல், நான் பகவதியின் குரலுக்கே முதல் ஸ்தானம் அளிக்க விரும்புகிறேன்.

வி. கந்தசாமி (ஆனையிறவு)

நேயர்கள் கேட்கும் கேள்விகள் எல்லாவற்றுக்குமே பதில் அளிக்கிறீர்களா; இல்லாவிடில் சிறந்த கேள்விகளுக்கு மட்டுமே பதில் அளிக்கிறீர்களா?

எனக்கு வரும் கேள்விகள் எல்லாவற்றுக்குமே பதில் அளிக்கத் துணிந்தால் நம் "குண்டூசி"யில் கேள்விகளைத் தவிர வேறு விஷயங்களைப் பிரசுரிக்கவே முடியாது.

கே. சின்னையா (ஆனையிறவு)

குண்டூசியாரே! தாங்கள் ஒரு பிரபல சினிமா நக்ஷத்திரத்தைத் திருமணம் செய்து

கொள்ளப்போவதாய் வதந்தி உலவுகிறதே. இது உண்மையா?

வியாபாரம் செய்வதற்கு வேறு சரக்கு இல்லாதவர்கள் வதந்திகளை யாவது 'வியாபாரம்' செய்து பார்க்கிருர்கள்! நான் தப்பித் தவறி அந்தக் 'கூசாத் தூக்கும்' தொழிலுக்கு கூசாமற் போய் விடுவேனே என்று நீர் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம்!

ஏ. ஜான் (ஸ்ரீவைகுண்டம்)

''மனிதன்'' படத்தில் கற்பிழந்த தன் மனைவியை டாக்டர் மன்னிக்கிருரே. இது போல் ஒவ்வொருவரும் மன்னிக்க நேர்ந்தால் தமிழ் நாட்டுப் பண்பு என்னவாகும்?

வேறு என்னவாகிவிடும்! ''தமிழ் நாட்டுப் பண்பு'' என்பதற்கு ''கற்பிழந்த மனைவிக்கு மன்னிப்பளிப்பது'' என்ற அர்த்தம் அகராதியில் சேர்க்கப்பட்டு விடும்! அவ்வளவு தானே?

ஆர். எஸ். சுந்தரராஜ ராவ் (மாயனூர்)

''ஆனந்த விகடனி''ல் கதை எழுதும் ''தேவன்'' கே. ஜே. மஹாதேவனா? அல்லது ஆர். மஹாதேவனா?

ஆர். மஹாதேவன் தான் கதை எழுதுபவர். ஆனல், கே. ஜே. மஹாதேவன் கதை அளப்பதில் தேர்ந்தவர்; இவர் ஒரு பிலிம் டைரெக்டர்.

கே. "சுப்பய்யா" (ரிஷபம்)

நம் நடிகர்கள தயாரிக்கும் படங்கள் ஆமை வேகத்தில் தயாராகி, பாதியிலேயே தூங்கிவிடுவதேன்?

அவர்கள் முதலில் தம்மிடமுள்ள பணம், உத்ஸாகம், எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு தைரியமாய் படம் எடுக்க ''முயல்''கிருர்கள். பிறகு அது நாளாவட்டத்தில் ''ஆமை'' வேகத்திற்குக் குறைந்துவிடுகிறது. முடிவில் அவர்களிடம் பல இல்+''ஆமை''கள் ஒன்று சேர்ந்து விடுவதால், அவர்கள் ஆமைபோல் ஒடுங்கிவிடுகின்றனர்.

டி.எம். பாலகிருஷ்ணன் (சென்னை-15)

குண்டுசியாரே! நீர் ''பராசக்தி'' படத்தைத் தாக்கியும், ''ஔவையாரை'' புகழ்ந்தும் எழுதியிருக்கிறீர். ஆதலால், உங்கள் உள்ளம் 'ஓர வஞ்சனை உடையது' என்று நான் தயங்காமல் குற்றம் சாட்டுகிறேன்.



ஜெம்பனு-நந்தி தயாரிப்பான '' குடும்பம் '' தமிழப் படத்தில் டி. எஸ். துரைராஜ். வி. கே. சரஸவதி இவர்களுடன் இந்தப் புது நடிகரையும் சந்திக்கலாம்.

ஜெயசக்தி வெளியீடான "நல்ல காலம்' தமிழ்ப் படத்தில் பேபி சந்தோஷ் நடனம் ஆடியிருக்கிருர்.

உம்முடைய பகுத்தறிவு இவ்வளவு மழுங்கிப் போயிருப்பதற்கு நான் வருத்தப்படவே செய்கிறேன். நீர் "குண்டூசி" யை கவனமாய் படித்திராஞல் நான் 'ஒரு வஞ்சனையும் இல்லாத' உள்ளம் உடையவன் என்பதை நீரே தெரிந்து கொள்ளுவீர்.

டி. எஸ். வெங்கடராமன் (தஞ்சாவூர்)

ஜயந்தி புரடக்ஷன்ஸின் உரிமையாளர் (கள்) யார்?

காமெடியன் சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், அப்துல் காதர், ஏ. டி. கிருஷ்ணசாமி ஆகியோர்.

கலாதேவி (ஸ்ரீவைகுண்டம்)

கண்டசாலா இறந்து விட்டதாக என் சிநேகிதி ஒருத்தி கூறுகிருள். அது உண்மை தானு?

உயிருடனிருக்கும் ஒருவரை வெகு சுலபமாக உம் சிநேகிதி "சாகடித்து" விட்டாரே! எங்கே, அவரிடம் சொல்லி இறந்துபோன சின்னப்பாவை உயிர்ப்பிக்கச் செய்யும் பார்க்கலாம்!

ஸி. கிருஷ்ணஸ்வாமி (கவுண்டன் குளம்)

'குண்டூசி'யில் வெளிவரும் வர்ணப் படங்களில் "44" போன்ற ஒரு அடையாளம் காணப்படுகிறதே. இதன் அர்த்தம் என்ன?

அது "N44" அல்ல; "NAG" என்ற ஆங்கில எழுத்துக்களே அவை. போட்டோப் படங்களுக்கு வர்ணம் பூசுவதில் இந்தியா பூராவிலுமே நிகரற்றவரான பிரபல சித்திரக்காரர், "நாகேஸ்வர ராவ்" அவர்களைக் குறிப்பிடுபவை அவை.

கே. கே. முத்துசாமி (பெரியகுளத்துப் பாளையம்)

'சௌகார்' ஜானகிக்கு மணமாகி விட்டதா?

சாவதானமாய் கேட்கிறீரே! மணமாகி மக்களைக்கூடப் பெற்றிருக்கிருர் அவர்.

என். தங்கவேல் (அமுக்குவத்தை, இலங்கை)

பாலய்யாவுக்கு திருமணம் ஆகி விட்டதா? இல்லையென்ருல் எப்பொழுது நடைபெறும்?

பாலய்யா விஷயத்தில் ஏதாவது நடைபெறும்—என்று பேசுவதாக இருந்தால் அது அவருடைய மூன்றும் கல்யாணத்தைப் பற்றியதாகத்தான் இருக்கவேண்டும்! அவருக்கு முன்பே இரு மனைவியர் உள்ளனர்!

எம். எஸ். பழனி (கல்லிடைக் குறிச்சி)

வாழ்க்கை என்னும் படகில் தலைவனும் தலைவியும் அமர்ந்து அன்பு எனும் கடலில் மிதந்து செல்லும்போது துன்பம் என்னும் புயல் வீசிஞல் அவர்கள் என்ன செய்வார்கள்?

உடனே தலைவியை ஒரு லேடி டாக்டரிடம் அழைத்துச் செல்லுவான் தலைவன்!

பி. எஸ். பழனிவேலு (மஸ்கேலியா)

"கைதி" படத்தில் நடித்த மதுரை மீனட்சி தற்போது ஏதேனும் படத்தில் நடிக்கிறரா?

சினிமா உலகம் "கைதி"க்குப் பின் அவருக்கு விடுதலை அளித்திருக்கிறது!

மனேகரி (சிங்கப்பூர்)

மனேகர், என். டி. ராமராவ் ஆகிய இருவருள் அழகிலும், நடிப்பிலும் சிறந்தவர் யார்?

மனேஹர் என்று நான் கூறுகிறேன்.

* * *

பத்மினியின் விலாஸம் என்ன?

நடன பத்மினி, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை.

ஜி. ஆர். பிரேமா (குடவாசல்)

எம். எஸ் சுப்புலக்ஷ்மி, எம். கே. டி. பாகவதர், இவர்கள் ஜெமினியில் நடிக்கப் போவதாக முன்பு செய்தி உலவியதே? அது என்னவாயிற்று?

எப்படியோ இதுபோல் ஒரு வதந்தி கிளம்பியது உண்மைதான். ஆனல் இது வெறும் வதந்தியாகவே வதங்கி, மறைந்துவிட்டது.

பா. மனுவேல்
(கோணுல்விளை, இலங்கை)

'ஔவை' புகழ் குசல குமாரியின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாகச் சொல்லவும்.

பிரபல டி. ஆர். ராஜகுமாரியின், ஒன்றுவிட்ட சகோதரியான மாஜி நடிகை டி. எஸ். தமயந்தியின் குமாரத்தியே குசலகுமாரி. சாஸ்திர முறைப்படி நடனம் பயின்றுள்ள குசலகுமாரி முதலில் தோன்றிய படம் "மஹாமாயா", பிறகு "பிரபாவதி", "லைலா மஜ்னு", "கிருஷ்ணபக்தி", "மணமகள்", "வாழப்பிறந்தவள்", "பராசக்தி", "ஔவையார்" ஆகிய படங்களில் நடித்திருக்கிருர். தற்போது "கூண்டுக்கிளி", "போன மச்சான் திரும்பி வந்தான்...." ஆகிய இரு படங்களில் நடித்து வருகிருர்; "நண்பனி"ல் நடனம் ஆடுகிருர்.

ஆர். எஸ். மணி (சென்னை)

வரண்ட என் உள்ளத்துக்கு சாந்தி ஏற்படவேண்டுமானல் ஆங்கிலப் படத்தைப் பார்க்க வேண்டுமா? அல்லது தமிழ்ப் படத்தைப் பார்க்க வேண்டுமா?

உமக்கு உள்ளச் சாந்தி அவசியமானல் நீர் உண்மையில் சினிமாப் படமே பார்க்காமலிருப்பதே சரி.

எம். அப்துல் சுபான் (திருச்சி)

லலிதா பவர், கண்ணும்பா, சாந்தகுமாரி இம்மூவரில் சோக நடிப்பில் சிறந்தவர் யார்?

குழந்தைகளுக்கான பாடல்கள் அடங்கிய ஸ்ரீ. அழ. வள்ளியப்பாவின் ''மலரும் உள்ளம்'' என்ற நூலின் வெளியீட்டு விழா மே மாதம் 8ந் தேதியன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவை கல்வி மந்திரி ஸி. சுப்ரமண்யம் ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ. கல்கி அவர்கள் தலைமை வகித்தார். கல்வி மந்திரி மேற்படி நூலை ஒரு சிறுமிக்கு பரிசளிப்பதையும், நூலாசிரியர் அழ. வள்ளியப்பாவையும் மேலே படத்தில் காணலாம்.

சோக நடிப்பிற்கென்றே பிறந்தவர் கண்ணாம்பா தான்.

எஸ். சின்னராஜு (மூலத்துரை)

''அன்பு'' என்ற தமிழ்ப் படத்தில் முதலிலிருந்து கடைசி வரையில் ''ஓக்கே'' என்ற ஆங்கிலப் பதத்தை அடிக்கடி சொல்லுகிறார்களே, இது எதற்காக?

நம் பட முதலாளிகள் தான் எதையாவது ''கொலை'' செய்வதில் மிக இஷ்டமுடையவர்கள் ஆயிற்றே. ஆனால், இப் படமுதலாளி தம் கொலைக்கு ஒரு ஆங்கிலப் பதத்தை எடுத்துக் கொண்டது அசாத்தியமான தேசீயப் பற்றினால் அல்லவென்பது எனக்குத் தெரியும்.

எஸ். ரங்கசாமி (மூலத்துரை)

திரைக் கதை, வசனம் முதலியவைகளை அனுப்புவதானால் டைரெக்டருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது படமுதலாளிக்கு அனுப்பவேண்டுமா?

பட முதலாளிகளுக்கு நல்ல கதைகள் அவசியமாயிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், வெளியிலிருந்து வந்து சேரும் கதைகளைப் படித்துப் பார்த்து பொறுக்கி எடுக்கும் விஷயத்தில் அவர்கள் தகுந்த அக்கரை காட்டுவதில்லை. தகுந்த அக்கரை காட்டும் சிலரோ கதைகளின் சாராம்சத்தைக் குறித்து வைத்துக்கொண்டு, அதை வேறு பெயருடன் படமாகத் தயாரிக்கத் துணிந்து விடுகின்றனர்!

பொன்னுசாமி (ராஜகிரி)

பி. பானுமதியின் வீட்டு விலாசத்தைத் தெரிவிக்கவும்.

பானுமதி, மலோனி ரோடு, தியாகராய நகர், சென்னை-17.—என்று எழுதும். நேரில் போனீரோ, கூர்க்கா மூர்க்கத்தனமாய் பிடித்துத் தள்ளுவான்.

டி.எம். பாலகிருஷ்ணன் (சென்னை-15)

நான் ஒரு துண்டுப் படம் தயாரிக்க நினைக்கிறேன். அதில் உங்களையும் கே. எஸ். அங்கமுத்துவையும் காமிக் ஜோடியாகச் சேர்த்து. 'அங்கமுத்துவிடம் நீங்கள் அடி

வாங்குவதாக' ஒரு காட்சியை சேர்க்கலாம் என்பது என் எண்ணம். உங்களுக்குச் சம்மதமா?

எனக்குப் பூரண சம்மதமே. ஆனால் திட்டமிடும் படத்தை நீர் **துண்டுப்** படமாகத் தயாரித்து விடக்கூடிய "சிறிய" பிரகிருதிகள் அல்ல நாங்கள்! இன்னொரு விஷயம். அங்கமுத்து என்னிடம் அசாத்தியமான மரியாதையும் அன்பும் கொண்டவர். ஆதலால், நீர் ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுத்தாலும் என்னை அடிப்பதை அவர் மனதால்கூட நினைக்கமாட்டார்; தெரிந்ததா! ஐயா, வாய்ப்பந்தல் வீரரே! நீர் படம் எடுப்பது இருக்கட்டும்; உம்மிடம் காப்பி சாப்பிடக் காசு இருக்கிறதா என்பதை முதலில் கூறும்!

எஸ். நாகராஜன் (பட்டுகுடி)

நவாப் ராஜமாணிக்கம் தற்போது எங்கிருக்கிருர்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

"நவாப்" தற்போது சென்னையில் கோலாகலமாய் "தர்பார்" நடத்தி வருகிருர். விலாஸம்:—c/o காங்கிரஸ் மைதானம், தேனம்பேட்டை, சென்னை.

டி. டி. தனபால் (தேவலாலி)

வேறு ஆடவனோடு காதல் கட்டத்தில் கொஞ்சிக் குலவி நடிக்கும்போது அந்த நடிகையின் கணவன் என்ன நினைப்பான்?

"இந்தக் காதல் நடிப்பை அவள் உண்மையாகவே ஆக்கிக்கொண்டு, நமக்குச் சீட்டுக் கிழித்துவிட்டால் என்ன செய்வது" என்றுதான்!

என். பி. எல். ராமநாதன் (கொழும்பு)

பிற பாஷையிலிருந்து முதன் முதலாக 'டப்' செய்யப்பட்ட படம் எது!

பிரகதி ஸ்டுடியோ வெளியிட்ட (கன்னட) தமிழ் "ஹரிச்சந்திரா" படம்தான்.

கே. ஸி. கிருஷ்ணஸ்வாமி (கும்பகோணம்)

நம் நடிகைகளின் சோக நடிப்பைக் காணும்போது உமக்கு கண்ணில் நீர் ததும்புவதுண்டா?

உண்டு; ஆனால் அது அவர்கள் வெளியிடும் சோக உணர்ச்சிக்காக அல்ல; சோக உணர்ச்சியை வெளியிட முடியாமல் அவர்கள் தவிப்பதற்காக!

குளிர்ச்சிக்கும் கூந்தல் வளர்ச்சிக்கும் சிறந்தது.

பிரசிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்

முகத்தின் பருக்களை அகற்றி அழகை அளிப்பது.

பிரசிடெண்ட் ஸ்னே

நறு மணத்துடன் கவர்ச்சியைத் தருவது.

மலபார் பொக்கே டால்கம் பவுடர்

தயாரிப்பவர்கள்:

RATHOD TRADING CO. MADRAS. I.

சினிமாவுக்கு நல்ல காலம்

சினிமாப் பட உற்பத்தி ஆலோசனை ஸ்தாபனம், பிலிம் இன்ஸ்டிடியூட், தேசிய பிலிம் போர்டு ஆகியவைகளை நிறுவ இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர். படத்தொழில் விசாரணைக் கமிட்டியின் சிபாரிசுகள் மீது இந்திய சர்க்கார் செய்துள்ள முடிவுகளை சென்ற மாதம் 18-ம் தேதி பார்லிமெண்டின் இரு சபைகளிலும் அறிவிக்கப்பட்டன.

கமிட்டியின் சிபார்சுகளில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. சில சிபாரிசுகள் சில மாறுதல்களுடன் ஏற்கப்பட்டுள்ளன: மற்றும் பல ஏற்கெனவே அமுலுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டன என்று அவ்வறிக்கை கூறுகிறது. சினிமாவை தேசிய கலாசாரம், கல்வி, ஆரோக்கியமான பொழுது போக்கு ஆகியவைகளுக்கேற்ற சாதனமாக அபிவிருத்தி செய்ய ஒரு தேசிய பிலிம் போர்டு நிறுவப்படும். இந்த போர்டு சினிமா உற்பத்தி ஆலோசனை ஸ்தாபனம், பிலிம் இன்ஸ்டியூட், இப்போதுள்ள மூன்று பிரதேச தணிக்கைக் காரியாலங்கள் ஆகியவைகளின் வேலைகளுக்கு வழிகாட்டி, மேற்பார்வையிட்டு வரும்.

மத்திய பிலிம் தணிக்கை போர்டின் அலுவல்களை இந்த தேசிய பிலிம் போர்டு மேற்கொள்ளும் பட உற்பத்தி ஆலோசனை ஸ்தாபனம், சினிமாக் கதை வசனங்கள் பற்றி யோசனைகள் கூறுவதுடன் ஸினேரியோ, நடிப்பு, செலவு, மதிப்பு, போன்ற படத் தயாரிப்பின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் உற்பத்தியாளருக்கு யோசனைகள் கூற வழிகாட்டும். லைப்ரரியும், ஆராய்ச்சி சர்வீஸும் இருக்கும்.

பிலிம் இன்ஸ்டிடியூட்டானது, டைரெக்ஷன், போட்டோ கிராபி, சவுண்ட் எஞ்சினீயரிங், எடிட்டிங் முதலிய நுணுக்கத் துறைகளில் பயிற்சி அளிக்கும். மாணவர்கள் நேரில் சென்று கற்றுக்கொள்ள வசதியாக ஒரு சிறு ஸ்டுடியோ இருக்கும்.

பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக ஒரு சட்ட பூர்வமான பிலிம் கவுன்சில் நிறுவ வேண்டுமென்றும் கமிட்டி செய்துள்ள சிபாரிசை இப்போதைக்கு வேண்டாமென்று சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். இன்றுள்ள நிலைமையில் இஷ்டபூர்வமான ஒத்துழைப்புக்கு படத்தொழில் தானகவே ஒரு பிலிம் கவுன்ஸிலை அமைத்துக்கொள்ள முயற்சிப்பதே நல்லது என்று சர்க்கார் கருதுகின்றனர். இம் மாதிரி முயற்சிக்கு சர்க்கார் ஊக்கமளிக்கும்.

அபிவிருத்தித் திட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்களுக்கான செலவுகளை முதலில் கவனிக்கவேண்டியிருப்பதால், நஷ்டங்கள் உண்டாகக் கூடிய பிலிம் நிதிக் கார்ப்பரேஷனுக்கு இப்போது நிதி ஒதுக்ககூடிய நிலைமையில் சர்க்கார் இல்லை என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பரிசுகள் விஷயத்தில், கமிட்டி சிபார்சை சிறிது மாறுதலுடன் இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தற்சமயம் சிறந்த நடிப்பு, சிறந்த நுட்பவேலை முதலியவைகளுக்காகக் கொடுக்கப்படும் "துறைப் பரிசு"களை சர்க்கார் விட்டு விடுவதாய் இல்லை. சிறந்த முழுநீளப் படத்துக்கு ஒன்றும், சிறந்த டாக்குமெண்டரி படத்துக்கு ஒன்றும், சிறந்த குழந்தைகள் படத்துக்கு ஒன்றுமாக அகில இந்தியப் பரிசுகள் வழங்கப்படும்.

தமாஷா வரி விகிதங்களும் அதை வசூலிக்கும் முறையும் ஒரே விதமாய் இருக்க வேண்டுமென்று கமிட்டியார் சிபார்சு செய்திருக்கிறார்கள். இது ராஜ்யங்களைப் பொறுத்த விஷயம். ராஜ்ய சர்க்கார்களோடு அபிப்பிராயக் கலப்பு நடந்திருக்கிறது. இந்த விஷயம் தற்சமயம் வரி விசாரணைக் கமிஷனின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

கச்சா பிலிம் உற்பத்தி சம்பந்தமாக கமிட்டியார் சில சிபார்சுகள் செய்திருக்கிறார்கள். அயல்நாட்டுக் கம்பெனி ஒன்றோடு சேர்ந்து மைசூரில் கச்சா பிலிம் உற்பத்திக்காகத் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது. ஐந்து வருஷத் திட்டத்தில் இதை சர்க்கார் மறுபடியும் பரிசீலனை செய்யும்.

[தொடர்ச்சி 79ம் பக்கத்தில்]

ஏவி. எம்.மின் மகோன்னதத் தயாரிப்பான
''பெண்'' தமிழ்ப் படத்தில் வைஜயந்தி
மாலாவை விரைவில் சந்திக்கப் போகிறீர்கள்

நண்பர்கள் உங்கள் வீட்டுக்கு வரும்போது...



நினைவில் இருக்கட்டும்

உடாரி விடமின் சத்து சேர்க்கப்பட்ட பிரிட்டானியா பிஸ்கோத்துகள், இளைஞர், முதியோர் யாவராலும் விரும்பப்படுகிறது.

சிறந்த பிஸ்கோத்துகள்

பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

'பிக்ஸ்' தினுசை ருசி பாருங்கள். கரகரப்பாகவும், உப்பிட்டு ருசிகரமாயுள்ள இந்த பிஸ்கோத்துகளை விரும்புவீர்கள்.

BBX-1 TAMIL

துணிப்புல்

வெட்டுக்கிளி

ஏப்ரல் மாதம் என்றால் "முட்டாள் தினம்" போலவே மற்றொரு விஷயமும் என் நினைவுக்கு வருகிறது. அதுதான் அந்த பதிமூன்று என்ற நம்பர். இந்த பதிமூன்றாம் நம்பர் நம் படமுதலாளிகளில் பலருக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. மேனாட்டவர் பேய் பிசாசுகளைக் கண்டு நடுங்குவதையும் விட இந்த பதிமூன்றாம் நம்பருக்குத்தான் அதிகம் அஞ்சுகிறார்கள். அதை அபசகுன எண்ணாகக் கருதி அதை ஒதுக்கித் தள்ளுகின்றனர். மேனாட்டரின் நாகரிகப் பாதையில்—ரோதையில்—சென்று பழகிய நம்மவர்களில் பலரும்கூட அந்த எண்ணை வெறுப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லைதான்.

*   *   *

அவர்கள் தன்னை வெறுப்பதற்குப் பழிவாங்குவதுபோல அந்த எண்ணும் அவர்களை ஆட்டி அலைக்கழிக்கிறது. எப்படித் தெரியுமா? நம் படத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், ஒரு புதிய பட ஆரம்ப பூஜை நடத்த, அல்லது தாங்கள் தயாரித்துள்ள படத்தைத் திரையிட, தை மாதப் பிறப்பையோ, அல்லது தமிழ் வருஷப் பிறப்பையோதான் குறிப்பிடுகிறார்கள். ஆனால், மேற்படி தினங்களோ—அநேகமாக—முறையே ஜனவரி மாதம் 13ம் தேதியும், ஏப்ரல் மாதம் 13ம் தேதியும் வந்து சேர்கின்றன. அந்த மாதம் ஒரு நாள் முன்போ, அல்லது ஒரு நாள் பின்னரோ பிறக்கக் கூடாதா? அந்த வருஷம்தான் ஒரு நாள் முன்பின்னாகத்தான் மலரக் கூடாதா? இப்படியா நம் பட முதலாளிகளை சோதனை செய்யவேண்டும். இந்த இரு மாதங்களில் பதிமூன்றாம் தேதிகளையும் கண்டு தயங்கிவிடாமல் நல்ல காரியங்களைச் செய்யத்தான் செய்கிறார்கள். "மாதப் பிறப்பு, நிறைந்த நாள்" என்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணம். இனி, நம் படத்துறையில் இந்த பதிமூன்றாம் நம்பர் புகுந்து செய்துள்ள வேடிக்கைகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

*   *   *

நம் இந்தியப் படத்தொழிலின் வளர்ச்சி 'நித்ய கண்டம் பூர்ண ஆயுசா'க இருந்து வருவதற்குக்கூட காரணம்



ஆர். ஆர். பிக்சர்ஸார் தயாரித்து வரும் "கூண்டுக் கிளி" தமிழ்ப் படத்தில் மிகவும் தமாஷாகத் தோற்றமளிக்கிறார் கே. சாரங்கபாணி.

சென்ற மாதம் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் ''விளையாட்டுப் பொம்மை'' தமிழ்ப் படத்தில் வி. கே. ராமசாமியும், குமாரி கமலாவும் தோன்றும் ஒரு காட்சி இது.

இந்தபதின்மூன்ருக இருக்குமோ என்ற ஐயம் இப்போது எனக்குக்கூட ஏற்படுகிறது. ஏனெனில், இந்தியாவில் முதல் முதல் இத் தொழில் ஆரம்பிக்கப்பட்டதும் ஒரு பதிமூன்ரும் வருஷம்தான். 1913ம் வருஷம்தான் டி. ஜி. பால்கே என்பவர் முதன் முதலாக ''ஹரிச்சந்திரா'' என்ற மௌனப் படத்தைத் தயாரித்து வெளியிட்டார். பதிமூன்ரும் வருஷம் ஆரம்பித்ததுதான் நம் படத் தொழிலை ஆட்டி அலைக்கழிக்கிறதோ என்ற சந்தேகம் இப்போது உங்களுக்கும் கூட ஏற்படுகிறது அல்லவா ?

*   *   *

பதிமூன்ரும் தேதி திட்டம் போடும் எந்தக் காரியமும் பலன் அளிக்காது என்பதற்கு மற்ெருரு உதாரணமாக 'புகை பிடிக்கத் தடை' மசோதாவைக் குறிப்பிடலாம். 1949ம் வருஷம் மே மாதம் 13ம் தேதி, சினிமா தியேட்டரில் புகை பிடிப்பதைத் தடை செய்யும் மசோதா கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அதனுடைய கதி எப்படி இருக்கிறது என்பது, தியேட்டரில் புகை மண்டலத்திலே திக்கு முக்காடும் பல ரஸிகர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. பதிமூன்ரும் தேதி கொண்டுவரப்பட்ட புகை சம்பந்தமான மசோதா பாவம் புகைந்தே போய் விட்டது !

*   *   *

பதிமூன்ரும் தேதி திரையிடப்பட்ட சில படங்கள் வெற்றியடைந்திருக்கலாம்; அதை நான் மறுக்கவில்லை. ஆனல் அதே சமயம் பதிமூன்ரும் தேதி திரையிடப்பட்ட பல படங்கள் மண்ணைக் கவ்வியதை நான் மறக்க முடியாது. சட்டென்று ஞாபகத்திற்கு வரும் மூன்று படங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். 1948ம் வருஷம் ஜனவரி 13ம் தேதி அன்று திரையிடப்பட்ட ''துளசி ஜலந்த''ரும், அதே வருஷம் பிப்ரவரி மாதம் 13ம் தேதி திரையிடப்பட்ட

''தேவதாஸி'' யும் பெற்ற வெற்றி—அவைகளுக்குக் கிடைத்த ஆதரவு வாசகர்களுக்குத் தெரிந்ததே. திரையிட்ட இடங்களில் 'ஆட்டக் கணக்கில்' ஓடிய தமிழாக்கப்பட்ட ''நாககன்னிகா'' 1950ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13ம் தேதி திரையிடப்பட்டது தான். 'இந்தப் படங்களை பதிமூன்றும் தேதியில்லாமல் வேறு தேதியில் வெளியிட்டிருந்தால் மட்டும் வெற்றி பெற்றிருக்குமா?' என்று கேட்கலாம். அது வேறு விஷயம். படத்திற்குத் தக்கபடி திரையிடும் தேதி கிடைத்தது பாருங்கள் — அந்த விசித்திரம்தான் இதில் முக்கியம்.

* * *

ஜெமினி ஸ்டுடியோஸார் இந்தப் பதிமூன்றும் நம்பருக்கு பயப்படுகிறவர்கள்தான் அவர்களது பதிமூன்றுவது தயாரிப்பின் படப்பிடிப்பு நடந்து வந்த சமயம்—அது ''மிஸ் மாலினி'' என நினைக்கிறேன்—அதற்கு ''புரொடக்ஷன் நம்பர் 12ஏ'' என்றுதான் நமபர் கொடுத்திருந்தார்கள். ஸ்டுடியோ சம்பந்தப்பட்ட ரிகார்டுகளிலெல்லாம் ''12-ஏ'' தான் அடிபட்டது ஆரம்ப முதல் இறுதிவரை.

* * *

திறமையும் தோற்றமும் ஒருங்கே அமைந்த நடிகை குமுதினி, தான் ''ஓஹோ'' என்று முன்னுக்கு வராமல் இருப்பதற்குக்கூட காரணம் இந்தப் பதிமூன்றும் நம்பர்தானோ என்று இப்பொழுது நினைக்கக்கூடும். (1916ம் வருஷம் அக்டோபர் மாதம்) ''13ம் தேதி ஏன் பிறந்தோம்'' என்று தன் பிறந்த நாளை இப்பொழுது அவர் நொந்து கொண்டால் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

* * *

தம் ஊரான நாகர்கோயிலில் காந்திஜிக்கு ஞாபகார்த்த ஸ்தூபி கட்டினார் ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணன் என்றால் இப்பொழுது அனைவரும் ஆச்சரியமே அடைவார்கள். அந்த அளவுக்கு விரிந்திருந்த அவரது காங்கிரஸ் அபிமானம், இப்பொழுது குறுகிய நோக்கமாகி ஆளே மாறிவிட்டதற்குக் கூட காரணம் இந்த பதிமூன்றும் எண் தானோ என்று நினைக்கவே தோன்றுகிறது. அந்த ஸ்தூபியை (1949ம் வருஷம் செப்டம்பர் மாதம்) பதிமூன்றும் தேதி குமாரசாமி ராஜா திறந்து வைக்காது, ஒரு நாள் முந்தியோ, பிந்தியோ அந்தக் காரியத்தைச் செய்திருந்தால், நன்றாயிருந்திருக்கும். கலைவாணர் திசை மாறி வேறு கட்சிப் பிரசாரத்தில் இறங்காமல் தீவிர காங்கிரஸ் வாதியாகவே இருந்திருக்கக் கூடும் அல்லவா?

''கூண்டுக் கிளி'' யுடன் காட்சியளிக்கப் போகிறது இந்த குஞ்சுக் கிளி குசலகுமாரி.

இந்த பதிமூன்ரும் நம்பர் சிலரைப் பொருத்தமட்டில்அதிருஷ்ட எண்ணு கக்கூட இருந்திருக்கிறது. அகில இந் தியப் புகழ் பெற்றிருக்கும் வைஜயந்தி மாலாவைப் பொறுத்தவரை இந்த பதி மூன்ருவது எண்ணே தூஷிக்கிறவர்கள் மீது அவருக்குக் கோபம்கூட வரக் கூடும். ஏனெனில், அது அவருக்கு அதிரு ஷ்ட எண் என்றுதான் கூறவேண்டும். பட உலகில் அவர் புகுவதற்குக் காரண மாக இருந்தது, இன்று பட உலகில் யாரும் புகழக் காரணமாக இருப்பது அவரது நடனத் திறமைதான். அப்ப டிப்பட்ட அவருடைய நடனம் அரங் கேறியது அவருடைய பதிமூன்ருவது வயதில்தான்.

*   *   *

டைரெக்டர் எச். எம். ரெட்டியைக் கேட்டாலும் அவரும் இந்த பதிமூன் ரும் நம்பரைக் குறை கூறுகிறவர்கள் மீது வெறுப்படையக்கூடும். இன்று சினிமா உலக பப்பாஜியாக பிரகாசிக் கும் அவர் இந்தத் தொழிலில் காலடி வைத்த பதிமூன்ருவது தினம்தான் டைரெக்டராகப் பதவி உயர்ந்தவர்.

*   *   *

என்னைப் பொருத்தமட்டில் — இந்த நுனிப்புல் பகுதிவரை—இந்த பதி மூன்ரும் எண் அதிருஷ்ட எண் என்றே நான் கருதுகிறேன். ''குண்டூசி''யின் முதல் முதல் ஊசியில் தொடங்கிய இப் பகுதியில் எழுதப்பட்ட பல விஷயங்க ளில் இந்த பதிமூன்ரும் நம்பர் பற்றிய தும் ஒன்று. அதுமுதல் இப் பகுதி ரஸி கர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டு பாராட்டுதல்களைப் பெற்று வருகிறதல் லவா ? ஆகவே, 'வாழ்க பதிமூன்ரும் நம்பர்' என்று கூறி நான் முடித் துக் கொள்கிறேன்.

மதங்களைப்பற்றி சினிமாப் படம்

உலகிலுள்ள எல்லா மதங்களைப்பற்றி யும் சினிமாப் படமெடுக்க ல்யூ அயர்ஸ் என்ற அமெரிக்க சினிமா நடிகர் அநேக நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிருர். இவர் ஏற்கெனவே ஜப்பான், ஹாங்காய், பார்மோஸா, தாய்லாந்து முதலிய நாடுகளில் இதற்காகவென சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிருர்.

கூந்தலையும் கூந்தலழகையும் பாதுகாக்கும் மருந்து கேசவர்த்தினி

கேசவர்த்தினி

காலையில் தடவியதால் பொடுகு நீங்கி, நாள் முழுவதும் பளபள வென்று கேசம் விளங்கட்டும். சிறு வயதிலிருந்து தடவுவதால். ஆயுள் முழுவதும் அழகிய கூந்தல் பெருகட்டும். இனி தலை அரிப்பு ஏன்? மயிர் உதிர்வதேன் ? இளநரையைத் தள்ளி வையுங்கள். கூந்தலை ஆரோக்கியமுள்ள தாக்குங்கள்.

கேசவர்த்தினியினல் கூந்தலை விருத்தி செய்யுங்கள். ஷாம்புவினல் தலையை சுத்தமாகவும், ஸுகந்தமாகவும் ஆக்குங்கள்.

கேசவர்த்தினி அ. 14, ஷாம்பு அ. 14. தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும். அல்லது கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்.

சிங்கப்பூரில் இந்திய நடனம்

இரு இந்தியப் படங்களுக்குத் தடை

அடுத்த பிலிம் விழா சிங்கப்பூரில் நடைபெறும்

சமீப காலமாக சிங்கப்பூர் கலைத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. நகரில் சுமார் 10 இடங்களில் இந்திய நடன வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியப் பெண்மணிகள் மட்டுமின்றி, இலங்கைப் பெண்மணிகளும் ஏராளமானோர் முன் வந்து நடனம் பயில்கின்றனர். சங்கீதம், நடனம் போன்ற கலைத் துறைகளில் இந்நாட்டில் முன்னணியில் நிற்பவர்கள் இவர்கள் தாம். அவர்களது கலை ஆர்வம் இங்கு பிரசித்தமானது.

இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. சீன, மலாய், இந்தோனேஷிய, ஐரோப்பியப் பெண்மணிகளுக்கு இந்திய நடனங்கள் கற்பதில் ஏற்பட்டுள்ள மோகம்தான் அதிசயப் படத்தக்கது.

பல இனத்தையும் சேர்ந்த சுமார் 25 பெண்களைக் கொண்டு, அவர்களின் நடன ஆசிரியர் ஸ்ரீ தெவ தத்தா ஜெட்லி, ஸ்தல விக்டோரியா தியேட்டரில் ஒரு நடன நிகழ்ச்சி நடத்தினார். ஒரு டச்சுப் பெண் பரதம் பிடித்து அழகாக ஆடியதைப் பார்த்து அன்று பாராட்டாதவர்கள் யாருமே இல்லை. நடன உடை தரித்து, ஆடியவர்கள் இந்தோனேஷிய, மலாய், சீனப் பெண்கள் என்பதை இறுதியில் அறிந்த போதுதான் எல்லோரும் வியப்பிற்குள்ளானார்கள். அவ்வளவு தத்ரூபமாக இந்திய நடனங்களை அவர்கள் ஆடிக் காட்டினார்கள். பரத நாட்டியம், மணிபுரி, கதகளி, மற்றும் சில ஓரியண்டல் நடனங்களையும் அவர்கள் ஆடிக் காட்டினார்கள். ஆனாலும் இவர்களின் முக **பா**வங்கள் முத்திரைகள் தெளிவுபடவில்லை. உணர்ச்சியில்லாமல் இயக்கி வைத்தவர்கள் போல் சில கட்டங்களில் ஆடுகிறார்கள். இருந்தாலும் இவ்வளவு ஆர்வத்துடன் முன் வந்து இந்திய நடனங்களைக் கற்றுத் தெரிந்து கொள்ள ஊக்கமெடுத்திருக்கிறார்களே, இதற்காக அவசியம் பாராட்ட வேண்டியதே.

டச்சுப் பெண்மணியான மிஸ். பிரான்ஸிஸ்கா மாஸ் சிங்கப்பூரில் குஜராத்தி கிராமிய நடனத்தை சிரத்தையுடன் ஆடிக் காட்டினார்.

அன்று, ஸ்ரீ தேவதத்தா ஜெட்லி ஆடிய கண்டிய நடனமும், அதற்கென இலங்கையிலிருந்து விசேஷமாக ஒலிப்பதிவு செய்துகொண்டுவரப்பட்ட இனிய பின்னணியும் செவிக்கும் கண்களுக்கும் திவ்விய விருந்தாக இருந்தன.

* * *

'**சா**குந்தல' காவியத்தை எத்தனை தடவை சினிமாவாகப் பார்த்தாலும் சரி, கதையாகக் கேட்டாலும் சரி, கவிதையாக இசைத்தாலும் சரி, நாடகமாக நடித்தாலும் சரி கேட்கக் கேட்க, பார்க்கப் பார்க்க அலுக்காது, சலிக்காது! சமீபத்தில்தான் 'இந்தியன்

எதிர்காலத்தில் ஒரு நடன நக்ஷத்திரமாக விளங்கக்கூடிய—சிங்கப்பூரைச் சேர்ந்த குமாரி பிரஸன்னா பாலன், இப்பொழுது அடையாறு கலாக்ஷேத்திரத்தில் சாஸ்திரிய நடனம் பயின்று கொண்டு வருகிறார்.

பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டி'யார் 'சாகுந்தலம்' நாடகத்தை சிங்கப்பூரிலுள்ள பல்வேறு இன மக்களும் அறிந்து கொள்வதற்காக ஆங்கிலத்தில் நடத்தி வெற்றி கண்டார்கள்.

சென்ற மாதம் உதயசங்கரின் சிஷ்யர் ஸ்ரீ பாஸ்கர் தமது சிஷ்யைகளைக் கொண்டு 'சகுந்தலா' இசை நடனக் கச்சேரியொன்றை அற்புதமாக நடத்தினார். ரிஷிகள், வண்டுகள், மான்கள் முதற்கொண்டு எல்லாவற்றிலும் மூன்று டஜன் சிங்காரிகளும் சிறுமிகளுமாக ஆடி, ஜமாய்த்து விட்டார்கள்.

துஷ்யந்தனை ஸ்ரீ பாஸ்கரும் சகுந்தலையாக ஸ்ரீமதி ரதி கார்த்திகேசும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

இனிமையான பின்னணி, நாடகத்திற்கு ஜீவனைக் கொடுத்தது. ஸ்ரீமதி பார்வதி ராமநாதன், ஞானம் சுப்ரமணியம், பத்மா விஸ்வநாதன் ஆகியோரின் பின்னணிக் குரல்கள் 'கணீ'ரென்று இருந்தன. வர்ணஜால ஒளிப் பதிவுகள், கண்ணைப் பறிக்கும் உடை வகை, மேக்கப், ஸெட்டிங்கள் யாவும் 'சகுந்தலா'வுக்கு மெருகூட்டி சோபிக்கச் செய்தன.

நடனக் கலையைப் பற்றிக் குறிப்பிடுகையில் குமாரி பிரஸன்னாவைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிங்கப்பூரில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த 33 நடன நிகழ்ச்சிகளில் குமாரி பிரஸன்னா பங்கெடுத்து ஆடி, எல்லோராலும் பாராட்டப் பட்டார். அந்த நடன நிகழ்ச்சிக்கு அன்று தலைமை வகித்த இந்திய அரசாங்கப் பிரதிநிதி ஸ்ரீ கோபாலமேனனும், இன்னும் பலரும், இவர் இந்தியாவுக்குச் சென்று தன் நடனத் திறமையை மேலும் அபிவிருத்தி செய்வாரானால், எதிர்காலத்தில் ஒரு துல்லியமான நடன நட்சத்திரமாகப் பிரகாசிக்கலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

அவர்கள் கோரிக்கை பிரஸன்னாவின் தந்தைக்கு நியாயமாகப்

[தொடர்ச்சி 55-ம் பக்கத்தில்]



சீனப் பெண்மணியான குமாரி மௌரீன் தியோ சிங்கப்பூரில் கதக் நடனத்தை லாவகமாக ஆடிக் காட்டினார்.

1

நர்மதா.

டாண்! டாண்! டாண்!

மணி மூன்றடித்து விட்டது. காலை இளங் காற்று ஆனந்தமாக வீசிற்று. அந்த சுகாநுபவத்தில் உலகமே மெய்ம் மறந்து உறங்கிக் கொண்டிருந்தது. சற்று முன் வரையில் நோய் வேதனையால் முனகிக் கொண்டிருந்த அம்மா கூட சற்று அமைதியடைந்து உறங்க ஆரம்பித்து விட்டாள். ஆனால் அந்த இனிய காலை வேளைக்கு நோய் வேதனையை மாற்றடிக்கும் சக்திதான் இருந்ததேயன்றி, மனவேதனையை மாற்றும் வல்லமை இருக்கவில்லையே! இருந்திருந்தால், என்னை மாத்திரம் அது ஏன் தூக்கத்தில் ஆழ்த்தவில்லை? இதனால் தான், பெரியோர்கள், 'கவலை பிறந்த மனிதருக்குக் கண் துஞ்சலும் இல்லை' என்று சொன்னார்களோ?

அது என்னவோ, என்னை அப்பொழுது கவலை ஒன்று முழுகடித்துத்தான் இருந்தது. சாதாரணக் கவலையா, அது? இல்லை; எல்லையற்ற கவலைப் பிரவாகம்! அணையின் உதவியால் தேக்கப்பட்டிருக்கும் நீர், அந்த அணையில் சிறிது

விரிசல் தோன்றினாலும், உடைப்பெடுத்துக்கொண்டு பாய்ந்து விடுகிறதல்லவா? அதுபோல, சிறு வயதிலே என்னைச் சூழ்ந்து விட்ட அந்தக் கவலை உடைப்பெடுத்துக் கொண்டு விடாதபடி அணையாக நின்று தடுத்து வந்த அம்மாவின் வாழ்வில் விரிசல் கண்டு, அவளை மரணப் படுக்கையில் தள்ளியதும், என் கவலை பெருக்கெடுத்துக் கொண்டது. 'ஐயோ! அம்மா போய் விட்டால் என் கதி என்ன?'

தாயையன்றி வேறு நாதியற்ற அநாதையல்ல, நான். உடன் பிறந்தவன் என்று ஒருவன் எனக்கு உண்டு. கனவிலும் கிட்டாத அன்புக் கணவரும் எனக்கு இருக்கிறார். இன்னும், சமீபத்தில் என்னைத் தாயாக்கியவன்கூட இதோ தொட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறான். இருந்தாலும், இவர்கள் எல்லோரும் சேர்ந்தாலும் ஒரு அன்னைக்கு ஈடாக முடியுமா? மற்றவர்களுக்கானால் ஒரு வேளை முடியுமோ, என்னவோ? ஏனென்றால் சாதாரணமாகத் தாய் என்பவள் அவர்களுக்குப் பெற்று வளர்த்தவளாகவும், உயிருள்ளவரையில் உள்ளன்பு குறையாதவளாகவும் மாத்திரமே இருப்பாள். ஆனால், என் அம்மாவோ? அவள் என்னைப் பெற்றவள் மாத்திரமில்லை; என் மீது அழியா அன்பு கொண்டவள் மாத்திரமும் இல்லை; அவளே எனக்கு வழிகாட்டி! என் ஊன்றுகோல்!!

ஆம்; ஊன்றுகோலேதான். கபோதியின் கைக் கோலைப் பிடுங்கிவிட்டால் அவன் பாடு எவ்வளவு திண்டாட்டமாகிவிடும்? என் கதியும் அப்படி ஆகிவிடப் போகிறதே என்கிற கவலைதான்

அப்பொழுது என்னை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

ஏனென்றால், அத்தகையதொரு வழி காட்டியோ, ஊன்றுகோலோ இன்றி வாழ்வைத் தள்ள முடியாது என்ற நிலை எனக்கு என்றோ ஏற்பட்டு, நிலைத்தும் விட்டது. என் வாழ்வை இருள் மயமாக்கிய அந்த நிகழ்ச்சியை, எவ்வளவு முயன்றும், என் நெஞ்சிலிருந்து அழிக்க முடியவில்லை. மனிதரின் நெஞ்சில், இன்ப நினைவுகளைப் போலவே, துன்ப நினைவுகளும் கல்லெழுத்தாகப் பதிந்துவிடத்தானே செய்கின்றன!

அப்பொழுது எனக்கு ஆறு, அல்லது ஏழு வயதுதான் இருக்கும். மிகப்பெரிய வெளி உலகைப் பற்றி அணுவளவும் அறியாப் பிராயமே; எனினும், சின்னஞ் சிறிய எங்கள் குடும்ப உலகின் சரிதம் முழுவதும் நான் அறிந்ததே! அந்தக் கொங்கணத்துக் கடற்கரைக் கிராமத்தில் அப்பா ஓர் மீன் வியாபாரியாயிருந்தார். பம்பாய் போன்ற பெரிய நகரங்களிலுள்ள மீன் உரத் தொழிற்சாலைகளுக்கு இங்கிருந்து மீன்களை வாங்கி உலரவைத்துப் பதப்படுத்தி அனுப்புவது அவருடைய வியாபாரம். நிறைய சம்பாதித்தார். ஆனால், எதுவும் சேர்த்து வைக்கத் தெரியாத ஊதாரி. நன்றாகச் செலவு செய்து, குஷியாகக் குடும்பத்தை நடத்திவந்தார். அண்ணா காசிநாத்தும் அவருக்கு உதவியாக வியாபாரத்தில ஈடுபட்டிருந்தான்.

அண்ணாவுக்கும் எனக்கும் பதினாறு வருஷங்கள் வித்தியாசம். அக்காலத்து முறைப்படி அவனுக்கும் பதினாறு பதினேழு வயசில் கல்யாணமாகியிருந்தால் என் வயசில் ஒரு குழந்தை கூட இருந்திருக்கும். என் பெற்றோர்கள், அவன் கல்யாண விஷயமாகப் போதிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளத்தான் செய்தனர். ஆனால், அண்ணாவோ, அவர்களால் எட்டிப் பிடிக்க முடியாத ஓர் புளியங்கொப்பைப் பற்றிக்கொண்டு தொங்கினான்.

வியாபார நிமித்தமாக அவன் அடிக்கடி ரத்னகிரிக்குப் போய் வருவதுண்டு. அங்கே கணேஷ் தாம்லே என்ற ஓர் பணக்கார வியாபாரியின் வீட்டில்தான் பெரும்பாலும் தங்குவது வழக்கம். எப்படியோ, அவருடைய பெண் சரயூ விடம் அண்ணாவின் மனசு லயித்துவிட்டது. 'அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்ளுவேன்' என்று பிடிவாதம் பிடித்தான். "பெரிய இடமாயிற்றே, நம்மோடு சம்பந்தம் செய்து கொள்ள இசைவார்களா?" என்று அப்பா தயங்கினார். ஆயின், அம்மா அண்ணாவுக்குப் பரிந்து கொண்டு, "ஒரு நடை போய்க் கேட்டு விட்டுத்தான் வந்துவிடுங்களேன்" என்று தூண்டினாள். கடைசியில் அப்பா அரை மனசுடன் ரத்னகிரிக்குப் புறப்பட்டுப் போனார்.

தாம்லே தம்பதி சரயூவை என் மதனியாக்கச் சம்மதித்தனர். ஆயினும் "எங்களுக்கு இருப்பது ஒரே பெண்; கல்யாணத்தை முன்னிட்டு அவளை நாங்கள் பிரிய விரும்பவில்லை; விவாகத்துக்குப் பிறகு, காசிநாத்தை எங்களுடனே நிரந்தரமாக வசிக்கச் செய்யச் சம்மதமானால், மேலே பேசுவோம்" என்று ஒரு நிபந்தனையையும் விதித்தனர்.

"எனக்கு இருப்பதும் ஒரே மகன் தான். அவனை உங்களுக்கு விற்றுவிட நான் உடன்படேன்" என்று கூறிவிட்டு அப்பா திரும்பி வந்து விட்டார்.

இந்த முறிவு அண்ணாவுக்குப் பெரும் ஏமாற்றமாகப் போயிற்று. எனவே, "ரோஜாப் பூவைப் பறித்து அரளிச் செடியில் ஒட்டிவிட்டால், அது அரளிப்பூ ஆகிவிடுமா? எங்கே வாழ்ந்தாலும் நான் உங்கள் பிள்ளைதானே, அப்பா!" என்று அவன் வாதிட்டான்.

"அதற்காகச் சொல்லவில்லையடா; வியாபாரத்துக்கு வலது கை போலிருக்கும் நீ வேட்டகத்தோடு போய் விட்டால், நான் ஒண்டியாக எப்படிச் சமாளிப்பது? எப்படிக் குடும்பம் நடத்துவது?" என்று அப்பா அவனைச் சமாதானம் செய்யப் பார்த்தார்.

"ஏன்? ரங்காராம் இல்லையா? அவனுடைய படிப்பை நிறுத்திவிட்டுத் தொழிலில் பழக்கிக் கொள்ளக் கூடாதோ? என் படிப்பை மாத்திரம் ஐந்தாவது வகுப்போடு நிறுத்திவிட்டு வியாபாரத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டீர்களே!" என்று மேலும் தர்க்கம் செய்தான், அண்ணா.

கோவிந்தராவ் பான்ஸ்லே என்பவர் அப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரியின் கணவர். அவருக்கு முதுமைப் பிராயத்தில் பிறந்த ஒரே மகன்தான், அண்ணா

குறிப்பிட்ட ரங்காராம் பான்ஸ்லே. பிறந்த சில நாட்களுக்கெல்லாம் தாயையும், பின்னர் தந்தையையும் இழந்த அவரை அம்மா எடுத்து வளர்த்தாள். ஆகவே, அவர் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே கருதப்பட்டிருந்தார்.

இருந்தாலும், மந்தை மாட்டுக்கு எப்படி மேய்ப்பவன் உரிமையாளனாகிவிட முடியாதோ, அவ்வாறுதானே அப்பா அவர் மீது செலுத்தக்கூடிய ஆதிக்கமும் இருந்தது? அண்ணாவின் விஷயம் வேறு. அவன் சொந்தப் பிள்ளை; தன்னுடைய தேவைக்காக அவனுடைய படிப்பை நிறுத்திவிட்டுத் தொழிலுக்குப் பயன்படுத்திக் கொண்டார்; அது போலப் பிறர் பிள்ளையை, அதிலும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரராய் விளங்கிய ஒருவரைச் செய்து கொண்டால், ஊராரின் ஏசலுக்கு ஆளாக நேரிடுமென்று அண்ணாவின் இந்தக் கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார், அப்பா.

ஆகவே, காசியின் காதல் கல்யாணம் வெறும் கனவாகவே நின்று போயிற்று. வேறு பெண்ணை மணந்து கொள்ளும்படி அம்மா அவனை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தாள். ஆனால், "மணந்தால் சரயூவை மணப்பேன்; இல்லாவிட்டால் சந்நியாசியாகவே வாழ்வேன்" என்று அவன் தீர்மானமாகக் கூறிவிட்டான்.

இவையெல்லாம் நான் பிறந்த காலத்தை ஒட்டி நடந்த கதைகள். பதினாறு வருஷங்களை இடைவிட்டு, யார் குறையைப் போக்கவோ, இந்த அபாக்கியவதி அம்மாவின் வயிற்றை நிறைத்துக் கொண்டு தோன்றினேன். 'அழகான அழகா? கொங்கணமே பெருமை கொள்ள வேண்டிய அழகு!' என்ற உரிமையுடன் பிறந்த என்னை, அப்பா - அம்மா உட்பட, வீட்டிலும், வெளியிலும் உள்ள எல்லோரும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினார்கள். அந்த அறியாப் பிராயத்தில் என்னிடம் கூட 'அழகி' என்ற அகந்தை ஊறிக் கிடந்ததென்றால்....?

'ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்' என்று சொல்லும்போது நான் மாத்திரம் இப்படி விசேஷப் பெருமை படைத்திருக்க அவர் அனுமதித்து விடுவாரா? அதனால்தான் போலும், என் கர்வத்தை அடக்க ஒரு குறையை உண்டுபண்ணி விட்டார்!

அப்பொழுது மழைக் காலம். கொங்கணத்து மழையின் கொண்டாட்டத்துக்குக் கேட்கவா வேண்டும்? இடி, மின்னல்களுடன் அது தன் வல்லமை முழுவதையும் காட்டி ஜமாய்த்துக் கொண்டிருந்தது. அப்பாவும், அண்ணாவும், வியாபார நிமித்தம் வெளியூர் சென்றிருந்தனர். ரங்கா அத்தான் பள்ளிக்குப் போயிருந்தார். அம்மா வீட்டினுள்ளே ஏதோ கைக் காரியமாக இருந்தாள். நான் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொட்டும் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். பளிச்சென்று

Nandi at Chamundi Hills, Mysore.

பிரசித்திபெற்ற

நீபா

- ஹேர் ஆயில்
- டாய்லட் சோப்
- பிரில்லியண்டைன்
- ஸ்னோ
- ஊதுபத்திகள்

நறுமணத்திற்கு மறுபெயர்

காங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20.

EP.

வானத்தில் ஓர் மின்வெட்டுத் தோன்றிற்று. கரிய மேகத்தினிடையேயிருந்து ஓர் ஒளிப்பிழம்பு உருகி வழிந்தது. அதன் தேஜோம்யமான ஜோதி என் கண்களை வெட்டிற்று! பயத்துடன் கண்களை மூடிக்கொண்டு "அம்மா!" என்று பயந்து அலறிய நான், இமைகளைத் திறந்தபோது....?

"ஐயோ! இது என்ன? அதற்குள் எப்படி இருட்டிவிட்டது?"

என் கூக்குரலைக் கேட்டு உள்ளேயிருந்து ஓடிவந்த அம்மா, "என்னடி நர்மதா, ஏன் இப்படி அலறினாய்? மின்னலைக் கண்டு பயந்து விட்டாயாடா, என் கண்ணா?" என்று என்னை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு கேட்டாள்.

"ஆமாம், அம்மா; ஐயோ! எவ்வளவு பெரிய மின்னல்! எத்தனை வெளிச்சம்! ஏன் அம்மா. அந்த மின்னலுக்குப் பிறகு இப்படிச் சட்டென்று இருட்டி விட்டது?"

"இருட்டி விட்டதா?" என்று திகைப்போடு கேட்டாள் என் அன்னை.

"ஆமாம்; நீ நிற்பதுகூட எனக்குத் தெரியவில்லையே!"

அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது. "ஐயோ, கடவுளே! என் கண்மணியின் கண்ணொளியைப் பறித்துக் கொண்டு விட்டாயே!" என்று கதறினாள்.

"என்ன? நான் குருடியா!"

அப்பாவுக்கும், அண்ணாவுக்கும் உடனே தந்தி பறந்தது. அவர்கள் வந்தார்கள். உள்ளூர், வெளியூர் வைத்தியர்களும் வந்தார்கள். என்ன என்னவோ வைத்தியங்கள் எல்லாம் செய்து பார்த்தார்கள். ஆனால், இழந்த என் பார்வையை எவராலும் மீட்க முடியவில்லை!

என்னுடைய இந்தக் கபோதி நிலை, டார் யாரை, எப்படி எப்படித் தாக்கிறாரோ, எனக்குத் தெரியாது; ஆனால், அம்மாவைத் தாக்கிய அளவுக்கு, அது வேறு யாரையுமே தாக்கியிருக்காது. இந்த ஒரு தாக்குதல்தானா, பேதை அவளுக்கு? இதில் ஆரம்பித்து.......

துன்பம் வரும்போது, புற்றீசலைப்

[தொடர்ச்சி 51ம் பக்கத்தில்]

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை
மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது..."
என்கிருர் நிம்மி



இந்தியாவில் தயாரித்தது.

லக்ஸ் டாய்லட் சோப்பின் வெண்ணிறத்தை எல்லோரும் மெச்சுகிருர்கள். மிகவும் சுத்தமான எண்ணெயிலிருந்து தயாரித்த சோப்புத்தான் இவ்வளவு வெண்மையாக இருக்க முடியும். நிம்மி கூறுவதாவது: "லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப் பெறுவது மிகவும் சுலபம். அதன் மிருதுவான நறுமணம் கமழும் நுரையை நன்ருகத் தேய்க்கவும். அது ஆழப்புகுந்து சுத்தம் செய்கிறது. அது உங்கள் வதனத்திற்கு அளிக்கும் அற்புத யௌவன காந்தியைக் கண்டு வியப்புறுவீர்கள்!"

"...அதனுல்தான் எனது இளமைவாய்ந்த வதனத்தை பாதுகாக்க லக்ஸ் டாய்லட் சோப்பை தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க

புதிய பெரிய சைஸிலும்

இப்பொழுது கிடைக்கிறது.
இன்றே வாங்கி உபயோகியுங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப்

LTS. 415-50 TM

கல்பனு கார்த்திக்

காற்றினிலே நக்ஷத்திர பேட்டி

(கதவு திறக்கிறது. கல்பனு வருகிருர்)
கல்பனு:— நமஸ்தே பால்ராஜ்ஜி!

பால்ராஜ்:— அதி சீக்கிரமாகவே வந்து விட்டீர்களே! தங்களைக் கேட்பதற்காக ரஸிகர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கல்:—அப்படியா? சரி, அப்படியானல் நாம் ஆரம்பிக்கலாம்.

பா:—முதலில் நீங்கள் எப்பொழுதாவது லிப்டன் புரோகிராம் கேட்டிருக்கிறீர்களா என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

க:—ஆம், அநேகம் தடவைகள். நக்ஷத்திரப் பேட்டிகளையும், தங்களுடைய சினிமா விமர்சனங்களையும் கேட்டிருக்கிறேன். ஒரு நாள் நீங்கள் "டாக்ஸி டிரைவர்" பற்றி கூட சொல்லிக் கொண்டிருந்தீர்கள்.

பா:—எங்களுடைய இந்த நிகழ்ச்சியைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

கல்:—அது மிகவும் நன்ருகவே இருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த புரோகிராமின் சிறப்பே என்னை இங்கு வரச் செய்ததன் காரணம்.

பா:—இந்தப் புகழுரைக்குத் தங்களுக்கு நன்றி. எங்களுடைய புரோகிராம் உங்களை இங்கு இழுத்ததாகச் சொன்னீர்கள். உங்களை பம்பாய்க்கு இழுத்தது எது என்பதைச் சொல்லுங்கள். பம்பாய் வருவதற்கு முன் நீங்கள் எங்கு இருந்தீர்கள்?

க:—சிம்லாவில்.

பா:—உங்களுக்கு மிகவும் பிடித்தமான எதை பம்பாயில் பார்த்தீர்கள்?

க:—பல விஷயங்கள். இங்கு வந்தவுடன் ஒய். டபிள்யூ. ஸி. ஏ.யில் தங்கினேன். சிறு வயதிலிருந்தே எனக்கு ஊர் ஊராகப் பிரயாணம் செய்வதில் விருப்பம் அதிகம். இங்கு வந்தவுடன் அடிக்கடி நான் தனியாக ஊர் சுற்றுவது வழக்கம். இந்த மிகப்பெரிய கட்டடங்கள், மின்சார ரயில்கள், தாஜ்மஹால் ஹோட்டல், அப்போலோ பந்தர், மலபார் ஹில்—இது போன்றவைகளையெல்லாம் சென்று பார்த்தேன். நீங்கள் பம்பாய் முழுவதையும் மலபார் ஹில்லில் இருந்து பார்க்கலாம். அதுவும் இரவில் மின்சார தீபங்களுடன் பம்பாயின் அழகை அனுபவிப்பது எவ்வளவு இன்பமாயிருக்கிறது! என்னுடைய பூகோள வகுப்பில் சமுத்திரம் மிகப் பெரியது என்று சொல்லியிருக்கிருர்கள். பம்பாய் வந்த பிறகு தான் நானே அதை நேரில் தெரிந்து கொண்டேன்.

பா:—பம்பாயில் மற்றும் என்ன பார்த்தீர்கள்?

க:—நல்லது, பம்பாய் கடைத்தெருக்களில் அநேகம் தடவை நான் சுற்றியிருக்கிறேன். அநேகமாக தினந்தோறும் நான் பிரோஸ் ஷா மேத்தா ரோட்டிற்கும், சர்ச்கேட்டிற்கும் செல்வது வழக்கம். முதல் தடவையாக பம்பாயில் தான் நான் "லிப் ஸ்டிக்" பூசிக் கொண்டது. அதை காலேஜிலாவது பள்ளிக்கூடத்திலாவது உபயோகித்தது இல்லை.

பா:—ஏன்?

க:—எனக்கு நீண்ட கூந்தல் இருந்தது. ஹார்ன்பி ரோடில் ஒரு நாள் போய்க்கொண்டிருந்த போது, ஒரு சலூனில் கூந்தலை சுருள்கள் உடையதாய் செய்யப்படுவதைக் கண்டேன். உடனே உள்ளே சென்றேன். சிறிது நேரம் சென்ற பிறகு, கண்ணுடியில் பார்த்த போது என்னையே அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை. என்னுடைய தலை பூராவும் அலைகள் நிறைந்ததாக இருந்தது. தலையில் குடை பிடித்த மாதிரி இருந்தது. வீட்டிற்குத் திரும்பிய வுடன் எவ்வளவு உற்சாகத்துடன் கத்தினேன் தெரியுமா? அதைப் பார்த்த பொழுது சேத்தன் ஆனந்த் எவ்வாறு மனக் கஷ்டப் பட்டார்! ஏனெனில் அவருடைய படத்தில் அவ்விதமான மோஸ்

தருடன் கூடிய கூந்தலுடன் நடிப்பதை அவர் விரும்பவில்லை.

பா:—கல்பனுஜி! ஆனல் இப்பொழுது உங்களுடைய கூந்தல் நன்ருகவே உள்ளது. ஆனல் அந்த நாளைப் பற்றிய நினைவு............

க:—...............அது எனக்கு நடுக்கத்தையே தருகிறது...............இதையும் கேளுங்கள். எனக்கு நீண்ட அடர்ந்த புருவங்கள் இருந்தன. என்னுடைய சினேகிதி ஒருத்தி என் புருவங்களைச் சிறியதாகச் செய்து கொள்ளச் சொன்னுள். ஏனெனில் அவைகள் அவ்வாறு இருந்தால் சினிமாவில் இன்னும் பெரியதாகத் தோன்றும் என்ருள். ஆகையால் நான் கையினுல் பிடுங்க ஆரம்பித்தேன். அதனுல் எவ்வளவு ரத்தம் வந்தது! மற்ற சில நண்பர்கள் எனக்கு சிறிய நெற்றி இருக்கிறதாகச் சொன்னுர்கள். அதனுல் சிறந்த சினிமா நக்ஷத்திரமாக விளங்க, என்னுடைய முன் தலை மயிர்கள் சிலவற்றைக் கத்திரித்து விட்டேன்.

பா:—அதற்குப் பிறகு நீங்கள் சினிமா நக்ஷத்திரம் மாதிரித் தோற்றமளித்தீர்களா?

க:—எனக்குத் தெரியாது. ஆனல். ஒரு கேலிச் சித்திரமாக விளங்கினேன்.

பா:—பின், சினிமா நக்ஷத்திரமாக ஆவது மிகவும் செலவான காரியமா?

க:—அப்படியல்ல, சினிமா நக்ஷத்திரங்களைப் பற்றிய என்னுடைய சில தவருன எண்ணங்கள் நிச்சயமாக எனக்கு அதிக செலவு தந்தன.

பா:—"பாஸி"யில் தங்களுக்கு எப்படி இடம் கிடைத்தது?

க:—ஸ்ரீமதி சேத்தன் ஆனந்த் எனக்குச் சொந்தம். என்னுடைய சகோதரியின் விவாகத்திற்கு சிம்லாவிற்கு ஸ்ரீமான் சேத்தன் ஆனந்தும், அவர் மனைவியும் வந்திருந்தனர். அப்பொழுது தான் ஸ்ரீமான் சேத்தன் ஆனந்த் எனக்கு "பாஸி"யில் ஒரு டாக்டர் பாத்திரம் தருவதாகச் சொன்னுர். நானும் பம்பாய்க்குப் புறப்பட்டேன்.

பா:—அதற்கு முன்பு தங்களுக்கு ஏதாவது நடிக்க சந்தர்ப்பம் கிடைத்ததா?

க:—ஆம். ஒரு சமயம் ஸ்ரீமான் ஷோரி படமெடுப்பதற்கு சிம்லா வந்திருந்தார். அவர் எனக்கு ஒரு 'டெஸ்ட்' கொடுத்

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் ''மாங்கல்யம்'' தமிழ்ப் படத்தில் எஸ். ஏ. நடராஜனும், பி. எஸ். சரோஜாவும் நடிக்கின்றனர்.

தார். படத்திலும் நடிக்கும்படி கேட்டார். ஆனால் என்னுடைய தாயார் சம்மதிக்க வில்லை. பிறகு மெதுவாக என் உறவினர்களை சம்மதிக்கும்படி தூண்டினேன். அதன் பின்பு தான் சேத்தன் ஆனந்த் எனக்குச் சந்தர்ப்பம் அளித்தார்.

பா:—குழந்தைப் பருவத்தி லிருந்தே தங்களுக்கு நடிப்பதில் விருப்பம் இருந்ததோ?

க:—இல்லை, அப்படி இல்லை. ஆனால் என் கல்லூரி நாட்களில் அதற்கு ஆசைப்பட்டேன்.

பா:—அப்பொழுது உங்களுக்கு நக்ஷத்திரங்களிடம் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்திருக்க வேண்டும்!

க:—ஆம், அந்த நாளில் காமினி கௌஸல் எனது அபிமான நக்ஷத்திரம். சினிமாவில் சேர்வதற்கு முன்பு சிம்லாவில் மீனா ஷோரியைக் கண்டேன் அவரை வெகு நேரம் பார்த்துக் கொண்டே இருந்தேன். ஆனால் பேச முடியவில்லை. பம்பாய் வந்ததும் நான் முதன் முதலில் சந்தித்த நக்ஷத்திரம் நிம்மி தான்.

பா:—முதல் சில தினங்களுக்கு படப்பிடிப்பின் போது உங்களுக்கு நடுக்கம் இருந்ததோ?

க:—என்னால் அதைத் தடுக்க முடியவில்லை. அப்பொழுது தான் நான் முதன் முதல் புடவை உடுத்துவதும், உயர்ந்த தகுதியுடைய பூட்ஸ் அணிவதும். ஆகவே, நடப்பதில் சிறிது கஷ்டமாயிருந்தது. இதை யெல்லாவற்றையும் விட நான் என்னையே ஒரு கேலிச் சித்திரமாக ஆக்கிக் கொண்டிருந்தேன். ஆகையால் காமிராவைவிட என்னைக் கண்டே நான் அதிகம் பயந்தது.

பா:—ஸிம்லாவிலிருந்து வந்ததாகக் கூறினீர்களே! அப்படியானால் நீங்கள் அந்த ஊரைச் சேர்ந்தவரா?

க:—இல்லே, நான் லாகூரில் 1931-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 19ந் தேதி யன்று பிறந்தேன். அங்குள்ள கான் வென்ட் பள்ளியில் மெட்ரிக் பரீக்ஷை யையும் முடித்தேன்.

பா:—உங்களுடைய பள்ளி வாழ்க் கையைப் பற்றிய சில சம்பவங்களை எங் களுக்குச் சொல்லுங்கள்.

க:—என்னுடைய பள்ளிப் பாடங்களை யும், வேலேகளையும் நான் சரிவரச் செய் யாததால் என்னை என் ஆசிரியை அடிக் கடி திட்டுவாள். இப்பொழுதும் அந்த நாட்களின் நினைவுகள் வரும்பொழுது என் பள்ளி ஆசிரியை என் முன் நிற்பது போல் தோன்றுகிறது. அப்பொழுது என் உடல் பூராவும் ஒரு நடுக்கம் பரவு கிறது. அந்த நாட்களில் நானும் பெரிய வளாக ஆன பின் ஒரு ஆசிரியையாக உத்தியோகத்தில் அமர்ந்து என் வஞ் சத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணியதுண்டு.

பா:—நக்ஷத்திரமாக ஆகியிரா விட் டால் ஒரு ஆசிரியையாக நீங்கள் ஆகி யிருக்கக் கூடுமோ?

க:—சந்தேகமில்லாமல்! இப்பொழுது கூட, சில சமயங்களில், நான் அக்கம் பக்கத்திலுள்ள சிறுவர்-சிறுமியர்களைக் கூட்டி அவர்களுக்குப் பாடம் சொல் லிக் கொடுக்கிறேன்.

பா:—குழந்தைப் பிராயம் தான் எவ் வளவு இன்பமாக இருக்கிறது! கல்ப ஞஜி! எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்!

க:—அது நிச்சயம் தான், பால்ராஜ். இப்பொழுது பாருங்கள், எனக்கு ஐந்து சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உள்ளனர். நான்தான் எல்லோரையும் விட சிறியவள். நாங்கள் சிறியவர்க ளாக இருந்த போது பல கதைகளைப் பற்றிக் கனவு காண்பதுண்டு.-தேவதை கள், பிசாசுகள் போன்றவைகளின் கதைகள், தோட்டங்களிலிருந்து பழங் கள் பறிப்பது போன்றும், எங்களைத் தோட்டக்காரன் துரத்துவது போன் றும்—அதைப் பற்றி நாங்கள் அந்த நாட்களில் கவலைப்பட வேண்டும்? இப் பொழுது இங்கு? என்னுடைய எல்லா சகோதர சகோதரிகளிடமிருந்தும் பல மைல்களுக்கு அப்பால், என் ஒருத்தி யைப் பற்றிய பல கவலைகளே நிறைந்த வளாக இருக்கிறேன், போதுமா?

வோத்ரா
பெண்கள் போற்றும் டானிக்
கேஸரி குடீரம்
லிமிடெட்,
மதருஸ்—14.
தமிழ்நாடு ஏஜெண்டுகள்:
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலகோபுர வாசல்
மதுரை.

இம் மாதம் 11ந் தேதி வெளிவர விருக்கும் ''மாங்கல்யம்'' தமிழ்ப் படத்தில் ஏ. பி. நாகராஜன் முக்கிய பாகத்தில் நடித்திருக்கிறார்.



பா:—தங்களுடைய சகோதரர்கள் என்ன செய்கிறார்கள், கல்பனாஜி?

க:—என் சகோதரர்களில் இருவர் ராணுவத்திலும், இருவர் ஆகாய விமானப் படையிலும், ஒருவர் அரசாங்க "அட்மினிஸ்டிரேட்டிவ்" வேலையிலும் இருக்கிறார். இப்பொழுது அவர் ஜப்பானில் இருக்கிறார்.

பா:—நீங்கள் ஒரு ஆணாக இருந்தால் என்ன வேலையில் இருப்பீர்கள்?

க:—ஆணாக இருந்தால் நான் கடற்படையில் சேர்வேன்.

பா:—ஏன்? கடற்படை வாழ்க்கையை நீங்கள் விரும்புகிறீர்களா?

க:—கடற் பிரயாணங்களை நான் விரும்புகிறேன். எப்பொழுதாவது மற்ற தேசங்களுக்குச் செல்ல நேரிட்டால், நான் கடல் மூலமாகப் போவதையே விரும்புவேன்.

பா:—ஏன்? அயல் தேசங்களுக்குச் செல்ல உத்தேசித் திருக்கிறீர்களா?

க:—நிச்சயமாக, ஆமாம்! அதிலும் முக்கியமாக தூரக்கிழக்கு நாடுகளுக்கு, அதாவது ஜப்பான், சைனா, ஜாவா, சுமத்திரா முதலான தேசங்களுக்கு.

பா:—உங்களுடைய சிறு பிராயத்தைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோம். உங்களுடைய மெட்ரிக் பரீக்ஷையை லாகூரில் முடித்தீர்கள்....அதற்குப் பிறகு?

க:—பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு இண்டர் பரீக்ஷையை பாடலா காலேஜிலிருந்து எழுதினேன்.

பா:—அதைப் பற்றி ஏதாவது ருசிகரமான விஷயம் உண்டா?

க:—விசேஷமாக ஒன்றுமில்லை. வகுப்பில் நாங்கள் நான்கு பெண்களே இருந்தோம். மற்றவர்கள் ஆண்கள். அதுவும் உருது வகுப்பில் நான் ஒருத்தியே பெண். அதனால் என்னுடைய கஷ்டமான நிலைமையை நீங்களே ஊகித்துக் கொள்ள முடியும்.

பா:—ஏன்? உங்களுடைய புரொபஸர்கள் போதுமான அளவு கண்டிப்பாக இருக்க வில்லையோ?

க:—எங்களுடைய சரித்திரப்பேராசிரியர் எப்பொழுதும் மாணவர்களுடைய கட்சியை ஆதரிப்பவர். அவர் வகுப்பில் சரித்திர சம்பந்தமான தேதிகளை கேட்பது வழக்கம். அவருடைய "இரண்டாம் பானிபட் சண்டை எப்பொழுது நடந்தது? 'சார்ட்டர் ஆக்டுகள்' எப்பொழுது நிறைவேற்றப் பட்டன?" போன்ற கேள்விகளுக்கு யாவரும் பதில் சொல்லத் தயாராயிருக்க வேண்டும். அதற்குச் சரியான பதிலளிக்க முடியாவிட்டால் வகுப்பின் கேலிக்கு ஆளாவோம்.

பா:—அதுதான் பள்ளிக்கூட அல்லது கல்லூரி வாழ்க்கை! அவ்வாறு இல்லாவிடில் மந்தமாகவும், சந்தோஷமில்லாமலும் இருக்குமல்லவா?

க:—மாணவர்களுக்கு அது சரிதான். நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால் தான் அந்த நிலைமையை உணர முடியும்.

பா:—இண்டருக்குப் பிறகு என்ன செய்தீர்கள்?

க:—இண்டருக்குப் பிறகு சிம்லாவிற்கு நாங்கள் வந்தோம். அங்கு செயிண்ட் பீட்ஸ் கல்லூரியில் சேர்ந்தேன். என்னுடைய பீ.ஏ., கடைசி வருஷத்தில்தான் சேத்தன் ஆனந்தை நான் கண்டது; அவரும் என்னை ஒப்பந்தம் செய்து கொண்டது. நானும் பம்பாய்க்கு வந்தேன்.

பா:—கல்பனஜி, நீங்கள் சிம்லாவில் சந்தித்த முதல் நடிகை மீனுஷோரி என்றும், பம்பாயில் நிம்மி என்றும் கூறினீர்களே?

க:—ஆம், அதில் பொய் ஒன்றுமில்லை.

பா:—இப்பொழுது சொல்லுங்கள், பம்பாயில் நீங்கள் சந்தித்த முதல் கதாநாயகன் யாரென்று?

க:—ஓ........நல்லது பால்ராஜ்...........உங்கள் காதில் அதை ரகஸியமாகக் கூறுகிறேன்.

பா:—அப்படியே செய்யுங்கள்.

க:—(தாழ்ந்த குரலில்) தேவ்.

பா:—ஒ........தேவ்!........அதில் ஒளிப்பதற்கு என்ன இருக்கிறது? நீங்கள் பம்பாயில் சந்தித்த முதல் நக்ஷத்திரம் தேவ் ஆனந்த் என்பதை உரக்கச் சொல்லுங்கள்.

க:—(உரக்க). பம்பாயில் நான் சந்தித்த முதல் கதாநாயகன் தேவ் ஆனந்த்.

பா:—அது தான்! அப்படித்தான்! நீங்கள் “பாஸி”யில் நடிக்க ஒப்பந்தமான போது, தேவ் ஆனந்த் தங்களுடன் நடிக்கக்கூடும் என்று உங்களுக்குத் தெரியுமா?

க:—ஆம், எனக்குத் தெரியும்.

பா:—அப்பொழுது உங்களுக்கு எப்படி இருந்தது?

க:—முக்கியமாக ஒன்றுமில்லை.

பா:—நீங்கள் உண்மையைக் கூறவில்லை. [தொடர்ச்சி 61-ம் பக்கத்தில்]

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜென்ஸீஸ். 37, ஜானிஜான்கான் ரோடு. திருவல்லிக்கேணி. மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு. நீலகிரிக்கு சோல் ஏஜெண்டுகள்: B. பாலபட்டாபி செட்டியார் (1933ல் ஸ்தாபிக்கப்பட்டது) கோயமுத்தூர்

பொதுஜனம் பேசுகிறார்

* திரையுலகம் திருந்துமா ?

கற்றவர்கள் படத்துறையி
  லிறங்க வேண்டும்
கற்பிழக்கு மாதர்தமை
  காக்க வேண்டும்
மற்றவர்கள் இச்சேவைக்
  குதவ வேண்டும்
மக்களுடை மனப்போக்கு
  மாறவேண்டும்,
காமுகர்கள் கட்டோடு
  அழிய வேண்டும்
காதல் கட்டம் அளவோடு
  காட்ட வேண்டும்
பாமரர்கள் பகுத்தறிவு
  கொள்ள வேண்டும்
பலருக்கு ஏற்ற படம்
  எடுக்க வேண்டும்
படுக்கைஅறை படத்துறைவிட்
  டகல வேண்டும்
பலர் மனமும் மகிழக் கதை
  அமையவேண்டும்
உடுக்கை தட்டும் பேயாட்டம்
  ஒழியவேண்டும்
உணர்ச்சியுடன் பதம்பிடிக்கும்
  நடனம் வேண்டும்
ஆதிமுதல் பாடுவதை
  அளக்க வேண்டும்
அழுகை கட்டம் அவசியமா
  யென்றாய வேண்டும்
நீதிமன்றம் வேண்டியபோ
  தெடுக்கவேண்டும்
நீண்டசுருள் காட்டுவதை
  நிறுத்த வேண்டும்
நிலையில்லா பணத்தாசை
  யழியவேண்டும்
நிர்வாண கோலங்கள்
  மறைய வேண்டும்
கலையுலகம் முன்னேறிச்
  செல்ல வேண்டும்
கல்வியுடன் கலைத்துறையுங்
  கலக்கவேண்டும்

சி. தேவகி,
திருநாகேஸ்வரம் போஸ்டு.

"டப்பிங்" தேவை

சென்ற சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த 'டப்பிங்' படங்களைப் பார்த்த போது, 'டப்பிங்' படங்கள் மீதே வெறுப்பு ஏற்பட்டது. அந்த முறையில் படங்கள் வெளியிடப் பட்டன. அந்த 'டப்பிங்' படங்களில் தமிழைக் கொலை செய்து, வாயசைப்புக்கும் வசனத்திற்கும் பொருத்தமில்லாமல் 'டப்பிங்' செய்திருந்ததால் ஜனங்கள் 'டப்பிங்' படத்தின் மீதே வெறுப்படைந்தனர். ஆனால், சென்ற சில மாதங்களுக்கு முன் வெளிவந்த, 'ரத்னதீபம்'', "அவன்" போன்ற படங்களின் 'டப்பிங்'கைப் பார்க்கும் போது சிறந்த முறையில் டப்பிங் செய்த படங்கள் தேவை என்று தான் தோன்றுகிறது. ஏனென்றால் "ரத்னதீபம்", "அவன்" ஆகிய படங்களைப் பார்க்கும் போது 'டப்பிங்' படம் என்ற நினைவே வரவில்லை. அவ்வளவு சுத்தமாக வாயசைப்புக்கு ஏற்ற வசனம் அமைத்து தமிழையும் நன்றாகப் பேச வைத்திருக்கிறார்கள், அதன் தயாரிப்பாளர்கள். தனித்தமிழ்ப் படமாக ஏராளமாகப் பொருட்செலவு செய்து தயாரித்து தமிழைக் கொலை செய்து வெளியான "ஆன்" படத்தைக் காட்டிலும், "ரத்னதீபம்", "அவன்" படங்கள் போல சிறந்த முறையில் டப்பிங் செய்து வெளியிட்டால் வீண் பொருட்செலவு ஏற்படாது; காலமும் வீணாகாது. நல்ல முறையில் 'டப்பிங்' செய்து படங்களை வெளியிட்டால் ரஸிகர்கள் ஆதரவு கொடுப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

'மைனாவதிப் பிரியன்', கமுதி.

தாவணிப் பஞ்சம்!

என் அபிமான நடிகை சாவித்திரி நடித்த படமென்றால் அதற்கு ரஸிகர்களிடை தனி மௌஸ் இருக்கிறது. இது வரை அவர் நடித்துள்ள எல்லாப் படங்

களும் கச்சிதமாகவே இருந்தன. விஜயா புரடக்ஷன்ஸாரின் "சந்திர ஹாரம்" படத்தில் அவர் சஞ்சலாவாகத் தோன்றி, முதல் முதல் சந்தன ராஜனை தோட்டத்தில் சந்திக்கும் கட்டத்தில், "என்னைப் பார், என் அழகைப் பார்"என்று கேட்கும் இடத்தில் தியேட்டரில் உள்ளவர்கள், "அடடே, இவளுக்கு, தாவணிக்குக் கூட பஞ்சமாகப் போய் விட்டதே" என்றும் இன்னும் ஆபாசமாகவும் திட்டுகிறார்கள். அவ் வார்த்தைகளை என்னால் சகித்துக்கேட்க முடியவில்லை. எனக்குப் பெருத்த அவமானமாகவும் இருக்கிறது. ஆகவே,என் அபிமான நடிகையையும், மற்ற நடிகைகளையும் இனிமேலாவது சரியான ஆடை அலங்காரத்தோடு நடிக்கும்படியாக வேண்டுகிறேன்.

வி. பத்மாவதி, தஞ்சாவூர்.

கொலை செய்யாதீர்கள்

சென்ற வருட டிசம்பர் "குண்டூசி" இதழில் 'பரிசு பெற்ற கடித'த்தை மிகமிகப் பாராட்டுகிறேன். இவ்விதம் பாராட்டுகின்ற நேரத்திலே மேற்கண்ட கடிதத்தை எழுதியவருக்கும், அந்த நடிகருக்கும், தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி பாஷைகளின் படத் தயாரிப்பாளர்களுக்கும், டைரெக்டர்களுக்கும் ஒன்று கூற விரும்புகிறேன். அதாவது, பிரபல தமிழ் நடிகர் பாலசந்தர் தெலுங்கு "இன்ஸ்பெக்டரி"ல் தெலுங்கு பாஷையைக் கொலை பண்ணி பேசியிருப்பதாக அக்கடிதம் கூறுகிறது. இது ஓர் பெருங் குற்றமே. ஆனால், இங்கு தமிழ்ப் படங்களிலே ரேலங்கி, சிவராவ், ஸி. எஸ். ஆர். லக்ஷ்மிகாந்தம் இன்னும் சில தெலுங்கு நடிகர்கள் தமிழ் பாஷையில் உள்ள வார்த்தைகளுக்கு தங்களுக்கே அர்த்தம் புரியாது தமிழைக் கொலை பண்ணி கண்ணாவியாக நடிக்கிறார்கள். இதோடு, முன்னவர்கள் ஹாஸ்ய பாகத்தை ஏற்றுக் கொண்டு அந்த ஹாஸ்யத்துக்கே கொஞ்சங் கூட சுவையின்றி நடித்து ரஸிகர்களின் பொறுமையை அளவின்றிச் சோதிக்கின்றனர். ஹிந்தி படத் தயாரிப்பாளர் தயாரித்து வெளியிட்ட "ஆன்" தமிழ்ப் படத்தில் தமிழைக் கொலை செயதிருப்பதைக் கண்டு தமிழ் நாடு வருந்தியது. அதோடு, மலையாள நடிகர்கள் சிலர் தமிழ்ப் படங்களிலே தமிழைக் கொலை பண்ணித்தான் நடித்து வருகின்றனர். மொத்தத்தில், இதற்குப் பரிகாரம் என்னவென்றால், அந்தந்த பாஷை பேசும் நடிகர்கள் அவர்கள் பாஷைப் படங்களிலே நடித்துக் கொள்ள வேண்டும். அல்லது தன் தாய் பாஷை தவிர வேறு எந்த பாஷைய நன்கு பேசக் கற்றிருக்கிறாரோ அந்த பாஷைப் படங்களில் நடிக்கலாம். இதற்கெல்லாம் முதலாவதாக நம் பட முதலாளிகள், டைரெக்டர்கள் எந்தெந்த பாஷைப் படங்களைத் தயாரிக்கப் போகிறார்களோ, எப்படிப்பட்ட நடிகரானாலும் சரி, அந்த பாஷையை நன்கு கற்றறிந்த நடிகர்களையே தேர்ந்தெடுத்து இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பாஷைக்கும் பங்கம் விளைவிக்காது நல்ல படங்களைத் தயாரித்து வெளியிட வேண்டுகிறேன்.

எம். பி. மூர்த்தி,
பாளையங்கோட்டை.

முன்வருவார்களா!

பண்டைக்காலததில் தமிழகம் பலவித கலாசாரங்களைப் பெற்று உயர்ந்த நாகரிக மேம்பாடும் விளங்கப்பெற்று, சீரும் சிறப்புடன் விளங்கியது என்பதற்குப் பல சங்க நூல்களும், செப்பேடுகளும் போதிய சான்றுகளாகும். ஆனால், தற்காலத்திலோ அக் கலாசாரமும் நாகரிகமும் மேனாட்டின் நாகரிகப் பாணியில் இழுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்பதற்கு இக்காலத்தில் நாம் காணும் தமிழ் பேசும் படக் காட்சிகளே சாட்சிகளாகும். படத்தில் காணும் நடிகைகளின் ஆபாச முறையில் அமைந்திருக்கும் ஆடைகளையும், அப்பெண்கள் நடனம் ஆடும் விதத்தையும் காணும்பொழுது உள்ளபடியே மிகவும்

☆ பரிசு பெற்ற கடிதம்.

எழுதியவர்:

சி. தேவகி,

திருநாகேஸ்வரம் போஸ்ட்,

(பூந்தமல்லி வழி)

வருத்தம் தரக்கூடிய முறையில் அவை அமைந்திருக்கிறதைக் காண்கிறோம். படங்களைத் தடை செய்ய "ஸென்ஸார் போர்டு" அமைந்திருப்பது போல இது போல் பண்டைக் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் அழிக்கும் பேசும் படக் காட்சிகளையும் தடை செய்ய இந்த ஸென்ஸார் போர்டு கவனிக்க முன்வரவேண்டும்.

கே. பி. ராமானுஜம், சிதம்பரம்.

போதும் அடுக்குமொழி!

நம்முடைய படமுதலாளிகள் இருக்கிறார்களே, அவர்களை அசல் சிறு குழந்தைகள் என்றே சொல்லலாம். ஒரு குழந்தை அழ ஆரம்பித்தவுடன் அதன் காரணம் தெரியாமலேயே, மற்ற குழந்தைகளும் அழ ஆரம்பிக்கின்றன அல்லவா? அதுபோல, ஏதாவது ஒரு படம், ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் வெற்றி பெற்றுவிட்டால் (அப்படத்தில் வேறு பல நல்ல அம்சங்களுமம் இருந்திருக்கும்) அதையேதான் தங்கள் படத்திலும் கையாண்டு படம் பெட்டிக்குள் சேரவேண்டிய நிலையைத் தாங்களாகவே உண்டாக்கிக் கொள்கின்றனர். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மோகம் அடுக்குமொழி அலங்காரமொழி, சிங்காரமொழி முதலிய மொழிகளில். கனலும், அனலும் தெறிக்கும் அடுக்கு மொழி வசனங்கள் அர்த்தத்தைக் கெடுக்கிறது. நடிப்பின் தரத்தைக் குறைக்கிறது. பாமர ஜனங்களுக்கு அது புரிவதே இல்லை. பொதுஜனங்களுககும் பட உலக பிருமாக்களுக்கும் நடுவில் தபாலாபீஸ் வேலை செய்யும், பத்திரிகைகள் பட முதலாளிகளுக்கு புத்தி கூறவேண்டும். அர்த்தத்தை அனர்த்தமாக்கும் ஆபாசமான ஆனால், ஆவேசமான அடுக்கு மொழியைவிட நடிப்புக்கும் முகபாவத்துக்கும் பிரதான்யம் கொடுங்கள் என்று கூறவேண்டும். "ஐயோ, போதும் அடுக்குமொழி!" என பொதுஜனங்களும் பத்திரிகைகள் மூலமாக பட உலகத்தின் காது கேட்கும்படியாகக் கூச்சலிடவேண்டும்.

எ. ராமசாமி.

கோமாளித்தனம்

இப்பொழுது வரும் தமிழ்ப் படங்களில் 'ஹாஸ்யம்' என்ற பெயரில் கோமாளித்தனத்தைப் புகுத்தி வருகிறார்கள் சில டைரெக்டர்கள். உதாரணமாக, பல சிறந்த படங்களில் நடித்துள்ள என். டி. ராம ராவை, "பணம் படுத்தும் பாடு" தமிழ்ப் படத்தில் ஒரு கோமாளியாக்கினார்கள். அது போலவே சோக ரஸ நடிகரான நாகேஸ்வர ராவ் "சக்ர பாணி" தெலுங்கு படத்தில் ஒரு கோமாளியாக நடித்திருக்கிறார். இப்படத்தில், பானுமதியின் போட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு, அவர் பாட்டுப் பாடிக்கொண்டு நடனமாடும்போது நாகேஸ்வர ராவ் கோமாளித்தனத்தின் உச்ச நிலையை அடைந்து விடுகிறார். சமீப வெளியீடான "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி"யில் சிவாஜி கணேசனும் இப்படித்தான் சித்தரிக்கப் படுகிறார். இவை நமக்கு அபோதைக்கு ஹாஸ்ய விருந்து அளிப்பதா யிருப்பினும் சிறந்த குண சித்ர நடிகர்கள் இம்மாதிரி கோமாளிகளாக மாறுவது ரஸிகர்களுக்கு மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. இனியாவது டைரெக்டர்கள் 'கோமாளித்தனத்திற்கும்' ஹாஸ்யத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொண்டு படங்களை டைரெக்ட் செய்வார்களென நம்புகிறோம்.

என். வி. எஸ். மணியன்,
சென்னை—17.

தமிழுக்கு ஒரு இழுக்கு

சிந்தனை யென்ற பெயரிலே வாயில் வந்ததை யெல்லாம் வரைந்து தள்ளும் சினிமாக் கலைஞர்கள், தமிழ்ப்புலவர்களை மட்டந் தட்டி, கேவலமான நடையில் அவர்களை இகழவும் துணிந்துவிட்டார்கள் திரையிலே. ஆம். சமீபத்தில் வெளி வந்துள்ள "மனோகரா"வில்தான். அரச சபையின் அலங்கார மண்டபத்திலே அலங்கார ஆரணங்கின் ஆட்டத்திலே அடிமையாகும் ஆடவர் பலரிலே தமிழ்ப் புலவனும் ஒருவனும். அவனுக்குக் கொடுத்திருக்கும் பாட்டிலே "கடன் சொல்லலாமா" என்று கேட்கிறான் அந்தக் காரிகையிடம். என்ன துணிச்சல், மங்கையின் மந்தகாசச் சிரிப்பிற்குத்தன் சொந்த புத்தியை அதுவும் 'புத்தியும் புகழும்' உடைய தமிழ்ப் புலவன் இழந்துவிட்டானா? எக்காலத்திலு மில்லை. மோகக்கிறக்கத்தினால் மோகனாங்கிகளிடம் மோகங்கொண்டு எந்தப் புலவனும் இதுவரை திரிந்ததும் இல்லை,



"மாங்கல்யம்" தமிழ்ப் படத்தில் ஏ. பி. நாகராஜனும், பி. எஸ். சரோஜாவும் தோன்றும் இந்தக் காட்சியைக் காணலாம்.

திரியப் போவதும் இல்லை; காரிகையிடம் கடன் சொல்லும் அளவுக்கு அவன் கசடனுமல்ல. அன்றாடம் ஆகாரமில்லாது அவதிப்பட்ட அமரகவி பாரதி வாழ்ந்த வரலாற்றை மறந்தார் போலும், "மனோகரா"வுக்கு அப்பாட்டை அமைத்துக் கொடுத்த கவிஞர். புத்தியும் புகழும் உடைய புலவன் எத்தனை வறுமைக்கு இலக்கானாலும் புத்தியைப் பூவையரிடம் அடகு வைத்து அவளின் புன்சிரிப்பின் விலைக்குக் கடன் சொல்லும் அளவுக்குக் காமாந்தகாரனாக இருக்க மாட்டான். புத்தியும் புகழும் படைத்த புலவர் அத்தனை பேர்களும் எதிர்த்து முரசொலிக்க வேண்டும். இதை அரசினருக்கும் அறிவிக்க புலவர் அனைவரும் ஒன்று சேரீர்.

வீ. அரங்கநாதன், நீடாமங்கலம்.

முன் வரட்டும்!

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியைப் பொருத்துள்ளது. அறிவு வளர்ச்சி பெற கல்வி மிக மிக முக்கியம். கிராமங்களை அதிகம் கொண்ட நாடு இந்தியா. கிராம முன்னேற்றம்தான் இந்தியாவின் முன்னேற்றம் என அண்ணல் காந்தி அடிக்கடி நமக்கு அறிவுறுத்தியுள்ளார். கிராமங்கள் முன்னேற்றம் அடைவேண்டுமாயின் மக்களின் அறிவு வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு மிக அவசியமானது கல்வி. இக்கல்வியை பள்ளிகள், பத்திரிகைகள் மூலமாக மக்கட்கு போதிக்க உழைப்பும், காலமும் அதிகம் தேவை. ஆனால், திரைப்படங்களின் மூலம் மிக விரைவாகவும் எளிதிலும் அப்பணியைச் செய்து முடிக்கலாம். ஆகவே, தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரும் இவ்வெண்ணத்தை மனதில் கொண்டு, கல்வி போதனையூட்டும் படங்கள் தயாரிக்க முன் வந்தால் நம் நாடு விரைவில் முன்னேற்றமடையும் என்பதில் சந்தேகமில்லை. அப்படிச் செய்ய நமது படத் தயாரிப்பாளர்கள் பலரும் முன் வருவார்களா?

"கிரீன்லாம்ப்", தென்காசி.

அசோகா புரொடக்ஷன்ஸார் தயாரித்து வரும் ''பத்மினி'' தமிழ்ப் படத்தில் இந்த அழகிய புது முகம் மோஹன் நடிக்கிறார்.

கவனத்திற்கு...

சமீப காலமாகவே, வெளிவரும் படங்களில் பெரும்பாலானவை படு தோல்வியடைந்து வருவதைப் பார்க்கிறோம். இதன் விளைவாக, இன்று படவுலகில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமைக்குக் காரணம் என்ன? இப்போது பொதுமக்கள் ரஸனை உயர்ந்து விட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. எந்தப் படத்தையும் மக்கள் இப்போது எடைபோட்டுப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். அதன் விளைவாகத்தான் ஜனரஞ்சகமற்ற படங்களெல்லாம் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன. பொதுவாக ஒரு படம் வெற்றியடைவதற்கு முக்கிய காரணம் கதைதான். இதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிறோம். மக்கள் பார்த்துப் பார்த்து சலித்துப் போன கதைகள்; ஒன்றையொன்று தழுவி எழுதப்பட்ட கதைகள்; மற்றவற்றிலிருந்து காப்பியடித்து கதம்பமாக்கிய கதைகள்; பொருத்தமற்ற, உண்மைக்கு முரணான, மக்கள் வெறுக்கக் கூடிய, ஆபாச உணர்ச்சிகளைக் கிளறும் சம்பவங்கள் நிறைந்த கதைகள், இவைகளைத்தான் பலர் படமாக்கி வருகிறார்கள். ஏதேனும் ஒரு கதையை வைத்துக்கொண்டு நல்ல நடிகர்களையும் அதில் நடிக்கச் செய்து, அபாரமான காட்சி ஜோடனைகளையும் அதில் இணைத்து படமெடுத்துவிட்டால், அது வெற்றிகரமாக ஓடி நல்ல வசூலைப் பெற்றுவிடும் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது! ''சந்திரஹாரம்'' என்ற படத்தை எடுத்துக் கொள்வோம். மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படம்தான் அது. ஆனாலும் படுத்துவிட்டது. அடுத்தபடியாக, விளம்பரத்தைக் கொண்டு ஒரு படத்திற்கு நல்ல வசூலையும் வெற்றியையும் பெற்றுவிடலாம் என்று கனவு காணுவோரும் உண்டு. அந்த எண்ணத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்து விட்டது, ''உலகம்''. ஜோடனைகளைக் கொண்டோ, ஆடம்பரமான விளம்பரத்தைக் கொண்டோ பொதுமக்களை ஏமாற்றிவிட முடியாது என்பதை நிரூபித்து விட்டன, ''சந்திரஹார''மும் ''உலக''மும். அவைகளைக் கண்டு மக்கள் ஏமாந்த காலம் மலையேறிவிட்டது. இன்று அவர்கள் படங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளிக்கும் அளவுக்கு 'கிரிடிக்'குகளாக மாறிவிட்டார்கள். இதை நம் பட உற்பத்தியாளர்கள் நன்றாக உணர்ந்துகொண்டு, அதற்கேற்றவாறு இனி படங்களைத் தயாரிக்க முற்படவேண்டும்.

'' கிரிடிக் '', எரவாஞ்சேரி.

உணரட்டும்

''நல்லவராம் ஒரு ஆணோடு பெண்ணும் நாடிடும் போது நீதி—இதை நாட்டினிலே அழகாய் சொல்லும் கதைதான் இல்லற ஜோதி.''—மாடர்ன் தியேட்டர்ஸ் ''திரும்பிப் பார்'' என்னும் படத்தின் மூலம் இப்பாட்டை வெளியிட்டார்கள். ஆனால், தற்பொழுது ''இல்லறஜோதி'' என்னும் படம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அந்தப் பாட்டிற்கு மாறாக இருக்கிறது கதை. இக்கதையில் ஓர் ஆண், தன் மனைவி இருந்தும் இன்னொருத்தியைக் காதலிக்கிறான். இது பொது நீதி அல்ல. இதை மாடர்ன் தியேட்டர்ஸார் உணரட்டும்.

பி. ஆர். ஜனார்த்தனன், திருச்சி.

கலப்பட சிருஷ்டி

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் நாடகக் கலையில் சிறந்து விளங்கும் மகான். அவரது நாடகங்களில் தலை சிறந்தது "மனோகரா". பாரத நாட்டின் பண்புகளாகிய, பதிபக்தி, புத்திர விசுவாசம், அடக்கம், பதிவிருதைகளின் பெருமை முதலிய சீரிய கருத்துக்களை ஒருங்கே திரட்டி, உருட்டி வார்க்கப் பட்ட மூல கதையை திரைக் கதையாக மாற்றி, மாசுபடுத்தி வெளியிட்டிருப்பது வருந்தத்தக்க விஷயம். தனயனின் பணிவையும், வீரத்தையும், பெண் இனத்தின் பதி பக்தியையும், அமைச்சரின் தீர்க்கதரிசனத்தையும், அரசனின் சபல புத்தியையும், "வீழ்ந்த தாயகம் விழித்தெழும் இன உணர்ச்சி", "வடநாட்டின் வஞ்சகம்" என்பது போன்ற அடைமொழிகளுக்கு 'ஒப்பிட்டு'ப் பார்க்கச் சொல்லுவது, மக்களின் அறிவுக்கு இடும் சவால்; நாடகப் பேராசிரியரின் கருத்துக்களுக்கு உலை வைக்கும் சூழ்ச்சி என்றுதான் ரஸிகர்கள் கருதுவார்கள். அனல், கனல் வீசும் வசனங்களால் உண்மைக் கருத்துக்களை திரித்துக் கூறுவது, தற்கால சினிமாப் படங்களில் காணபபடுவது-வெட்கப்பட வேண்டிய விஷயம். "மனோகரா" கதையை பணமே பிரதானம் எனக் கருதியும், மறைமுகப் பிரசார சாதனமாகவும், கட்சிக் கொள்கைகளைப் பரப்ப ஒரு வாய்ப்பாகவும் செய்து கொண்டு, மூலக் கதையில் காணப்படாத கருததுகளையும், கற்பனைகளையும் உண்டாக்கிக்கொண்டும், "வட நாட்டு வஞ்சகம்" என்ற பாத்திரத்தில் தேவையில்லாத "உக்ரசேனன்" பாகத்தைத் திணித்தும், பொதுமக்களிடையே "விழிபபு உணர்ச்சி"யை ஏற்படுத்துகிறோம் என்று பறைசாற்றிக்கொண்டு, ஓர் இனத்தைத் தூஷிக்கும் வேலையிலேயே ஈடுபட்டுள்ள இன உணர்ச்சி வசப்பட்டுள்ள சிலர் செய்துள்ள இந்த "குள்ள நரி சூழ்ச்சி"கள் தான் திரைப்பட "மனோகரா"வில் காணப்படும் சிறந்த கருத்துகள். இன உணர்ச்சியால் குதித்தெழும் சிலருடைய உள்ளங்களுக்கு உவகை தரும் ஒரு கலப்பட சிருஷ்டி தான் திரைப்பட "மனோகரா!"

எஸ். மதுராம்பாள், சென்னை-17.

இன்றைய சினிமா உலகம்

"தமிழ்ப்பித்தன்"

இன்றைய சினிமா உலகம் மந்தமான நிலையில் உள்ளது என்றே சொல்ல வேண்டும். 1947ம் வருடத்திற்குப் பின்னர் சினிமா உலகத்தை ஒரு புகைப் படலம் சூழ்ந்து கொண்டது என்றுகூடக் கூறலாம். அவ்வப்போது சில சில படங்கள் பாலைவனத்தில் காணப்படும் ஒரு சில பசுஞ்செடிகள் போலக் காணப்படுகின்றன. வெகுவான படங்கள் தங்கள் தரத்தை இழந்துவிட்டன.

மிகப் பழைய படங்கள் எனக் கருதப்படுவதும் மிகப் பெரிய படங்கள் என்று கருதப்படுவதுமான "ஆர்யமாலா," "ஜகதலப்ரதாபன்", "அசோக்குமார்", "சிந்தாமணி", "சிவகவி" "ஹரிதாஸ்", முதலிய படங்கள் ஒவ்வொரு நகரத்திலும் குறைந்தது பத்து முறைகளுக்கு மேலாவது திரையிடப்பட்டிருக்கும். ஆனால், இன்றும் அவைகள் "இன்பகரமான இரண்டாவது வாரம்" அல்லது "எமது மகத்தான நான்காவது வாரம்" என்று விளம்பரப் படுத்தும் அளவிற்கு ஓடுகின்றன. இதன் காரணம் என்ன? கதை அமைப்பில் முரண் இல்லாததும், திறமையான நடிகர்களும், அவர்களின் அப்பழுக்கற்ற நடிப்பும்தாம். பழைய படங்களில் நடிகர்கள் தம் திறமையை வெளிக்காட்ட எத்தகைய வேஷத்தைக் கொடுத்தாலும், தயக்கமின்றி நடிப்பார்கள். உதாரணமாக, "ஆர்யமாலா"வில் பி.யு. சின்னப்பா பல வேஷங்கள் போட்டுள்ளார். அவைகளில், பாம்பாட்டிக்காரன் வேஷம், வண்ணான் வேஷம், பண்டார வேஷம் இவை தத்ரூபம். கதாநாயகனாக நடிக்கும் ஒரு சிறந்த நபர் (நட்சத்திரம்) பாம்பாட்டியாக நடிக்க ஒப்புக்கொண்டு பாம்புக் கூடையைச் சுமந்துகொண்டு, பாம்பாட்டி மாதிரியே பேசுகிறார். அடுத்ததாக வண்ணான் வேஷம் போட்ட பொழுது துணிகளைத் துவைக்கவே செய்கிறார். பண்டார வேஷம் போடும் பொழுது சங்கை ஊதிக்கொண்டு, சேகண்டியும் அடிக்கத் தயங்கவில்லை.

ஆனால், இன்றையப் படங்களோ அவ்வாறில்லை. ஒரு படத்தில் (படத்தைக் குறிப்பிட விரும்பவில்லை, வாசகர்களே யூகித்துக் கொள்ளட்டும்) கதாநாயகன் வண்டி தள்ள வேண்டிய கட்டம். வண்டியின் அருகில் கதாநாயகன் நிறுத்தப்பட்டிருக்கிறான். வண்டியைத் தொடுகிறான்! அவ்வளவுதான்! உடனே காட்சி மாற்றம். கதாநாயகன் வண்டியைத் தள்ளிக்கொண்டு, குறிப்பிட்ட பொருளை விற்பனை செய்கிறான் என்று மக்கள் யூகித்துக்கொள்ள வேண்டும். சிறிது நேரம் அல்லது சிறிது தூரம் வண்டியைத் தள்ளினால்தான் என்ன குறைந்துவிடும்? நட்சத்திரப் பதவியின் மதிப்புக் குறைந்துவிடாது! உழைப்பில்லாத நடிப்புதான் இது.

சுமார் பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகட்கு முன்பு வெளிவந்த புதுப்படங்கள் கிராம மக்களை எளிதில் எட்டிப் பார்ப்பதில்லை. ஆதலால் கிராம மக்கள் எல்லாம் நகரங்களில் உள்ள தியேட்டர்களை நாடி வருவர். கிராமங்களிலும் சினிமாக் காட்சிகள் நடைபெறும். அறுவடை காலங்களில் "டூரிங் சினிமாக்கள்" தோன்றும். அங்கு, அக்காலத்திற்கும் பத்து வருடங்கட்கு முந்திய படங்கள், அதாவது "பக்த துருவன்", "வனராஜ கார்ஸான்", முதலிய படங்களே காட்டப்படும். இன்னும் சில இடங்களில் தமிழ்ப் பட உலகத்தின் ஆதிநாள் படங்கள்கூடக் காட்டப்படும். ஆனால் இன்றைய நிலையோ மிக வேடிக்கையாக உள்ளது. நேற்று நகரத்தில் திரையிடப்படும் ஒரு புதிய படம் இன்றோ நாளையோ கிராமத்தில் திரையிடப்படுகிறது. சில படங்கள் நகரங்களில் திரையிடப்படுவதற்கு முன்பே கூட கிராமங்களில் திரையிடப்பட்டு விடுகின்றன. (இதனால் கிராமத்தில் வாழ்பவர்கள் புதிய படங்களை உரிய காலத்தில் அல்லது விரைவில் பார்க்கக் கூடாது என்பது என் எண்ணமல்ல. அவ்வளவு தூரம், ஒரே புரொஜெக்டரைக் கொண்டு ஓட்டப்படுவதும், கீற்றினால் வேயப்பட்டதுமான தியேட்டர்களில் விரைவில் ஓடுகின்ற கேடுகாலம் தமிழ்ப் படங்களுக்கு வந்து விட்டதே என்பதுதான் என் ஏக்கம்.)

முன்னர் ஓர் இடத்தில் கூறியபடி, புதிய படங்கள் இன்றும் நான்கு அல்

ராமையா :—சாஸ்திரிகளே ; வெய்யிலுமில்லே, மழையுமில்லே, அதோ அவர்கள் ஏன் குடையைப் பிடித்துக்கொண்டு போகிருர்கள்.

சாஸ்திரியார் :—அதுவா ; பெருங்காயங்களில் போலிகள் மழைமாதிரி வர்ஷிக்கிறதால் அவைகள் தங்களின் மேல் விழாமல் இருப்பதற்காக குடை பிடித்துக்கொண்டு போகிருர்கள்.

ராமையா :—அப்படியாஞல் பெருங்காயங்களில் அசல் பெருங்காயம எது...........

சாஸ்திரியார் :—இது தெரியாதா ! **L. G.** மார்க்கு பெருங்காயம்தான் சிறந்தது. அதோ பார் அவர்கள் கடைவீதிக்குச் சென்று அசல் **L. G.** மார்க்கு பெருங்காயம் வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியுடன் செல்லுகிருர்கள்.

நாம் வாங்கும்பொழுதும் **L. G.** என்ற மார்க்கும் **லால்ஜீ கோது அண்டு கோ** என்ற விலாசமும் இருக்கிறதா என்று பார்த்து பரீக்ஷித்து வாங்கவேண்டும்.

அப்படி நாம் பரீக்ஷித்து வாங்கிஞல் மோசம் போகாமல் இருக்கலாம்.

லால்ஜி கோது அண்டு கோ

சவுக்கார்பேட்டை, மதராஸ் தலைமை ஆபீஸ் : **பம்பாய்**

லது ஐந்து வாரத்திற்குள் தமிழ்நாடு தியேட்டர்கள் முழுவதிலும் ஓடி மறைந்து விடுகின்றன. இத்தகைய நிலைக்கு யாரைப் பொறுப்பாளி ஆக்குவது? தமிழ்ப் படமுதலாளிகளையா அல்லது டைரெக்டர்களையா? ரஸிகர்களையா? அல்லது நடிகர்களையா?

இன்றையப் படங்களை ஒரு முறைக்கு மேல் பார்க்க முடிவதில்லை. அதனால் தான் இன்றைய பத்திரிகைகள்கூட சில படங்களை விமர்சனம் செய்யும் போது, ''நல்ல படம்,ஒரு முறை பார்க்கலாம்'' எனறு எழுதுகின்றன.

இன்றைய சினிமாப் பட நடிகர்கள் நடிக்கிருர்கள் என்று சொல்லவே கூடாது. பேன்ட்டும், கோட்டும் போட்டுக்கொண்டு, வாயில் சிகரெட்டும், கையில் தீப்பெட்டி சகிதமாக காட்சியளிப்புதுதான் சிறந்த நடிப்பு என்று கருதப்படுகிறது. இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. பழைய படங்களைப் பார்த்தவர்கள்,—நடிப்பின் சிகரமாக விளங்கிய ''கண்ணகி'', ''உத்தமபுத்திரன்'', ''சகுந்தலை'', ''சாவித்திரி'' ''பக்த கௌரி'' முதலிய படங்களைப் பார்த்தவர்கள் இன்றைய சமூகப் படங்களில் காணும் நடிப்பைப் புகழமாட்டார்கள் என்றுதான் நம்புகிறேன். நடிகர்களைப் பொறுத்த அளவு, ஓரளவு தாங்கள் நடிப்பதாகத்தான் எண்ணிக் கொள்கிருர்கள். ஏனென்ருல், சாதாரணமாக, அவர்கள் வீட்டில் அணிந்திருக்கும் உடைக்கும் (வேஷ்டிக்கும்) படங்களில் அணிந்து கொள்ளும் உடைக்கும் (பேன்ட், கோட்டுக்கும்) வித்தியாசம் உண்டல்லவா? அதனுல் அது அவர்களுக்கு நடிப்பாகத் தோன்றுகிறது. ஆனுல், மொத்தத்தில், வீட்டில் சோபாவில் உட்கார்ந்திருப்பது போலத் தான் படத்திலும் சோபாவில் சொகுசாக அமர்ந்து புகை பிடித்துக்கொண்டு இருக்கிருர்கள். இதில் ''நடிப்பு'' என்று சொல்ல என்ன இருக்கிறது? சொந்த வாழ்விற்கும் சினிமா வாழ்விற்கும் வேற்றுமை இருந்தால் அல்லவா அது நடிப்பாகும்?

மேலும், இன்றைட சினிமாக்களில் கட்சிப் பிரசாரம்தான் மும்மரமாக நடைபெற்று வருகிறது. பகிரங்கமாக சில அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பெயர்களையும் அவர்களது கட்சிகளின் பெயர்களையும் பாடல்களில் திணித்து விடுகின்றனர். இந்தப் பாடல்களை சென்ஸாரால்கூடத் தடை செய்ய முடிவதில்லை போலும்! ''மாத்ருபூமி'' என்று ஒரு படம் வந்ததே, அது பலருக்கு நினைவிருக்கலாம். அதில் நாட்டு விடுதலைப் போர் நடை பெறுகிறது. அக்காலம் நமது நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம். எனவே, அத்தகைய படங்கள் தேவையாக இருந்தன. ஆனுல் இன்று அத்தகைய புரட்சிகரமான படங்கள் தேவையில்லையே! மேலும் புரட்சி என்று கூறிக்கொண்டு இன்றையப் பட உலகம் வெறியைத் தானே தூண்டுகிறது!

பொதுவாக, முதலில் கூறியதுபோல, 1947க்குப் பின்னர் பட உலகம் கெட்டே விட்டது. ஏனெனில், இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது. மக்கள் சர்க்கார் பதவியேற்றுவி ட்டதால் மக்களுக்கு எழுத, பேச உரிமை கிடைத்து விட்டது. எனவேதான், ஒரு சில கட்சிக்காரர்கள், சினிமா உலகத்தைக் கைப்பற்றிக் கொண்டு, தங்களது கட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இந்த நிலை மாறி தமிழ்ப் படத்தின் பழைய நல்ல நிலை மீண்டும் வரவேண்டும்.

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபா

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி ஸபாவின் (திருவல்லிக்கேணி) வருஷாந்திரப் பொதுக்கூட்டம் மே மாதம் 2ம் தேதி ஞாயிற்றுக் கிழமை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் நடைபெற்றது. அப்பொழுது கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: ஸ்ரீ. சேஷாச்சாரி, உப தலைவர்கள்: ஸ்ரீ. எம். ஏ. சீனிவாசன், ஸ்ரீ. இ. ஆர். துரைசாமி. ஸ்ரீ. எம். ஓ. அழசிங்கராச்சாரி, கௌரவ காரியதரிசிகள்: ஸ்ரீ. கே. ஸி. சடகோபன். ஸ்ரீ. எஸ். சுந்தரராவ். கௌரவ பொக்கிஷதார்: ஸ்ரீ. பி. பீமராவ். நிர்வாகக் குழு: ஸ்ரீமான்கள் ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி ராவ், பி. டி. பட்சி ராஜகோபாலன், ஸி. ஜகநாதாச்சாரி, என். ஸி. ரங்கராஜன், வி. கே. ஹரிஹர ஐயர், எம். என். ராமானுஜம், கே. எஸ். ரெங்கநாத ராவ், இ. ஆர். ஸ்ரீ ரங்காச்சாரி, எம். வெங்கட கிருஷ்ணன், சீ. என். சீனிவாஸன்.

[34ம் பக்கத் தொடர்ச்சி]

போல தொடர்ந்து வந்துகொண்டே யிருக்குமல்லவா?

நான் பார்வையை இழந்து பதினைந்து நாட்கள்கூட ஆகவில்லை; அதற்குள் அவள் தன் பதியையும் இழக்க நேரிட்டது!

எங்கள் ஊர் அப்பொழுது பஞ்சாயத்துப் பிராயத்திலிருந்து, முனிசிபாலிட்டிப் பருவம் அடைந்தது. கன்னிப் பெண் கல்யாணப் பிராயத்தை எட்டியதும், தந்தைக்குச் செலவு ஏற்படுவது போல, ஊர் முனிசிபாலிட்டி ஆனதும், அதன் நிர்வாகச் செலவுகள் அதிகரித்தன. அவற்றை ஈடுகட்டுவதற்காக, ஊரில் பிரபலமாயிருந்த மீன் வியாபாரத்தின்மீது வரி விதித்தார்கள். 'சாவியத்து மண்ணில் நடைபெறும் மீன் வியாபாரத்தில் ஒவ்வொரு ரூபாய்க்கும் ஓரணாவீதம் விற்பனை வரி செலுத்த வேண்டும்' என்று சட்டம் வகுத்தார்கள். அரசாங்கம் எவ்வளவு ஜாக்கிரதையாகச் சட்டம் கட்டினாலும், அதிலிருந்து தந்திரமாகத் தப்பப் பார்ப்பது வியாபாரிகளுக்கே உரித்தான குணமாயிற்றே! அப்பாவைப் போன்ற மீன் வியாபாரிகள் சிலர், இந்த வரியைச் செலுத்தாதிருக்க ஒரு புது வழி கண்டு பிடித்தார்கள். 'கரையில் வியாபாரம் செய்தால்தானே வரி செலுத்த வேண்டும்? கடலில் செய்து விடுகிறோம்' என்று ஆரம்பித்து விட்டார்கள்.

எங்கள் ஊர் ஒரு சமுத்திரக்கரைக் கிராமம். துறைமுகமல்ல; ஆனாலும், அங்கே கப்பல் போக்கு-வரவு உண்டு. கடலில் தொலைவான இடத்தில் வியாபாரக் கப்பல்களும், பிரயாணிக் கப்பல்களும் வந்து நிற்கும்; ஏற்றுமதி இறக்குமதி படகுகள் மூலம் நடைபெறும். இது மீன் வியாபாரிகளுக்குச் சௌகரியமாகப் போயிற்று. செம்படவர்களைக் கடலிலே சந்தித்துச் சரக்கை வாங்கி, அப்படியே கப்பலில் ஏற்றி அனுப்பத் தலைப்பட்டார்கள். இப்படி ஒரு சமயம் மீன் வாங்கக் கடலில் அலைந்து கொண்டிருந்தபோது, பெரும் புயல் ஒன்று தோன்றி, அப்பாவையும், அவருடன் சென்ற இன்னும் சில வியாபாரிகளையும், கரைசேர விடாது கடலிலே படகோடு மூழ்கடித்துவிட்டது!

இந்த இரண்டாவது இடியால் சிதறுண்ட அம்மாவின் மனசு, தேறி ஒன்று சேருவதற்குள், அவள் தலைமீது மூன்றாவது இடியும் விழுந்தது. 'அப்பா எப்பொழுதடா செத்து ஒழிவார்?' என்று காத்திருந்தவன்போல், அண்ணா அவர் இறந்த மறு மாதமே, யாருக்கும் தெரிவிக்காமல் ரத்னகிரிக்குப் போய் சரயூவை மணந்துகொண்டு விட்டான்.

'பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்' என்பது எத்தனை அநுபவ பூர்வமான வார்த்தை! வருஷங்கள் எத்தனையோ ஆகிவிட்டன; ஆனால், அன்று வேட்டகத்தோடு போன அண்ணா இன்றுவரையில் எங்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அதிகம் சொல்வானேன்; அவன் முகம்கூட இப்பொழுது எனக்கு மறந்துபோய் விட்டது. அண்ணா என்று ஒருவன் இருந்தான் என்பதையே மிகவும் கஷ்டத்தோடுதான் நினைவுக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறதென்றால்........?

அம்மாதான், பாவம், மனசு பொறுமல், ஆரம்பத்தில் சில காலம் பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்று ரத்னகிரிக்குப் போய்வந்து கொண்டிருந்தாள். இந்த வாய்ப்புக்கூட அவளுக்கு நெடுங்காலம் கொடுத்து வைக்கவில்லை. அவளுடைய வருகையால் அண்ணாவின் மனசு மாறித் தங்களைவிட்டுப் போய்விடுவானோ எனப் பயந்து விட்டனர் போலும், சரயூ மதனியின் பெற்றோர்; ஒரு தடவை அவளை வீட்டு வாயிலிலே நிறுத்தித் திருப்பி அனுப்பிவிட்டனர். இவ்வளவுக்குப் பிறகு அம்மாவால் என்ன செய்யமுடியும்? பேசாமல், பெற்ற பிள்ளையை மறந்து விட்டிருக்கும் துர்ப்பாக்கிய நிலைதான் அவளுக்கு ஏற்பட்டது.

பொறுமையின் உறைவிடம் அம்மா; இல்லாவிட்டால் இப்படி இடிமேல் இடி விழுந்தும் திடமாயிருந்திருக்க முடியுமா? என்னைக்கு அண்ணா வேட்டகத்தில் ஐக்கியமாகி விட்டான் என்பதை அறிந்தாளோ, அன்றே அவள் ரங்கா அத்தானிடம் சொன்னாள்: "ரங்காராம், என் வயிற்றுப் பிள்ளையே என்னை நடுச்சந்தியில் நிறுத்திவிட்டுப் போய்விட்ட பிறகு வளர்த்த பிள்ளையாகிய உன்னிடம் எவ்வித உரிமையும்

13457

நான் கொண்டாட இடமில்லைதான்; இருந்தாலும் அப்பனே, இடிமேல் இடி விழுந்து மொட்டையாகிவிட்ட இம்மரத்தில் இன்னும் துளி ஈரம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அந்த ஈரத்தின் காரணமாக அது மறுபடியும் துளிர்த்துத்தான் ஆகவேண்டும்; கண்ணற்ற இந்தக் கபோதிக்கு ஒரு கணவனைத் தேடி ஒப்படைத்துவிட்டால் என் கடமை முடிந்துவிடும், அதுவரையில் இந்த மொட்டை மரத்துக்குச் சிறிதளவு நீர் ஊற்றி உயிர் பிழைக்க வைத்திருப்பாயா?''

இந்த சந்தர்ப்பத்தில் ரங்கா அத்தானைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறிவிடவேண்டும். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற ரீதியில் நான் பேசவில்லை. உண்மையிலே அவர் உத்தமர்களுள் உத்தமர். மாந்தருள் ஓர் மாணிக்கம். என் தாயிடம் அவருக்கு ஏற்பட்டிருந்த பக்தி எல்லையற்றது. என்னிடம் அவர் கொண்டிருந்த பாசமோ கங்கு கரையற்றது. மாதுர்பக்திக்கு ராமரையும், பிதுர் பக்திக்குப் பரசுராமரையும் உவமை சொல்லலாமென்றால், வளர்ப்புத் தாயின்மீது கொண்ட பக்திக்கு ரங்கா அத்தானைத்தான் உதாரணமாகச் சொல்ல வேண்டும். அன்று அவர் அம்மாவிடம் சொன்னார்:

''கங்கா மாயி, ஒளிக்கு ஆதாரம் விளக்கு என்ற போதில் விளக்கை மறந்துவிட்டால் ஒளிக்கு ஜீவிதம் எது? நீங்கள் வளர்த்த அறிவு ஒளி ஒருபோதும் தன்னை இருளில் மூழ்கடித்துக் கொள்ளாது. நேற்றுவரை நீங்கள் என் வளர்ப்புத் தாயாக மாத்திரம் இருந்தீர்கள்; இன்று முதல் என்னைப் பெற்ற தாயாகிவிட்டீர்கள். உங்களையும், நர்மதாவையும், காப்பாற்றுவதுதான் இனி என் வாழ்வின் லட்சியமாக இருக்கும்.''

ஆம்; அதுதான் அன்று தொடங்கி அவருடைய வாழ்க்கைக் குறிக்கோள் ஆயிற்று. முன்பு அப்பா நிறுத்த மறுத்த படிப்பை, இப்பொழுது அவரே எங்கள் பொருட்டு நிறுத்தினார். உள்ளூரிலே ஒரு வேலையைத் தேடிக் கொண்டார். அதில்

கிடைத்த ஊதியத்தைக் கொண்டு குடும்பச் சக்கரத்தை ஓட்டத் தொடங்கினார்.

இது மாத்திரமா? என் கல்யாணப் பிரச்னை எழுந்தபோது—

காலமும், பருவமும் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. வருடங்கள் உருண்டன. பாவாடை உடுத்திய சிறுமியாக இருந்த நான், தாவணி அணிந்த குமரி

யாகி, சேலை அணியும் கன்னியுமானேன். நான் வளரும்தோறும் அம்மாவின் விசாரமும் வளர்ந்தது. இந்தக் கபோதிக்குக் கல்யாணம் பண்ணியாக வேண்டுமே! இந்தப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ரங்கா அத்தானைவிட்டால் வேறு யார் இருந்தார்கள் எங்களுக்கு?

ஆனால், கடையில் அழகான கண்ணாடிப் பெட்டியில் அடைத்து வைத்திருந்தால் மட்டமான சரக்கும் விலைபோய் விடும். அதே சாமானைச் சந்தையில் கொண்டுபோய் வைத்துப் பாருங்கள்; அதன் மதிப்பு எவ்வளவு குறைந்துவிடுகிறது என்பதை.

அதிலும், அன்று கல்யாணச் சந்தையில் விலைபோக வேண்டியிருந்த நான் ஒரு பெரிய 'சொள்ளை'யுடன் இருந்தேன். ஆகவே, ரங்கா அத்தான் என் கல்யாண விஷயமாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றிபெற்றுவிடவில்லை. மலர், கண்களுக்கு அழகாக இருந்தால் மாத்திரம் போதுமா? அதில் மணம் இல்லையென்றால் யார் சீண்டுவார்கள்?

இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், எனக்குப் பிள்ளை தேடிப் போன இடங்களில் அத்தானுக்குப் பெண் தரப் பலர் முன்வந்தனர். அம்மாவுக்கு, வந்த சந்தர்ப்பத்தை நழுவவிட மனமில்லை. ஆனால், அத்தானோ "நர்மதாவின் கழுத்தில் தாலியேறும் வரையில் நான் ஒருவளுக்கு மாலையிடமாட்டேன்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார்.

அம்மா சொன்னாள்: "ஆனால் ரங்கா, உன் விடாமுயற்சிகள் இப்படி வியர்த்தமாகி வருவதைப் பார்க்கையில், இந்தப் பெண் வாழ்நாள் முழுவதும் உனக்கு ஓர் பாரமாகிவிடுவாள் என்றல்லவா எண்ண வேண்டியிருக்கிறது? அப்படியிருக்க இவள் பொருட்டு உன் கல்யாணத்தை ஒத்திப் போடுவது அழகல்ல."

"அழகோ, அழகில்லையோ, மாயி; நான் பார வண்டியில் பூட்டப்பட்டுள்ள மாடு; ஏற்கெனவே வண்டியில் ஏற்றப்பட்டுள்ள பாரத்தை இறக்கிக் கொண்டால்தான், மேலும் பாரமேற்றி வண்டியை இழுத்துச் செல்லமுடியும்."

"ஆனால், நர்மதா உனக்கு என்றும் இறக்க முடியாத வெட்டிச் சுமையாகவல்லவா ஆகிவிடுவாள் போலிருக்கிறது!"

அத்தான் சிறிது நேரம் மௌனமாக எதையோ சிந்தித்தார். பிறகு முகத்தில் ஓர் புது மலர்ச்சி பொங்க, "கெட்டிக்

காரன் வெட்டிச் சுமையையும் பயனுள்ளதாக்கிக்கொண்டுவிடலாமே!'' என்றார்.

''நீ என்னடா சொல்லுகிறாய் அப்பா? எனக்குப் பிடிபடவில்லையே!'' என்று கேட்டாள் அம்மா.

''மாயி, நர்மதாவை நானே மணந்துகொண்டுவிட்டால் என்ன?''

அவருடைய தீர்மானத்தைக் கேட்டு அம்மாவும் நானும் அயர்ந்து போனோம். அம்மா சொன்னாள் : ''நன்றாயிருக்கிறதடா அப்பா, உன் முடிவு. 'குருட்டுப் பெண்ணைத் தலையில் வைத்துக் கட்டிவிட்டாள்' என்று நாளைக்கு உலகம் என்னைப் பழிக்கவா? வேண்டாம் ரங்கா, வேண்டாம். இந்த எருக்கை மொட்டு பூந்தோட்டத்தில் மலர நான் இசையேன்; இது குப்பை மேட்டில்தான் பூத்துக் குலுங்க முடியும். உன் நந்தவனத்தில் அழகும் மணமும் நிறைந்த ரோஜா மலரே பயிரிடப்பட வேண்டும்.''

''ரோஜாவில் முள் உண்டு, மாயி; எருக்கையில் அது கிடையாது. ஆகவே மணத்துக்காக முள்ளைக் குத்திக்கொள்ளுவதற்குப் பதிலாக எருக்கையின் மணத்தை நான் சகித்துக்கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்.''

''உன் தீர்மானம் தவறு, ரங்கா; மாற்றுக் குறைந்த தங்கத்தைக் கொண்டு வைரமோதிரம் செய்தால், இரண்டுமே சோபையற்றுப் போகும்.''

அத்தான் மீண்டும் சிந்தித்தார். பிறகு சொன்னார்: ''மாயி, நர்மதாவை நான் எக்காலத்தும் கைவிடக் கூடாது என்பது உங்கள் விருப்பமானால், அதற்கு இந்தப் பந்தம்தான் அவசியமாகும்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை; வேறு யாரை மணந்துகொண்டாலும் அவளை நீ கைவிடமாட்டாய் என்கிற உறுதி எனக்கு இருக்கிறது.''

''எனக்கு அந்த உறுதியில்லை, மாயி; ஏனென்றால் ஆண்களின் மனசு ரசமானிக்கு ஒப்பானது; சூடு ஏறுகிற பக்கமே அது ஓடும். நான் இன்னொருவளைக் கைப்பிடித்து அவள் நல்லவளாக இல்லையானால் நர்மதாவின் வாழ்வை நானே நரகமாக்கி விடுவேனோ என்ற விசாரம் என்னை உள்ளூர உதைக்கிறது''

இந்தப் பேச்சு அம்மாவின் வாய்க்குப் பூட்டிட்டு விட்டது.

கடைசியில் ஒரு நல்ல நாளில் நான் அந்த குணக்குன்றின் மனைவியானேன்.

இல்லற வண்டி ஓட ஆரம்பித்தது. ஆனால் அது வெறும் வண்டியாக ஓடினால் யாருக்கு என்ன லாபம்? என் வண்டி நொண்டியானாலும், நெடுங்காலம் காலியாக ஓடிக்கொண்டிருக்கவில்லை. சீக்கிரமே அதில் ஒரு பிரயாணி தொத்திக் கொண்டான்.

நான் வயிறு திறந்தேன்; ஆனால்—

பிரயாணியின் பளுவைப்பற்றி வண்டிக்கு என்ன தெரியும்? இடம் இருக்கிற வரையில் அது ஆட்களை ஏற்றிக் கொண்டுவிடும். இழுக்கிற மாட்டுக்கல்லவா பாரத்தின் பளு பளீச்சென்று தெரியும்?

நான் கருவுற்றிருக்கும் செய்தியை அறிந்ததும், அத்தகைய பளுவை உணர்ந்து கொண்டார் என் கணவர்.

[தொடர்ச்சி 82ம் பக்கத்தில்]

சிங்கப்பூர் கடிதம்

[29-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்டதால், சக்திக்கு மீறிய பொருளாதார நிலையையும் பொருட்படுத்தாது சென்னை, அடையாறிலுள்ள கலாக்ஷேத்திரத்தில் பிரஸன்னாவைச் சேர்த்து விட்டார்.

கலா க்ஷேத்திரத்தில் கடந்த இரு ஆண்டுகள் நடனம் பயின்றுவிட்டு, இரண்டு மாத விடுமுறையில் பெற்றோரைப் பார்க்க சிங்கப்பூருக்கு வந்துள்ளார் அவர்.

நான்கு வருட பயிற்சித் திட்டத்தின்படி, இரு ஆண்டுகளை முடித்துவிட்ட அவர், 1956ல் தாம் ஒரு சிறந்த நடன நட்சத்திரமாகத் திரும்பி வருவதாக குமாரி பிரஸன்னா நம்பிக்கை தெரிவித்தார். "சிங்கப்பூரில் நடனம் பயில ஆர்வம் உள்ளவர்கள் அதிகமாக இருப்பதால், இங்கு நடனப் பள்ளி அமைத்து, நான் கற்றதை அவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பேன். இதுதான் என் எதிர்கால திட்டம்" என்று அவர் தெரிவித்தார். "கலா க்ஷேத்ர வாழ்க்கை ஒரு இன்பமான வாழ்க்கை. அதை என் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாது" என்று, கலா க்ஷேத்திரத்தைப் பற்றி வினவிய போது உருக்கமான பதிலளித்தார்.

சமீபத்தில் இலங்கையில் எலிஸபெத் ராணி கண்டு களித்த கண்டி நடனத்தை சிங்கப்பூரில் ஸ்ரீ. தேவதத்தா ஜெட்லி நேர்த்தியாக ஆடிக் காண்பித்தார்.

சிங்கப்பூரில் அடுத்த பிலிம் விழா

ஜப்பானில் டோக்கியோவில் சென்ற மாதம் எட்டு நாடுகள் பங்கு பெற்று நடத்திய ஆசிய பிலிம் விழாவில் சிங்கப்பூரும் மலாயாவும் கலந்துகொண்டு படங்கள் அனுப்பின.

அடுத்த ஆசிய பிலிம் விழாவை 1955-ம் வருஷம் மே மாதம் சிங்கப்பூரில் நடத்துவதென அங்கு ஏகமனதாக முடிவாகியுள்ளது. ஆரம்பத்தில் முதல் பிலிம் விழாவை சிங்கப்பூரில் நடத்துவதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. சில வசதியீனங்களால் அது சிங்கப்பூரில் நடத்தப்படவில்லை.

அதிகப் படங்களை இறக்குமதி செய்யும் மலாயா

உலகிலேயே அதிகமான படங்கள் இறக்குமதி செய்யும் நாடுகளில் மலாயாவும் ஒன்று என சிங்கப்பூர், மலாயா பிலிம் தணிக்கை அதிகாரி திருமதி சிந்தியா கோயக் தெரிவித்தார். சென்ற வருஷம் 783 முழு நீளப் படங்கள், 412 துண்டுப் படங்களும் 218 இதர வகைப் படங்களும் இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார், பெரும்பாலான படங்கள் பிரிட்டன் அமெரிக்கா, ஹாங்காங், இந்தியா, எகிப்து, பிலிப்பைன், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டன.

இந்தியப் படங்களின் தரம்

பிலிம் தணிக்கை அதிகாரி திருமதி சிந்தியா கோயக், மலாயா மார்க்கட்டில் இந்தியப் படங்கள் விஸ்தரிக்கப்பட்டு வருவதாகவும், இந்தியப் படங்களின் தரம் முன்பைவிட வெகுவாக உயர்ந்திருப்பதாகவும், தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரு படங்களுக்குத் தடை

“ராஹீ” “மஞ்சுளா” ஆகிய இரு ஹிந்திப் படங்களையும் மலாயாவில் திரையிடக் கூடாதென்று சென்ஸார் போர்டு தடை விதித்துள்ளது.

—எஸ். சப்தகிரி சர்மா.

இறைவன் இல்லை?

[ஆசிரியர்: ஷேக்கோ; விலை: 8 அணா; கிடைக்குமிடம்: அறிவு மலர்ப் பதிப்பகம், கோவிந்தாகுடி, (Via) கும்பகோணம்.]

நாஸ்திகப் பிரசாரம் அதிகரித்திருக்கும் இது சமயம், அப் பிரசாரகர் களை மண்டையில் அடிப்பது போல வெளி வந்திருக்கிறது இப்புத்தகம். 'இறைவன் உண்டு' என்பதை ஆசிரியர் அவர்கள் நல்ல முறையில் விளக்கியிருக்கிறார். முன்னுரையில் குலாம் என்பவர் சில நாஸ்திகப் பிரசாரகர்களின் புரட்டு வேலையை அம்பலமாக்கியிருக்கிறார்.

நாநாவின் தாய்

[மூல ஆசிரியர்: எமிலி ஜோலா; மொழி பெயர்ப்பு: ரா. ஆறுமுகம்; விலை: ரூ. 4-0-0; கிடைக்குமிடம்: பிரேமா பிரசுரம், சென்னை 24]

உலகப் பிரசித்தி பெற்ற இலக்கிய மேதைகளில் எமிலி ஜோலா ஒருவர். அரசாங்கத்தின் கடும் நடவடிக்கைகளுக்கு ஆளாகியும், அஞ்சாமல் உள்ளது உள்ளபடி எழுதப் பெற்ற இந்த நாவலாசிரியரின் சிறந்த நாவல்களில் "நாநாவின் தாய்" ஒன்றாகும். நல்ல வாழ்க்கை வாழ விரும்பி ஊரைவிட்டு ஓடுகிறாள் ஒருத்தி, தான் காதலிக்கும் ஒரு ஆடவனுடன். ஆனால் அவள் வஞ்சிக்கப்படுகிறாள். சூழ்நிலை அவளை வழுக்கி விழுந்தவளாக்குகிறது. அந்த ஒருத்திதான் நாநாவின் தாய். இந்த நாவலில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும், மனிதத் தத்துவத்தின் அற்புதமான குணசித்திரப் பாத்திரங்களாக இருக்கின்றன. அக்காலத்திய பாரிஸ் போதை—போக வாழ்க்கையை ஆசிரியர் பச்சையாக வெளியிடுகிறார். மூலத்தின் சுவை குன்றாது, எளிய நடையிலே ரா. ஆறுமுகம் மொழி பெயர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது.

14 கோடி பரிசு!

[ஆசிரியர்: டி. கே. ராமபத்ர சர்மா; விலை: அணா 11; கிடைக்குமிடம்: டி. கே ராமபத்ர சர்மா, 2/27A, இருசப்ப கிராமணித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.]

இப் புத்தகத்தின்வாயிலாக, படித்தற்கான பதினான்கு வித்தைகள் யாவை? கற்றற்குரிய கலைகள் என்ன? 64 கலைகள் யாவை? ஆகிய பல விஷயங்களை வெளியிட்டிருக்கிறார் ஆசிரியர்.

மூவி பிலிம்ஸ்

புதிதாக வெளிவரும் மாதம் இருமுறை சினிமாப் பத்திரிகையாகும் இது. தனிப் பிரதி 4 அணா விலையில், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17 என்ற விலாஸத்திலிந்து வெளிவருகிறது.

நிராசை

[ஆசிரியர்: ஜேசன்; விலை: 1 அணா; கிடைக்குமிடம்: சுதந்திரம் காரியாலயம், 117, வரதாமுத்தையப்பன் தெரு, சென்னை—1.]

சிறுவர் குழாத்திற்காக வெளியிடப்பட்டிருக்கும் புத்தகம் இது. கமலி என்ற சிறுமியின் எண்ணங்கள் சில அசந்தர்ப்பங்களினால் நிராசையாக முடிவதுதான் கதையின் கருத்து.

இன்பக் கலை
(ஆண்டு மலர்)

சென்னையிலிருந்து வெளிவரும் இந்த இன மாதப் பத்திரிகை ஆண்டு மலர் வெளியிட்டிருக்கிறது. 'புகையிலை போடுவதால் தாம்பத்யஉறவை இழக்க நேரிடுகிறது' என்பதை இம் மலரிலுள்ள ஒரு கட்டுரை விளக்குகிறது. நாமக்கல் கவிஞர், சுகி, பெரியார் ஈ. வே. ரா. போன்றவர்களின் கட்டுரைகளும் கா. மு. ஷெரிபின் கவிதையும் மலரில் இடம் பெற்றுள்ளன.

மதி ஒளி

சிறுவர் சிறுமிகளுக்கான மாதமிருமுறை வெளியீடு இது. அரையணா விலையில் '117, வரதாமுத்தையப்பன் வீதி; சென்னை-1' என்ற விலாஸத்திலிருந்து ஜேசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. சிறுவர் சிறுமிகளுக்கான பத்திரிகைகளில் சினிமா விஷயங்களைப் போட்டுக் குழப்பாமல் இருந்தால் நலம்.

நான் உடைக்குங் கட்சி!

[ஆசிரியர்: "கௌந்தி"; விலை: 6 அணா; கிடைக்குமிடம்: மோகன் அண்டு கம்

பேனி, 43, லிங்கிசெட்டித் தெரு, சென்னை-1.]

சில மாதங்களுக்கு முன் கோவை நிபுணர் ஜி. டி. நாயுடு தாம் தயாரித்த ரேடியோ போன்ற பொருள்களைப் போட்டு உடைத்தாரே, அவரது செய்கையை ஆதரித்து எழுதப்பட்ட புத்தகம் இது. இந்தச் சிறு புத்தகத்திற்கு 6 அணு விலை அநியாயம் என்றே சொல்லத் தோன்றுகிறது.

ஜயந்திபுரத்திருவிழா

[ஆசிரியை: "அநுத்தமா"; விலை: ரு. 4-8-0; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை-18.]

இந்த ஆசிரியையின் நாவல்கள் தொடர்ந்து வெளி வருவதிலிருந்தே வாசகர்களிடை இவரது எழுத்துக்கு உள்ள மதிப்பு நன்கு வெளியாகிறது. ஹிந்து குடும்பங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாவல் எழுதுவதில் தனித் திறமை பெற்றிருக்கும் அவருடைய இந்த நாவலும் அத்தகைய ஒன்றுதான். சமூக அபிவிருத்தியில் பெண்களின் கடமை எத்தகையதுஎன்பதை அடிப்படைக் கருத்தாகக் கொண்டு எழுதியிருக்கிருர் இந்த நாவலை. சமூகத்தின் அஸதிவாரமான பெண்,உயர்ந்த நோக்கத்துடன் இருக்க வேண்டும் என்பதற்கு பாரதி என்ற கதா பாத்திரத்தையும், அதற்கு நேர்மாறான ரத்தினவையும் நடமாடவிட்டு நாவலை ரஸிக்கும் படி எளிய நடையில் எழுதியிருக்கிருர் ஆசிரியை. ஆண் பெண் இருபாலரும் படித்து ரஸிக்க வேண்டிய இப்புத்தகத்தை மிகவும் கவர்ச்சிகரமாக புத்தக உருவில் கொண்டு வந்துள்ளனர் அமுத நிலயத்தார்.

நடிகை கொலை

எம். எஸ். நாதன்

நான் ஒரு திருட்டு கேஸ் விஷயமாய் அந்த ஊருக்குப் போயிருந்த சமயம் தான் அநதக் கொலை நடந்தது. ஒரு நாள் இரவு எட்டுமணிக்கு இன்ஸ்பெக்டர் சோம சேகர் என்னை அழைத்தார். இன்ஸ்பெக்டர் சோம சேகரைப் பற்றி உங்களுக்குக் கொஞ்சம் அறிமுகப் படுத்திக் கொள்கிறேன். சோம சேகர் ஓர் இன்ஸ்பெக்டர் என்ருல் அவர் சுபாவம் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உகந்ததாக இருக்காது. அவர் இரத்தின புரியில் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றும்போதுதான் "டார்பிடோ" என்ற புனை பெயரில் கொள்ளை, கொலைகள் நடத்தி வந்த ஒரு பெரிய துரோகியைக் கண்டு பிடித்தார்! அதில் அதிசயம் என்னவென்ருல், குருடன் கையில் விலாங்கு அகப்பட்டது போல் தான். அப்போது நான் எழுதும் துப்பறியும் நாவல்களுக்கு அவரிடம் சில யோசனை கேட்பதுண்டு. இப்படி நானும் இன்ஸ்பெக்டரும் நெருங்கிப் பழகினேம். அதன் பின் இன்ஸ்பெக்டருக்கு பல கேஸ்களுக்குத்துப்புத் துலக்கிக்கொடுத்திருக்கிறேன். ஆனல் அவருக்கு ஏனே பதவி உயர்வு மட்டும் கிடைக்கவில்லை. என் மேல் அவ்வளவு நம்பிக்கை அவருக்குக் கிடையாது. என் மேல் மட்டுமென்ன, எல்லோரிடத்திலும் தான்.

நான் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல் கொலை நடந்த இடத்திற்கு அன்று இன்ஸ்பெக்டர் என்னைக் கூட்டிக் கொண்டு போனர்.

சுந்தரவல்லி ஒரு மாஜி நடிகை. அன்று இருந்து இன்று வரை திரையுலகிலேயே ஐந்து லட்சத்துக்கு மேல் பணம் சேர்த்துவிட்டாள் சுந்தரவல்லி. அவள் கணவன் ஒரு வியாபாரி. அவளுடைய இருபது வயது மகன் பக்கத்து ஊரில் படித்துக் கொண்டிருக்கிருன். "இன்று சுந்தரவல்லி தூக்க மருந்தை அதிகமாகத் தின்று தற்கொலை பண்ணிக் கொண்டாள்" என்று இன்ஸ்பெக்டர் சோமசேகர் என்னிடம் கூறினர்.

ஓர் அறையில் சுந்தரவல்லி மாண்டு கிடந்தாள். அருகில் தூக்க மருந்துடன் ஒரு புட்டி இருந்தது. அதில் பத்து மாத்திரைகள் இருந்தன. அவள் கையில் பின் கண்ட கடிதம் இருந்தது. "என்னுல் அதிகமாக நேசிக்கப் பட்டவர்களைப் பிரிந்து நான் உயிர் வாழ முடியாது. ஆகையால் நானே இந்த முடிவைத் தேடிக்கொண்டேன். இதற்கு யாரும் பொறுப்பல்ல. சுந்தரவல்லி."

அது சுந்தரவல்லியின் கையெழுத்து தான் என்று கையெழுத்துப் பரிசோதகர்கள் பின்னல் நிரூபித்தனர்.

அடுத்த மேஜையில், டெலிபோன் வைக்கப்பட்டிருந்தது. அவள் இறந்து கிடந்த கட்டிலருகில் ஒரு காகிதத் துண்டு கிடந்தது. அதில் "துக்ககரமான சம்பவத்தை" என்று இரண்டு வார்த்தைகள் மட்டும் எழுதப்பட்டிருந்தன. அதுவும் சுந்தரவல்லியின் கையெழுத்து தான் என பரிசோதகர்கள் கூறினர்.

கவனிக்க வேண்டிய சமாசாரங்களை கவனித்துக் கொள்ளும்படி இன்ஸ்பெக்டர் கேட்டுக் கொண்டார். நான் சுந்தரவல்லியின் கணவனை விசாரித்தேன். "எப்பொழுதும் போல், தான் கடையை மூடிவிட்டு மாலை ஐந்தரை மணிக்கு வண்டியில் தன் நண்பனெருவனுடன் வந்ததாகவும், அதன் பின் ஆறு மணிக்கு தன் நண்பனுடன் நண்பன் வீட்டிலேயே ரேடியோவில் குதிரைப் பந்தய ரிஸல்ட் கேட்டதாயும், பின்பு ஏழரை மணிக்கு வீட்டிற்கு வந்ததாகவும், அங்கு மனைவி கிடந்த நிலையைக் கண்டு உடனே டாக்டருக்கும் போலீஸுக்கும் தகவல் கொடுத்ததாகவும் கூறினர் அவள் கணவன் நாகராஜன்.

டாக்டர் பரிசோதனையில் தற்கொலை என்று சந்தேகிக்கப் பட்டது. ஆனலும் என் மனது நிம்மதியடைய வில்லை: அதற்கு முதல் காரணம், சுந்தரவல்லி தற்கொலை செய்து கொள்ளும் போது எழுதிய கடிதத்தில் "என்னல் அதிக

மாக நேசிக்கப் பட்டவர்களைப் பிரிந்து என்னால் உயிர்வாழ முடியாது''—என்று குறித்து எழுதப்பட்டிருந்த வாக்கியங்கள் தான்.

மறுபடியும் அவள் கணவனையும், மகனையும் விசாரித்தேன். அவர்கள் பதில் சொன்ன அந்த வாக்கியங்கள் என்னை ஆச்சரியப்படுத்தின.

“அவள் அடிக்கடி என்னையும், அவள் மகனையும் தான் அதிகமாக நேசிப்பதாகக் கூறுவாள். வேறு ஒருவரையும் அவள் அதிகமாக நேசித்ததாகத் தெரியவில்லை. போன வருடம் அவள் தாய் இறந்தாள். ஏன், போன ஜனவரியில் அவள் தங்கை இறந்தாள். அப்போதெல்லாம் அவள் அவ்வளவாகத் துக்கப்படவில்லை. நான் அன்று காலையில் கடைக்குப் போகும் போது, எப்பொழுதும் போல சந்தோஷமாகத்தான் இருந்தாள். ஆனால் மாலை தற்கொலை செய்து கொண்டாள்—'' என்று கூறி நாகராஜன் அழுதார்.

“தன் தாய் இறப்பதற்கு முன் தினம் ஞாயிற்றுக்கிழமை, தான் வந்திருந்ததாகவும், அன்று அவள் சந்தோஷமாக இருந்ததாக''வும் அவளுடைய மகன் கூறினான்.

சுந்தரவல்லியின் தமையனைக் கண்டு விசாரித்தேன். அவர் கொலை நடந்த அன்று மாலை நாலு மணிக்கு சுந்தரவல்லியுடன் அவள் வீட்டில் காப்பி சாப்பிட்டதாகவும், அதன்பின் தான் நாலரை மணிக்குப் பிரிந்தபோது அவள் எப்பொழுதும் போல் காணப்பட்டதாகவும் அதன்பின் ஐந்து மணிக்குத் தான் டிக்கெட் வசூலுக்காக சர்க்கஸ் கொட்டகைக்குப் போய் விட்டதாகவும் கூறினர்.

என்றாலும் என் மனது நிம்மதியடையவில்லை. அதற்கு இன்னொரு காரணமுமிருந்தது. தற்கொலை செய்து கொள்ள எண்ணும் ஒருத்தி தான் வைத்திருக்கும் விஷ மருந்து அவ்வளவையும் உபயோகித்துத்தான் தன் உயிரைப் போக்கிக் கொள்ள எத்தனிப்பாள். ஆனால், சுந்தரவல்லி தூக்க மருந்தில் பத்து வில்லைகள் மாத்திரம் உட்கொண்டிருக்கிருள். பாக்கி பத்து வில்லைகளை வைக்க வேண்டிய அவசியமே யில்லை. இது பற்றி அவள் கணவனை விசாரித்தேன்.

தான் டாக்டருடைய சொற்படி தூக்க மருந்து உபயோகித்து வந்ததாயும், தன் மனைவியின் தற்கொலைக்கு முந்தின நாள் புதிதாக ஒரு புட்டி மருந்து வாங்கிய தாயும், அதைத் தான் தன் மனைவி உபயோகித் திருப்பதாயும் கூறினர். என்னுடைய சிந்தனையில் பல எண்ணங்கள் மலர்ந்தன.

அதிகமாக நேசிக்கப்பட்டவர்கள் கணவனும் மகனும்தான். ஆனால் தற்கொலைக்கு அவள் கூறியிருக்கும் காரணம், “அதிகமாக நேசிக்கப்பட்டவர்களைப் பிரிந்ததால்'' என்பதே. ஆனால் அவளால் நேசிக்கப்பட்டவர்கள் ஒருவரும் பிரியவில்லை. கீழே கிடந்த காகிதத்தில் “துக்ககரமான சம்பவத்தை'' என்று எழுதி யிருந்தது என் கவனத்திற்கு வந்தது. முதலில் துக்ககரமான ....இந்த சம்பவத்தையோ அல்லது தற்கொலையையோ என்று அவள் தன் கடிதத்தில் எழுத எண்ணியிருக்கலாம். பின் அதைக் கிழித்துவிட்டு “என்னால்

இந்த உப நடிகர் ராம்தாஸின் முகத்தை நீங்கள் சுமார் 100 படங்களில் பார்த்திருப்பீர்கள். எனினும் இவர் உணவுக்கும், உடைக்கும் திண்டாடும் பரிதாப நிலையிலேயே இருக்கிருர். இவர்மீது கருணை கொண்டு எந்தப் பட முதலாளியாவது இவருக்கு ஒரு நல்ல பாத்திரத்தைக் கொடுத்து, சிரத்தை எடுத்துக் கொண்டால், ராம்தாஸ்கூட ஒரு சிறந்த ஹாஸ்ய நக்ஷத்திரமாக முடியாது என்று சொல்லுவதற்கில்லை தான்.

அதிகமாகநேசிக்....''என்று எழுதியிருக்கலாம் என்று எண்ணினேன். அங்கும் என் அதிருப்தி மனம் சலசலத்தது.

''துக்ககரமான சம்பவத்தை...........'' என்று எப்பொழுதும் யாரும் வெறும் மொட்டையாகத் துவங்க மாட்டார்கள். ''மனக் கிலேசத்தோடு; அல்லது துயர உள்ளத்தோடு; அல்லது ஆழ்ந்த அனுதாபத்தோடு துக்ககரமான சம்பவத்தை........!'' என்று எழுதுவது தான் எல்லோருடைய இயல்பு. ஆகையால், ''துக்ககரமான சம்பவத்தை....'' என்று யாராவது சொல்லத்தான் அவள் எழுதியிருக்க வேண்டும். ஆனால் மாலை நாலரை மணி வரை அவள் தமையன் அவளுடன் இருந்திருக்கிறார். டாக்டர் அபிப்பிராயப்படி ஆறரை மணி சுமாருக்குஅவள்விஷம் அருந்தியிருக்கிறாள். ஆகையால் நாலரை மணியில் இருந்து ஆறரை மணிக்குள் தான் அவள் அக்கடிதத்தை எழுதியிருக்க வேண்டும். அந்த சமயத்தில் யாராவது நேரிலோ அல்லது டெலிபோனிலோ சொல்ல அவள் அதை எழுதியிருக்க வேண்டும். ஒரு வேளை அவளைக் கொல்ல எண்ணியவன் டெலிபோனில் துக்ககரமான சம்பவத்தை தெரிவித்திருக்கலாம். ''உன் கணவனோ அல்லது மகனோ விபத்தில் சிக்கி மாண்டனர்'' என்று சொல்லியிருக்க வேண்டும். இதைக் கேட்டவுடன் அவள் விஷமருந்தித்தான் தற்கொலை செய்து கொண்டிருக்க வேண்டும் என என் மனதில் பட்டது.

உடனே டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் சென்று கேட்டேன். மாலை ஐந்தேகால் மணிக்கு யாரோ (அவள் கணவன் வேலை பார்க்கும் ஊரிலிருந்து) சுந்தரவல்லியின் டெலிபோன் நம்பரைக் கேட்டதாக எக்ஸ்சேஞ்சில் அறிவித்தனர்.

இன்ஸ்பெக்டர் சோமசேகரிடம் நான் அபிப்பிராயப்பட்டதைக் கூறினேன். ''போங்க ஸார்! தற்கொலைங்கிறது நல்லாத் தெரியுது. நீங்க என்னடான்னா என்னென்னமோ சொல்றீங்க! விட்டுத் தள்ளுங்க மிஸ்டர்! உங்க துப்பறியும் திறமை ரொம்ப ஆழத்திலே போகுது........வெட்டியாப் போயிடலாம்!'' என்றார் கிண்டலாக. அவரைப் பற்றிதான் முன்பே கூறிவிட்டேனே!

அன்று தற்செயலாக சுந்தரவல்லியின் வக்கீலைச் சந்தித்தேன். அவர் கூறிய பரம ரகசியம் கொலைகாரனை ஊர்ஜிதம் பண்ணச் செய்தது.

சுந்தரவல்லி நாகராஜனை இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டபோது எழுதிய உயிலில் ஏராளமான சொத்தை நாகராஜனுக்கும், தன் தமையனுக்கும், மகனுக்கும் ஒரு அளவு சொத்தையும் ஒதுக்கியிருப்பதாக எழுதியிருந்தாள். அந்த உயிலில் எல்லோரும் கையெழுத்துப் போட்டிருந்தனர். ஆனால், அதன் பின் தன் மகனின் பிற்கால வாழ்க்கையை முன்னிட்டு, கணவனுக்கும் தமையனுக்கும் ஜீவனத்துக்குப் போதுமானதையும், மிகுதி எல்லாவற்றையும் மகனுக்கு என்று எழுதிய வக்கீல் அவர்கள் எல்லோரிடமும் கையெழுத்து வாங்க குறிப்பிட்டிருந்த நாளுக்கு முந்தின தினத்தில் தான் கொலை நடந்திருக்கிறது.

ஆகையால், பணத்துக்கு ஆசைப்பட்ட யாரோ—அவள் கணவன் அல்லது தமையன்—புது உயிலில் அவள் கையெழுத்துப் போடுவதற்கு முன்பாக தற்கொலை செய்ய அவளைத் தூண்டியிருக்க வேண்டும்.

இவர்கள் இருவரில் யார் உண்மைக் குற்றவாளி என்பதைக் கண்டு பிடிப்பது சற்று பிரயாசையாக இருந்தது. ஆனால் சுந்தரவல்லி தற்கொலை செய்து கொண்ட அன்று அவளை, நாகராஜன் வேலை பார்க்கும் ஊரிலிருந்து யாரோ டெலிபோனில் கூப்பிட்டனர். ஒரு வேளை நாகராஜனே சதி செய்திருக்கலாம்! ஏன்? செய்ததும் அவனே?

இதோ அவன் செய்த சூழ்ச்சி. எப்பொழுதும் போல் கடையை அடைத்த பின் நாகராஜன் மாலை ஐந்து இருபதுக்கு டெலிபோனில் சுந்தரவல்லியை அழைத்து, தன் குரலை மாற்றி ''துக்ககரமான சம்பவத்தைக் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உன் மகன் காரிலோ அல்லது வேறு ஏதோ ஆபத்தில் சிக்கி மாண்டு விட்டான்'' என, யாரோ அன்னியர் சொல்லுவதுபோல் அறிவித்திருக்கிறான். இந்தச் செய்தியைக்கேட்ட சுந்தரவல்லி குழப்பத்திலிருந்திருக்கிறாள். அதன் பின் நாகராஜன் ஐந்தரை மணிக்கு வண்டியை அமர்த்தி, அவன் நண்பனுடன் நண்பன் வீட்டிற்கு வந்து குதிரைப் பந்தய ரிஸல்ட் கேட்டி

ருக்கிறான். ஆறே கால்மணிக்கு நியூஸ் முடிந்தவுடன் வீட்டிற்கு வந்திருக்கிறான். ஆனால், ஏழரை மணிக்கு வீட்டிற்கு வந்ததாக போலீஸாரிடம் சொன்னது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே! அவன் நண்பன் வீட்டிற்கும் அவன் வீட்டிற்கும் சுமார் நூறு கஜ தூரமே! ஆறேகால் மணிக்கு ரேடியோ நியூஸ் முடிந்தவுடன் அவன் வீட்டிற்குப் பிரிந்து போனதாக பின்னால் அவன் நண்பனை விசாரித்தபோது தெரிந்தது. அங்கே வந்தவுடன் சுந்தரவல்லிமூலம் தங்கள் ஒரே மகன் திடீரென மாண்டதற்காக (அவன் அறிவித்ததுபோல்) துயரம் தாங்காமல் துடிப்பதுபோல் நடித்து துயரத்தின் சாயலைப் பல கோணங்களில் காட்டி, தான் இனி உலகில் உயிருக்குயிரானவர்களைப் பிரிந்தபின் வாழ முடியாது என நடித்து, தான் தற்கொலை செய்து கொள்வதாகத் தன் மனைவியிடம் கூறியிருக்கிறான்.

உண்மையாக மகனைப் பிரிந்து விட்டதாக தன் மனைவியிடம் கூறியிருக்கிறான். உண்மையாக மகனைப் பிரிந்து விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் அவளும், கணவன் போன பின் தான் மாத்திரம் வாழ்வது எப்படி முடியும் என்ற எண்ணத்தில் தற்கொலை பண்ணிக் கொள்ள முடிவு செய்தாள். கடைசியில் ஏகமனதாக இருவரும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தனர். இருவரும் தங்கள் தற்கொலையைப் பற்றிக் கடிதம் எழுதினர். உண்மையாகத் தன் கணவனும் தன்னுடன் சாகப் போகிறான் என்று எண்ணிய அந்த அபலை தன் கடிதத்தில் "நான் உயிருக்கு உயிராய் நேசித்த என் கணவனையும் மகனையும் பிரிந்து வாழமுடியாது" என்று எழுதுவதற்குப் பதில்........ "என்னால் அதிகமாக நேசிக்கப்பட்டவர்களைப் பிரிந்து"........என்று குறிப்பிட்டிருக்கிறாள். நாகராஜனும் அதேபோல் ஒரு கடிதம் எழுதியிருக்கிறான். அதன் பின் அதற்கு முந்தின நாள் தான் வாங்கியிருந்த தூக்க மருந்து புட்டியிலிருந்த மாத்திரைகளை இருவரும் உட்கொள்ள திட்டமிட்டனர். அதன்படி சுந்தரவல்லி தன் கணவனும் விஷம் உட்கொள்வான் என்ற திட நம்பிக்கையில் புட்டியிலிருந்த இருபது பில்லை

களில் பகுதி பத்து பில்லைகளைத் தான் தின்று விட்டு பகுதி பத்து பில்லைகளைத் தன் கணவனுக்கு ஒதுக்கினாள். தின்றவுடன் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டது. சில நிமிடங்களில் அவள் மாண்டாள். உடனே நாகராஜன் தனக்கு வைத்திருந்த பில்லைகள் பத்தையும் அப்படியே வைத்து விட்டு, தான் எழுதிய கடிதத்தையும் மறைத்து விட்டு ஏழு மணிக்கு போலீஸுக்கும் டாக்டருக்கும் போன் பண்ணினான். இதுதான் சுந்தரவல்லியின் கணவன் நாகராஜன் செய்த சதி! ஆக, நாகராஜனே கொலை செய்திருக்கிறான் என்பது தெரிகிறதல்லவா?

உடனே இன்ஸ்பெக்டர் சோமசேகரிடம் கூறி நாகராஜனைக் கைது செய்ய

செய்ய ஏற்பாடு செய்தேன். "புது உயிலில் அவள் கையெழுத்திடு முன் கொன்றுவிட வேண்டும், இல்லாவிட்டால் எனக்கு உள்ள சொத்தில் முக்கால் பாகம் மகனுக்கு உரிமையாகிவிடும் என்ற எண்ணத்திலேயே கொலை செய்தேன்" என்று தான் கொலை செய்ததை நான் அனுமானித்தது போல் ஒப்புக் கொண்டான் நாகராஜன்.

ஆனால், இன்னும் இன்ஸ்பெக்டர் சோமசேகருக்கு என்னிடம் நம்பிக்கை கிடையாது. எதையும் நிரூபித்துக் காட்டினால் தான் அவர் நம்புவார்.



திருச்சி கண்டோன்மெண்ட் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் **ஸ்ரீ. ஆர். ஜி. ராஜன்** அவர்கள் குமாரி **திருமதி லலிதா ரமணிக்கும்**, கும்பகோணம் கவர்ன்மெண்ட் ஹாஸ்பிட்டல் லேடி டாக்டர் திருமதி பாக்கியவதி அம்மாளின் சகோதரர் **திரு. ஆர். ராஜப்பாவிற்கும்** 21-4-54ல் குடந்தையில் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற வரவேற்பில் மன்னார்குடி ஸ்ரீமதி சாவித்திரி அம்மாளின் இன்னிசையும் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி ஆசிச் செய்திகள் ஏராளமாக வந்து குவிந்தன.

இந்திய சினிமாப் படங்கள்

யு. எஸ். விளம்பர ஸ்தாபனத்தில் சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் ஆதரவில் சென்ற மாதம் 10ம் தேதி ஏற்பாடு செய்யப்பட்ட "பண்டித நேருவின் யு. எஸ். விஜயம்" என்ற படக் காட்சிக்கு நிதி மந்திரி ஸி. சுப்ரமண்யம் தலைமை வகித்துப் பேசுகையில், நாட்டின் உண்மை உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் புத்தி புகட்டுவதும் ஆத்மார்த்தமுமான படங்களின் தேவையை வற்புறுத்தினார். ஏ. அருணாசலம் மந்திரியை வரவேற்றார். நிதி மந்திரி மேற்கொண்டு பேசுகையில் இந்தியாவில் இப்பொழுது படத் தொழில் நடைபெற்று வரும் மாதிரியைக் கண்டு தாம் பெருமைப்பட முடியாதிருக்கிறதென்றும் ஆனால், இந்தியாவில் சினிமாத் தொழில் அதற்குரிய உண்மை ஸ்தானத்தை அடையும் என்று தாம் நம்புவதாகவும் கூறினார். பின்னர் 'யு'ஸிஸின் (யு. எஸ். விளம்பர ஸ்தாபனம்) சேவையைப் பாராட்டினார்.

சுகுமார் புரடக்ஷன்ஸ் வெளி
யிட்டுள்ள "விளையாட்டுப்
பொம்மை"யில் குமாரி
கமலாவைச் சந்திக்கலாம்

ஸ்ரீ கிருஷ்ணா பிக்சர்ஸ் தயா
ரிக்கும் "காவேரி" தமிழ்ப்
படத்தில் நடன லலிதா.

கல்பனு கார்த்திக்

[41ம் பக்கத் தொடர்ச்சி]

க:—அதில் என்ன இருக்கிறது? ஒரு நடிகருக்கு பிற நடிகரைப்பற்றி எவ்வாறு இருக்குமோ அவ்விதமே எனக்கும் இருந்தது.

பா:—முதன் முதலில் நீங்கள் தேவ் ஆனந்தை சந்தித்தபொழுது என்ன சொன்னீர்கள்?

க:—பால்ராஜ், நீங்கள் ஒரு புது மாதிரியான மனிதர். நான் அவரிடம் என்ன சொன்னேன், நல்லது, "நமஸ்தே" என்பதைவிட என்ன இருக்கிறது?

பா:—அவ்வளவுதானு?...........என்னை மன்னிக்கவும். உங்களுக்கு வாழ்த்துக் கூறவே மறந்து விட்டேன்...."வாழத்துக்கள்....கல்பனுஜி".

க:—நன்றி.

பா:—நீங்கள் ஜனவரி 3ம் தேதி திருமணம் செய்து கொண்டீர்கள். ஆனல் அதைப்பற்றி ஒருவரிடமும் சொல்லவில்லையே. நீங்கள் அது ஒரு ரகஸியமாகவே இருக்குமென்று எவ்வாறு எதிர்பார்த்தீர்கள்?........முக்கியமாக தேவ் ஆனந்துடன் உங்களுடைய திருமண விஷயத்தை.

க:—அதில் விஷயம் இருந்தது பால்ராஜ்.

பா:—அது என்ன? நான் அதை அறிய சற்று ஆவலாக இருக்கிறேன்?

க:—தேவும் நானும் "டாக்ஸி-டிரைவர்" படப் பிடிப்பில் அதிக மும்முரமாக ஈடுபட்டிருந்தோம். ஆகையால் படம் முடிவடையும் வரை கல்யாணத்தின் பிரஸ்தாபத்தை ஒத்திவைத்திருந்தோம். ஏனெனில், அதற்குப் பிறகு எங்களுக்கு நண்பர்களே அழைக்கவும் விருந்தளிக்கவும் அவகாசம் இருக்குமென்று நினைத்தோம்.

பா:—பின், ஏன் என்னிடம் முன்னதாகவே விருந்தளிக்கப் போகிருேம் என்பதை அறிவித்திருக்கக் கூடாது?

க:—நான் சொல்வதை நீங்கள் எப்பொழுது கவனித்தீர்கள்?

பா:—இப்பொழுது உங்களுடைய உண்மைப் பெயர் என்ன என்று சொல்லுங்கள்.

க:—என் பெயர் மனேரமா ஸிங்ஸ், ஆனல் நான் "மோனு" என்றழைக்கப்பட்டேன்.

பா:—அப்பொழுது உங்கள் பிறந்த தேதி ஆகஸ்ட 19, தேவ் பிறந்த தினம் 26 செப்டம்பர், கல்யாணம் நடந்த தேதி ஜனவரி 3.

க:—பால் ராஜ்!

பா:—ஏன் பாபிஜி!

க:—நீங்கள் ஒரு ஜோஸியர் கூடவா?

பா:—இல்லை, அதற்காக இல்லை. ஒவ்வொரு வருஷமும் நான் மூன்று வெகுமதிகள் வாங்கும்படியாக இருக்குமே என்று கவலைப்படுகிறேன்.

(இருவரும் சிரிக்கிருர்கள்.)

பா:—இப்பொழுது படங்களைப் பற்றிப் பேசுவோம். எது நீங்கள் பார்த்த முதல் இந்தியப் படம்.

க:—'பந்தன்'

பா:—சினிமாவில் சேர விரும்பும் பெண்களுக்கு நீங்கள் கூறும் புத்திமதிகள் எவை?

க:—நிரந்தர-ஒப்பந்த அடிப்படையில் ஒரே படக் கம்பெனியுடன வேலை செய்வது என்பது அவர்களுக்கு நல்லது என்று நான் எண்ணுகிறேன். படவுலகில் இருப்பவர்கள் வெளியோர் நினைக்கும் அளவு தீயவர்கள் அல்ல. உண்மையில் சினிமாவில் சேருவதற்கு முன் நானும் அவ்வாறே நினைத்தேன். ஆனல் இப்பொழுது சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் உள்ளன்பு படைத்தவர்களாகவும், உண்மையிலேயே நல்ல மனதுடையவர்களாகவும் இருக்கிருர்கள் என்பதை நான் அறிகிறேன். எல்லாத் தொழிலிலும் கெட்ட மனிதர்கள் இருக்கத்தான் இருக்கின்றனர். ஒருவருடைய நடத்தையையும், நிலைமையையும் காப்பாற்றிக் கொள்வது அவரவரது கையில்தான் இருக்கிறது. ஒருவர் நேர்மையையே கடைப் பிடித்து வந்தால் அவரை வேறு வழியில் மாற்ற உலகத்தில் எந்த சக்தியினுலும் முடியாது.

பா:—இது வரையில் எந்தப் படத்தில் நீங்கள் நன்கு நடித்து இருக்கிறீர்கள?

க:—"டாக்ஸி-டிரைவர்" படத்தில் என் நடிப்பு எனக்குப் பிடித்தமாயிருக்கிறது. ஒலிவியா டி ஹாவிலண்டைப் போல நடிக்க நான் ஆசைப்படுகிறேன். உங்களுக்குத் தெரியுமா? அவரும்,

பரிமளம் பிக்சர்ஸாரின் ''சொர்க்க வாசல்'' தமிழ்ப் படத்தில் ஆர். பாலசுப்ரமண்யம் மடாதிபதியாகக் காட்சி அளிக்கிருர்.

ரோனல்ட் கோல்மனும் தான் எனது அபிமான நக்ஷத்திரங்கள்.

பா:—நாவல்கள் முதலியன படிப்பதில் சிரத்தை உண்டா?

க:—ஆம். டிக்கன்ஸ், மௌகம், பிரியன் போன்ற எழுத்தாளர்களின் நாவல்களை அடிக்கடி நான் படிப்பதுண்டு. மேலும் எனக்குக் கவிதைகள் படிப்பதில் ஒரு தனி விருப்பம்.

பா:—யாருடைய கவிதைகளை மிகவும் விரும்புகிறீர்கள்?

க:—கீட்ஸ், ஷெல்லி இருவருடையதையும்.

பா:—என்ன விளையாட்டுகள் நீங்கள் விளையாடுவது?

க:—'வாலி-பால்', பாட்மிண்டன், நீந்துதல். நான் பரத நாட்டியம் கற்றுக் கொண்டேன். கதக் கற்றுக் கொள்ள எண்ணியிருக்கிறேன். இந்திய நடனம் மிகவும் நன்ருக இருக்கிறது. சைக்கிள் விடுவதிலும் எனக்கு மிக்க விருப்பம்.

பா:—எந்த உடை மிகவும் பிடித்தமானது?

க:—ஷர்ட்டும் ஷல்வாரும். சில சமயங்களில் புடவையும் அணிவது உண்டு.

பா:—உங்களுடைய இதரப் பொழுது போக்குகள் எவை?

க:—வீட்டு வேலை, மட்டன் சமையல் தயாரிப்பது, வீட்டை அலங்கரிப்பது.

பா:—உங்களை மனைவியாக அடைந்த தேவ் உண்மையில் ஒரு அதிருஷ்டசாலிதான்.

க:—அழகான ஒரு வீடு-வீட்டு வேலைகள். அவ்வப்பொழுது சிறு மனஸ்தாபங்கள்-இவைதான் வாழ்க்கை என்பது. நந்தவனம் ஒன்று அருகாமையிலுள்ள வீடு ஒன்றையே நான் விரும்புகிறேன். நான் என் கையால் அங்கே புஷ்பச் செடிகளை வளர்க்கலாம் அல்லவா?

பா:—உங்கள் அபிலாஷை பூர்த்தியாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், தேவ்ஜியின் பங்களா அருகாமையில் ஒரு நந்தவனம் இருக்கிறதே. எனக்கும் அது ரொம்ப மகிழ்ச்சி அளிக்கும். காரணம், நான் அந்தப் பக்கமாகப் போகும் போது ஒரு நேர்த்தியான புஷ்பக் காட்சியைப் பார்க்க முடியும் அல்லவா? தேவைச் சந்தித்து, பாபீயின் கைகளால் தயாரிக்கப்பட்ட பண்டங்களை அவருடன் சேர்ந்து சாப்பிடுவது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! ஆனல் கல்பனஜி, நான் அங்கிருக்கும்போது தேவ்ஜியுடன் சச்சரவு செய்ய ஆரம்பித்து விடாதீர்கள்.

க:—சரி, ஆனல் நீங்கள் அவரிடமும் சச்சரவு எதையும் ஆரம்பிக்க வேண்டாம் என்று சொல்லி வையுங்கள்.

பா:—நான் அடுத்த தடவை அவரை சந்திக்கும்போது நிச்சயமாகச் சொல்லி வைக்கிறேன்.

க:—ரொம்ப சரி பால்ராஜ்! நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா? நமஸ்தே!

பா:—நமஸ்தே. கல்பனஜி!....

க:—ஏன், என்ன வேண்டும்?

பா:—நான் தேவ்ஜியை விசாரித்ததாக தயவு செய்து அவரிடம் சொல்லுங்கள்.

க:—ஆகா, சொல்கிறேன்.

(சிரிக்கிருர்கள்).

[நீங்கள் மேலே வாசித்தது பிரபலமான லிப்டன் டீ கம்பெனியாரது ஏற்பாட்டின் பேரில் ரேடியோ ஸிலோன் மூலம் ஒலிபரப்பப்பட்ட பேட்டியாகும்.]

வாழ்க்கை வர்ணனை

[13ம் பக்கத் தொடர்ச்சி]

நிறுத்திவிட்டு, தம் பெற்றோர்களுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னைக்கு வந்த பின், அவர் மீண்டும் பள்ளியில் சேரவில்லை. அதற்குப் பதில் அவரது கவனம் நடனத்தில் சென்றது. முன்பே அவர் ராஜமஹேந்திரபுரத்தில் இருந்தபோது வேதாந்தம் ஜகன்னாத சர்மா என்பவரிடம் குச்சிப்பூடி நடனத்தில் கொஞ்சம் பயிற்சி பெற்றிருந்தார். அஸாமில் இருந்த போதோ, அவர் மணிபுரி நடனத்தை நிறையப் பார்த்து ரஸித்து வந்தார். ஆதலால் சென்னையை அடைந்ததும், நடனக் கலையை மேலும் பயின்று ஒரு நடன மணியாக வேண்டும் என்று அவர் ஆசை கொண்டார். அதற்கிணங்க அவர் பிரபல சோப்ராவிடம் எளிய நடனங்களைக் கற்கலானார்.

இப்படி ஒரு வருஷ காலம் பயிற்சி பெற்ற பின்னர் கிருஷ்ணகுமாரி மேடை மீது தோன்றி நாடகங்களில் நடிக்கவும், நடனம் ஆடவும் முற்பட்டார். வி. பி. ஹாலில் நடந்த "சுப்பராயுடு" என்ற தெலுங்கு நாடகத்தில் அவர் முதல் தடவையாக (கதாநாயகியாக) தோன்றி நடித்தார். ஆனால் அவரது முதல் நடனமோ கல்கத்தாவில் (தென்னிந்திய சங்கத்தில்) நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அவர் சென்னையிலும் பங்களூரிலும் நடனம் ஆடினார்.

அந்த சமயத்தில் கிருஷ்ணகுமாரிக்கு "சினிமாவில் சேரவேண்டும்; நக்ஷத்திரம் ஆகவேண்டும்" என்ற எண்ணம் கொஞ்சம் கூட இருக்கவில்லை. அவர் 1950-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் ராஜகுமாரி தியேட்டரில் "சொப்பன சுந்தரி" படத்தைப் பொழுது போக்காகப் பார்த்துக் கொண்டிருந்தபோது கூட, தாமே 'சினிமா ரஸிகர்களின் சொப்பனசுந்தரி ஆகப் போகிறார்' என்ற எண்ணம் அவருக்கு சொப்பனத்தில் கூட ஏற்படவில்லை.

அவர் படம் பார்த்துக் கொண்டிருந்தபோது அவரருகில் தமிழ் நாடு டாக்கீஸ் முதலாளி செளந்தரராஜனின் புத்திரி பூமா அமர்ந்திருந்தார். தியேட்டர் இருட்டாயிருந்த போதிலும்கூட கிருஷ்ணகுமாரியின் முகத்தில் நக்ஷத்திரப் பிரகாசம் இருப்பதை பூமா கண்டு கொண்டார். மெதுவாக கிருஷ்ணகுமாரியிடம் பேச்சுக் கொடுத்து, அவரை சினிமாவில் நடிக்க ஆசை கொள்ளும்படி செய்துவிட்டார் பூமா. தமிழ் நாடு டாக்கீஸாரின் "நவ்விதே நவரத்னலு" என்ற தெலுங்குப் படத்தில் கதாநாயகியாய் நடிப்பதற்கு கிருஷ்ணகுமாரி முதன் முதலாக ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டார். ஆனால் அவர் முதன் முதலாக கேமிராவின் முன் ஷூட்டிங்கிற்காக நின்றது—இரண்டாவதாக ஒப்பந்தமான—"மந்திர தண்டம்" தெலுங்குப் படத்திற்குத்தான். இந்த ஷூட்டிங் வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

"நவ்விதே நவரத்னலு" கதை 'ஸிண்டரில்லா' என்ற பிரபல ஆங்கிலக் கதையைத் தழுவியது. அப்படம் நல்ல வெற்றியைப் பெற்றது—கிருஷ்ணகுமாரியின் எதிர்காலத்திற்கு நல்ல சூசனையாய் முடிந்தது.

மூன்றாவதாக, அவர் "குணசாகரி" கன்னடப் படத்திலும், "சத்திய சோதனை" தமிழ்ப் படத்திலும் நடித்தார். இவ்விரண்டும் ஒரே கதையைக் கொண்ட படங்கள். அவற்றின் இரு பாஷைகளோ கிருஷ்ணகுமாரிக்குப்

ஜூபிடர் பிக்சர்ஸார் வெளியிட்ட "அழகி" என்ற தமிழ்ப் படத்தில் கிருஷ்ணகுமாரியின் இருவகைத் தோற்றங்கள்.



கிருஷ்ணகுமாரி, சௌகார் ஜானகி, அவர்களின் பெற்றோர் சகோதரர்கள் முதலியோரை மேலேயுள்ளபடத்தில் காணலாம்.

புதியவையாகும். தமிழ்ப் படத்தை விட கன்னடப் படத்தில் அவரது வசனம் தெளிவாக இருந்தது.

இவ்விரு படங்களும் முடிந்த பின்னர் அவர் ''பிரியராலு'' என்ற தெலுங்குப் படத்தில் நடித்தார்! பிறகு ''ஆட பிரதக்கு'', ''மருதல பெள்ளி'', ''சின்ன கொடலு'', ''சின்னம்மா கதா'' ஆகிய நான்கு தெலுங்குப் படங்களில் நடித்தார். இவை மூலம் தெலுங்குப் படவுலகில் அவரது பெயர் பிரபலம் ஆகிக் கொண்டிருந்தது. இதுகண்ட ஜூபிடர் பிக்சர்ஸார் அவரை இரண்டு படங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டு, முதலில் ''மனிதன'' படத்திலும், பிறகு ''அழகி'' படத்திலும் நடிக்கச் செய்தனர். ''மனிதன்'' படத்தில் கிருஷ்ண குமாரியின் நடிப்பும் பேச்சும் எவ்வளவோ அபிவிருத்தி யடைந்திருந்தன. அதன் விளைவாக மாடர்ன் தியேட்டர்ஸார் அவரைத் தங்கள் ''திரும்பிப் பார்'' படத்தில் நடிக்கச் செய்தனர்.

இதற்கிடையில் கிருஷ்ணகுமாரி ''பிச்சி புல்லய்யா'', ''லக்ஷமி'' (தெலுங்கு மாத்திரம்), ''அந்தே மனவாள்ளே'', ''அழகி'' படத்தின் தெலுங்குப் பதிப்பு, ''ஜலதுர்கா'' (கன்னடம்) ஆகிய படங்களில் நடித்து முடித்தார்.

சமீப காலத்தில் வெளிவந்தவைகளான ''கற்கோட்டை'', ''விடுதலை'' ஆகிய இரண்டு தமிழ்ப் படங்களிலும் கிருஷ்ண குமாரி பிரதம பாகங்களில் நடித்திருக்கிறார். இப்படங்கள் சுமாரான வெற்றியையே பெற்றனவென்றாலும், கிருஷ்ணகுமாரியின் நடிப்பில் அபிவிருத்தி காணப்பட்டது. ''விடுதலை''யின் ஹிந்திப் பதிப்பான ''ரேஹாய்''யிலும் கிருஷ்ணகுமாரி நடித்திருக்கிறார்.

கிருஷ்ணகுமாரி நடித்துள்ள ''புது யுகம்'' இம்மாதம் 4ம் தேதி திரையிடப்பட்டுள்ளது. நடித்து வரும் ''துளி விஷம்'' சீக்கிரமே வெளிவர விருக்கிறது. ''துளி விஷ''த்தின் தெலுங்குப் பதிப்பான ''அமிர்த பிந்து''விலும் அவர் நடித்திருக்கிறார். இவை தவிர, ''பல்லே படஸு'', பி. என். ரெட்டியின் ''பங்காரு பாப்பா'', ஆகிய தெலுங்குப் படங்களிலும் அவர் நடித்து வருகிறார். டி. வி. சுந்தரம் தயாரிக்கப் போகும் ஒரு படத்தில் நடிக்கவும் அவர் கையெழுத்திட்டிருக்கிறார்.

கிருஷ்ண குமாரிக்கு ஆடத் தெரியும்; ஆனால் பாடத் தெரியாது. இரவல் குரல் அளிக்கத்தான் எத்தனையோ குயில்கள் இருக்கின்றனவே!

கிருஷ்ண குமாரிக்கு தாய் பாஷையான தெலுங்குடன் கூட, கன்னடம், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய பாஷைகளை எழுத, படிக்க, பேசத் தெரியும். வங்காளி பாஷையில் பேசினால் புரிந்து கொள்ள மட்டும் அவரால் இயலுமாம். ஓய்வு நேரங்களில் ஆங்கில நாவல்களைப் படிப்பது, ரிங்-டென்னிஸ், கேரம் இவைகளை ஆடுவது; இப்படியாகப் பொழுது போக்குவது வழக்கமாம். அவருக்கு கிரிக்கெட் ஆடத் தெரியாது. இருந்த போதிலும் அவர் நக்ஷத்திரக் கிரிக்கெட் ஆட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

அவருக்கு சைக்கிள் விடுவதிலும், மல்யுத்தம் பார்ப்பதிலும் மிக இஷ்டமாம். தமிழ் தெலுங்குப் படங்களை அவர் அவசியமான அளவிற்கே பார்க்கிறாராம். ஆனால், நல்ல ஆங்கில ஹிந்திப்படங்கள் ஒன்றைக்கூட அவர்

தவற விடுவதில்லையாம்; சந்தர்ப்பம் கிடைக்கும்போது தமிழ் ரேடியோ நாடகங்களில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்.

"படங்களில், ஒன்று அதிக சோகம் நிறைந்தவற்றையோ, அல்லது அதிக சந்தோஷம் நிறைந்தவற்றையோ தான் நான் விரும்புகிறேன். இரண்டுங்கெட்டான் கதா பாத்திரங்களும், ஆசை நாயகி வேஷங்களும் எனக்குப் பிடிப்பதில்லை. ஆதலால், தமிழில் "மனிதனும்". தெலுங்கில் "பிச்சி புல்லய்யா" வும்தான் எனக்கு அதிகம் பிடித்த படங்கள்"—என்று, பளிச்செனத் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார் கிருஷ்ணகுமாரி.

தமிழ்-தெலுங்குப் பட உலகில் தற்போது பிரபலமடைந்து வரும் 'சௌகார்' ஜானகி கிருஷ்ணகுமாரியின் மூத்த சகோதரி ஆவார். இவர்களுக்கு தேவகி என்ற ஒரு இளைய சகோதரியும், ராமு, ரகு, பாஸ்கர் ஆகிய மூன்று சகோதரர்களும் இருக்கின்றனர். அவர்களுள் பெரியவரான ராமு, கிருஷ்ணகுமாரியின் மெய்க்காப்பாளர் போலக் கூட இருந்து அவரது நலன்களை கவனித்து வருகிறார்.

முல்லைக்கொடி போன்ற மெலிந்த தேகமும், சுமார் ஐந்தடி நான்கு அங்குல உயரமும், மாநிறமும், அழகிய முகமும் உடையவர் கிருஷ்ணகுமாரி. படித்த பெண்ணாதலால், பிறரிடம் பழகுவது, வரவேற்பது எப்படி என்பதை அவர் நன்கு அறிந்துள்ளார்.

கடைசியாக, நான் கிருஷ்ணகுமாரியிடம் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டேன். இந்தக் கேள்வியை நேயர்களில் தொண்ணூறு சத விகிதத்தினர் கேட்கின்றனர். அவர்களுக்கு நான் பதில் சொல்லியாக வேண்டுமே!

"உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா? இல்லையென்றால் எப்பொழுது நடைபெறப் போகிறது?", என்றேன்.

அதற்கு அவர், "ஓ, அப்படியும் ஒன்று பாக்கி யிருக்கிறதா....!" என்று ஆச்சரியத்தோடு கூறினார்.

"அப்படியானால்....?"

"அப்படியானால்........நான் திருமணம் பற்றி இன்னமும் யோசிக்கக்கூட இல்லை என்பது அர்த்தம்........" என்று கூறிவிட்டு அவர் கலகலவென்று சிரித்தார்.

கூந்தல் வளர...

ஜெமினி

ஹேர் ஆயில்

★

சித்த ஆயுர்வேத
முறைப்படி
தயாரிக்கப்பட்டது.

★

கூந்தல்
வளர்ச்சிக்கு
மிகச் சிறந்தது.

★

எங்கும் கிடைக்கும்:

சித்தமணி
கெமிகல் ஒர்க்ஸ்

சென்னை—17.

இது செய்தி

மாஸ்கோவில் இந்திய பிலிம் விழா

மாஸ்கோவில் முதல் இந்திய பிலிம் விழா சீக்கிரமே நடைபெற விருக்கிறது. சுமார் 10 இந்தியப் படங்கள் ரஷ்யாவில் காட்ட பொறுக்கப் பட்டிருக்கின்றன. இவை ரஷ்ய பாஷைகளில் டப் செய்யப்படுமெனத் தெரிகிறது. இதுவரை "ராகி" "தோ பிகா ஜமீன்" என்ற படங்கள்மட்டுமே ரஷ்ய பாஷையில் டப் செய்யப்பட்டுள்ளன. "அவாரா", 'பாய்ஜு பாவ்ரா", "ஜான்ஸி-கி-ராணி", "ஹம்லோக்" இவைகளும் ரஷ்ய பாஷையில் டப் செய்யப்பட விருக்கிறது. இந்திய சினிமா நடிக நடிகைகள் டெக்னீஷியன்கள், பட முதலாளிகள், சினிமாத் தொழில் பிரதிநிதிகள் இவ்விழாவில் கலந்து கொள்ளும்படி அழைக்கப் பட்டிருக்கிறார்கள்.

நடிகருக்கு அபராதம்

சென்ற மாதம் 15ம் தேதி பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் ராமகிருஷ்ணய்யர், 'தடை செய்யப்பட்ட நாடகத்தை நடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ரூ. 500 அபராதமும், கட்டத் தவறினால் மூன்று வார கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

பாக்ஸ் கம்பெனி முயற்சி

ஹாலிவுட்டிலிருந்து கிடைத்துள்ள செய்திகளிலிருந்து "ட்வெண்டியத் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனி"யார் பாகிஸ்தானில் ஒரு படம் எடுக்கத் திட்டம் போட்டிருப்பதாகத் தெரிகிறது. "ஜுவெல் ஆப் பெங்கால்" என்று இதற்குப் பெயரிடப்படும் எனவும் தெரிகிறது.

"அந்த நாளு"க்குப் பாராட்டு

ஏவி. எம்மின் "அந்த நாள்" படத் தயாரிப்பாளர்களான ஏ. வி. மெய்யப்பன், டைரெக்டர் எஸ். பாலசந்தர், கதாசிரியர் ஜாவர் சீதாராமன் ஆகியோரைப் பாராட்டுவதற்கு சினிமா விசிறிகள் சங்கத்தின்சார்பாக சென்ற மாதம் மவுண்ட் ரோடு சேவா சமாஜ தகவல் அறிவிப்பு ஸ்தாபன கட்டடத்தில் ஒரு உபசரிப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. பாட்டோ, நடனமோ இல்லாமல் அப்படம் தயாரிக்கப் பட்டிருப்பது ஒரு பெரிய வெற்றி என்று சங்கத் தலைவர் வி. ஸி. கோபால ரத்னம் கூறினர். ஜப்பானுக்குச் சென்ற போது அங்கு சினிமாப்படத் தயாரிப்பு முறைகளைக் கண்ட பிறகு தான் இப்படத்தைத்எடுக்க தனக்குத் தூண்டுதல் ஏற்பட்டதாக ஏ. வி. மெய்யப்பன் தெரிவித்தார். பாட்டோ, நடனமோ இல்லாது எடுக்கப்படும் படங்களுக்குப் பொது மக்கள் அதிக அளவில் ஆதரவளித்தாலன்றி அது போன்ற படங்களை எடுக்கப் பட உற்பத்தியாளர்களுக்கு சாத்தியமா யிராது என்றார். எஸ். பாலசந்தரும், ஜாவர் சீதாராமனும் அப் படத் தயாரிப்பு பற்றிய விவரங்களைத் தெரிவித்துப் பேசினர். மந்திரி பக்தவத்ஸலம் பேசுகையில் அம்மாதிரி மேன்மேலும் அதிக படங்களை எடுக்க முயற்சிக்க வேண்டும் என்றும், பொழுதுபோக்கு மட்டுமின்றி கல்வி அம்சத்தையும் மறந்துவிடக் கூடாது என்றும், இவ்விரண்டும் கலந்திருக்கும் படங்கள் தான் வெற்றியடையும் என்றும் தெரிவித்தார். காரியதரிசி சாமுவேல் வந்தனோபசாரம் கூறினர்.

பரதநாட்டிய டாக்குமென்டரி

இந்திய சர்க்கார் - பிலிம் டிவிஷன் தயாரித்து வரும் பரத நாட்டியம் பற்றிய டாக்குமென்டரி வர்ணப் படத்தில் குமாரி கமலாவின் பரத நாட்டியம் இடம் பெற்றிருக்கிறது. பரத நாட்டியத்தின் சிறப்பும் அழகும் அதில் சித்தரித்துக் காட்டப்படுமாம்.

இந்தியாவுக்கு அழைப்பு

இவ் வருஷம் வெனிஸில் (ரோம்) நடைபெறும் பிலிம் விழாவில் கலந்து கொள்ளுமாறு இந்தியா அழைக்கப் பட்டிருக்கிறது.

கலைஞர்களுக்கு உபசாரம்

அகில இந்திய கிராம நடன, நாடக விழாவில் கலந்துகொள்ள சென்னை வந்திருந்த கலைஞர்களுக்கு சென்ற மாதம் 4ம் தேதி ஜெமினி ஸ்டுடியோவில் எஸ். எஸ். வாசன் விருந்துபசாரம் நடத்தினர். கலைஞர்களுக்கு "ஒளவையார்" படம் காட்டப்பட்டது. அதன் பின்னர் அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பஞ்சாப்

ஆகிய மாகாணங்களின் கலைஞர்கள் கிராமப் பாடல்களையும், நடனங்களையும் நடத்தினார்கள். அதன் பின்னர் ஜெமினி மைதானத்தில் விருந்து நடந்தது. கலைஞர்களுக்கு வாஸன் நன்றி கூறினார். நிரஞ்சன் சென் தங்களுக்கு அளித்த வரவேற்புக்கு (வங்காளம்) வாஸனுக்கு நன்றி கூறினார்.

நாடகக் கழகம்

சென்னை நாடகக் கழகத்தை, புது டில்லி சங்கீத நாடக அகாடமி அங்கீகரித்திருப்பதாகத் தெரிகிறது.

பிலிம் டிவிஷன் அதிகாரி

இந்திய சர்க்கார் பிலிம் டிவிஷன் பிரதம ப்ரொட்யூஸர் ஸ்ரீ பவனானி ஐரோப்பிய அமெரிக்க ஸ்டுடியோக்களைப் பார்வையிடும் பொருட்டு இந் நாடுகளுக்குச் செல்கிறார். நவீன படத் தயாரிப்பு, கார்ட்டூன் தயாரிப்பு முறைகளை இவர் தெரிந்து கொண்டு வருவார்.

மோஷன் பிக்சர் அகாடமி

அகில இந்திய சினி டெக்னீஷியன்கள் கவுன்ஸில் தோற்றுவித்துள்ள "மோஷன் பிக்சர்ஸ் அகாடமி"யை (சலனப் பட சங்கம்) சென்ற மாதம் 16ம் தேதி பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டில் ஆரம்பித்து வைத்தார். அ. இ. சினி டெக்னீஷியன்களின் 3-வது மகாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் அகாடமியை ஆரம்பித்துவைத்து, பட்டில் பேசுகையில், 2-வது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப் படுகையில் கவனிக்கப்பட வேண்டிய அவசர விஷயங்களில் சினிமாத்தொழில் ஒன்று என்றும், பொது ஜனங்களுக்கு அறிவூட்டக்கூடிய சக்தி வாய்ந்த சாதனமான சினிமாவுக்கு 2வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிரதான இடம் அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். ராஜ்ய, மத்திய சர்க்கார்கள் சினிமாத் தொழிலுக்கு சரியானபடி ஊக்கம் அளிக்கவில்லை என்றார். தமாஷா வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் குறைந்தது கால் பங்காவது மீண்டும் தொழிலுக்காகச் செலவிடப்பட வேண்டும் என்றார். அந்நியப் படங்களைக் காப்பியடிக்கும் மனப்பான்மை அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்தும், "இது ஒழுக்கக் கேடானது, சட்ட விரோதமானது" என்று வர்ணித்தும், தவிர, நாட்டின் சொந்த இலக்கிய அறிவு வளர்ச்சிக்கு அது உலை வைக்கிறதென்று சுட்டிக் காட்டியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பட உற்பத்தியாளர்களும், எழுத்தாளர்களும் பிரஸ்தாப "அசிங்கமான பழக்கங்களை" கைவிட்டு நம் நாட்டின் வாழ்க்கை, இலக்கிய வரலாறுகளில் இருந்து இலக்கியத்தை சிருஷ்டிக்க முற்படுமாறும் தீர்மானம் வேண்டிக் கொண்டது.

சலனப் படங்கள் சம்பந்தமான கலைகளையும் விஞ்ஞானங்களையும் வளர்ப்பது மேற்படி அகாடமியின் முக்கிய நோக்கம். சினிமாத் துறையில் சிறந்த சாதனைகளுக்கு வருஷந் தோறும் பரிசு வழங்குவது, சர்வகலாசாலைகளில் சினிமாத் தொழில் பற்றிய பாடங்கள் கற்றுக் கொடுப்பதற்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவது முதலிய காரியங்களைச் செய்ய அகாடமி உத்தேசித்துள்ளது.

வாஸன் தலைவரானார்

தென் இந்திய பிலிம் வர்த்தக சபையின் 15-வது வருடாந்தர (ஜெனரல் பாடி) கூட்டம் சென்னையில் சென்ற மாதம் 16-ம் தேதி நடந்தது. தலைமைப் பதவியிலிருந்து விலகும் ஏ. ராமையா பேசுகையில் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ். எஸ். வாசனைப் பாராட்டினார். பிலிம் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றி ஏ. ராமைய்யா குறிப்பிட்டு இந்த நெருக்கடியை சமாளிக்க சபை மெம்பர் ஒவ்வொருவரும் தனது ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். வருடாந்தர கணக்கு ரிப்போர்ட் நிறைவேறிய பிறகு 1954-55 வருஷத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகஸ்தர்கள் வருமாறு:- எஸ். எஸ். வாஸன்-தலைவர்; ஏ. ராமைய்யா-உபதலைவர்; பி. நாகிரெட்டி, டி. எஸ். முத்துசாமி-கௌரவ காரியதரிசிகள்; கே. எஸ். நாராயண ஐயங்கார்-கௌரவ பொக்கிஷதார்; கமிட்டி மெம்பர்கள். ஏ. வி. மெய்யப்ப செட்டியார், பி. எஸ். ராமகிருஷ்ணராவ், கே. பி. நாகபூஷணம், ஆர். பத்மநாபன், பி. என். ரெட்டி, சோமசுந்தரம், எஸ். கே. ராமசாமி, ஸி. சீதாராம், எஸ். சுந்தரம், டி. அசுவத நாராயணா, எல். எல். பட்டேல், சி. பி. சாரதி, எஸ். சுப்ரமணியன், டி. வெங்கடபதி ராவ்,

கே.எஸ். ஐயர், மதுரை சினிமா விநியோகஸ்தர் சங்கம், டி. வி. சுந்தரம், ஆர். எம். பட்டேல்.

எஸ். எஸ். வாஸன் பேசுகையில், கடந்த 3 வருஷமாக ஏ. ராமையா செய்துள்ள சேவையைப் பாராட்டினார். பிலிம் தொழில் முன்னேற்றத்திற்கும் விஸ்தரிப்புக்கும் பெரிய தடங்கலாக இருப்பது தமாஷா வரிதான் என்றும், சர்க்கார் 35 சதவிகித பட வசூலை தமாஷா வரியாக எடுத்துக் கொண்டு விடுகிறார்கள் என்றும், வேறு எந்தத் தொழிலும் சர்க்காருக்கு இவ்வளவு அதிக வரி தரவில்லை என்றும் சினிமா நான்காவது அத்யாவசியத் தேவையாகக் கருதப்படுகிற தென்றும், இத்தொழிலில் உள்ளவர்கள் இப்பிரச்னை குறித்து சிந்திக்கவில்லை என்பதை எண்ணி வருந்துவதாகவும் கூறினார். இந்தியாவில் 10 லட்சம் பேருக்கு ஒரு தியேட்டர் வீதம் தானிருக்கிற தென்றும், இன்னும் 1,100 நகரங்களில் தியேட்டர்கள் இல்லை என்றும், ஜனத்தொகையில் 70 சத விகிதத்தினரை இன்னும் சினிமா தொடவில்லை என்றும், இன்னும் 1,700 நகரங்களிலும் பிலிம் செல்ல முடிந்தால் பிரச்னை தீரும் என்றும் கூறினார். ஆனால் தமாஷா வரிதான் இந்த விஸ்தரிப்பிற்கு இடையூறாக இருக்கிறது என்று கூறினார். தலைவர் என்ற முறையில் தம்மால் இயன்றதைச் செய்வதாக உறுதியளித்தார். முன்போலவே எல்லோரும் ஒத்துழைக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

வாஸன் வரவேற்கிறார்

படத் தொழில் விசாரணைக் கமிட்டியின் சிபார்சுகள் மீது இந்திய சர்க்கார் செய்துள்ள முடிவுகளை அறிவித்து டாக்டர் கேஸ்கர் வெளியிட்ட அறிக்கையை இந்திய பிலிம் சம்மேளனத் தலைவர் எஸ். எஸ். வாஸன் வரவேற்றிருக்கிறார். படத் தொழில் விசாரணைக் கமிட்டியின் அறிக்கை ஒரு கால் ஆறப் போடப்பட்டு விட்டதோ என்று பொதுவாக கருத்து நிலவி வந்ததென்றும், ஆனால் கேஸ்கரின் அறிக்கையிலிருந்து கமிட்டியின் சிபார்சுகளை சர்க்கார் கவனமாக பரிசீலித்ததுடன் சாத்யமான சில சிபார்சுகளை அமல் நடத்தவும் முயற்சிக்கிறார்களென்பதும் தெரிய வருகிறதென்றும் வாஸன் கூறியிருக்கிறார்.

"தமாஷா வரி விதிப்பு முறை விகிதங்கள் சம்பந்தமான முக்கியமான பிரச்னையில் மத்ய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்காருக்குமிடையே கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப் பட்டிருக்கின்றன என்பது கேஸ்கர் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இந்த ஆலோசனைகள் காரணமாக நிச்சயமாக ஏதாவது நிவாரணம் சீக்கிரமே கிடைக்குமென்று நம்புகிறோம். தேசிய பிலிம் போர்டு, பிலிம் இன்ஸ்டிடியூட், பிலிம் உற்பத்தி பீரோ நிறுவுவது, பிலிம் தொழிலுக்கு மிக்க உதவியாக இருக்குமென்று நம்புகிறேன். மத்ய பிலிம் தணிக்கை போர்டின் அலுவல்களையும் தேசிய பிலிம் போர்டு எடுத்துக் கொள்ளும் யோசனை அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. பிலிம்களை தணிக்கை செய்யும் சட்ட பூர்வமான அதிகாரம் கொண்ட போர்டு பிலிம் உற்பத்தி பீரோ போன்ற ஆலோசனை சபைக்கு மேற்பார்வையிடுவது உசிதமாக இல்லை. இருந்தாலும் கடைசியில் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நம்புவோமாக" என்றும் அவர் கூறியுள்ளார்.

சுவரொட்டிகளுக்கு கட்டுப்பாடு

ஆபாசமான விளம்பரங்களை தெருக்களில் ஒட்டுவதைத் தடுக்கும் விஷயத்தில் கல்கத்தா போலீசார் வெகு ஜரூராக இருந்து வருகின்றனர். ஆபாச விளம்பரங்களை தடை செய்து மேற்கு வங்க சட்ட சபை சமீபத்தில் ஒரு சட்டம் இயற்றியது. அதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. முக்கியமாக வெளிநாட்டுப் படங்களின் விளம்பரங்களில் போலீசார் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

சிறந்த படங்களுக்கு பதக்கங்கள்

இந்திய சர்க்கார், செய்தி-ஒலிபரப்பு மந்திரி காரியாலயம் சிறந்த சினிமாப் படங்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தியுள்ள பரிசுகள், தங்க பதக்கங்களாகவும், வெள்ளிப் பதக்கங்களாகவும் வழங்கப் படுமாம். சிறந்த முழு நீளப் படத்துக்கு வழங்கப்படும் அகில இந்திய அரசாங்கப் பரிசும், சிறந்த

[தொடர்ச்சி 84ம் பக்கத்தில்]

கன்னியின் சாபம்

எல்லார்வி

காலைப் பொழுது விறுவிறு என்று ஏறிக் கொண்டிருந்தது. முன்புறத்து ஹாலில் பிரம்பு நாற்காலியில் ஏதேதோ எண்ணமிட்டபடி சாய்ந்து கிடந்தேன். கூடத்தின் ஒரு புறத்திலே, கூடை விளையாட்டுச் சாமான்களுடன் மும்முரமாக விளையாடிக் கொண்டிருந்தாள் கோகிலா. பாஸ்கரன் வெளியே சென்றிருந்தான். 'அவன் நல்ல செய்தியோடு திரும்பி வரவேண்டும்' என்று பிரார்த்தனை புரிந்தவண்ணம் இருந்தது என் உள்ளம்.

"எல்லாம் தயார் அம்மா. இலை போடலாமா?" என்று சமையற்கார அம்மாள் வந்து கேட்டாள். சட்டென்று என்னால் பதில் சொல்ல முடியவில்லை. "இன்னும் கொஞ்சநேரம் பார்க்கலாமே" என்று தழுதழுத்தேன். அந்த அம்மாள் உள்ளே போய்விட்டாள். என் மனம் மீண்டும் குழைய ஆரம்பித்தது.

அன்று சுமங்கலிப் பிரார்த்தனை. கடந்த ஐந்து ஆண்டுகளாக இடையூறு ஏதுமின்றி அதி விமரிசையாக நடைபெற்றுவரும் இந்தக் காரியத்தில் இன்று ஒரு கண்கலக்கம் ஏற்பட்டிருந்தது. நேற்றே வந்து விடுவதாகச் சொல்லி 'டூர்' சென்றிருந்த என் கணவர் இன்று காலை மணி பத்து ஆகியும் வந்து சேரவில்லை. 'இந்த வைபவத்தில் வழக்கம்போலக் கலந்துகொள்ள அவர் இல்லையே' என்ற கவலையோடு மட்டும் இருந்த என்னை அதைவிடப் பெரிய கவலையைப் படும்படியாகச் செய்து விட்டன, தினசரிப் பத்திரிகைகளும் ரேடியோவும். சரியான மழைக் காலமானதால் என் கணவர் சென்றிருந்த பிரதேசத்தில் திடீரென்று பெரு வெள்ளம் ஏற்பட்டு அங்கே ஏராளச் சேதம் என்பது தெரியவந்தது. பாதைகள் சீரழிந்து விட்டனவாம். சுமங்கலிப் பிரார்த்தனையில் கலந்துகொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தில் அவர் வழிவிட்டு வழியில் பிரயாணம் தொடங்கி ஏதாவது விபத்துக்கு உள்ளாகாமல் இருக்கவேண்டுமே!

"அம்மா" என்று அழைத்துக் கொண்டே பாஸ்கரன் உள்ளே வந்து நுழைந்தான். "என்னடா குழந்தை? ஏதாவது நல்ல சேதி உண்டா?" என்று படபடத்த குரலில் கேட்டுக்கொண்டே துள்ளி எழுந்தேன் நான்.

அவன் உதட்டைப் பிதுக்கி தலையை இப்படியும் அப்படியும் ஆட்டினான். "ரெயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு, போஸ்டாபீஸ் எல்லா இடங்களுக்கும் போய் வந்துவிட்டேன் அம்மா. அப்பாவைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறிவிட்டு முகத்தைத் தொங்கவிட்டபடி மீண்டும் வெளியே சென்றான்.

என் உள்ளம் கவலையைத் தாளாது தவியாய்த் தவித்தது. கண் இருள, நாவறள, உடல் துவள ஆயாச மேலீட்டால் மீளவும் பொத்தென்று நாற்காலியில் சாய்ந்தேன். கண்கள் கூடத்தை நோக்கின. கோகிலா கூடை விளையாட்டுச் சாமான்களுக்கிடையே அப்படியே சுருண்டு படுத்துக் கண் அயர்ந்திருந்தாள். பாவம், பசி அதற்கு. காலையிலிருந்து பட்டினி அல்லவா? அந்த நேரத்தில் எனக்கு அவள் நிலையோ, மற்றெதுவோ ஒரு பொருட்டாகவே இல்லை. என் மங்கல வாழ்வே அந்தரத்தில் ஊசலாடுவது போல் ஓர் பிரமை. அந்தப் பிரமைக்கிடையே அன்று வரை நிகழ்ந்தவை நிழற்படம் போல் ஓடிக் கொண்டிருந்தன எனது மனத் திரையிலே.

2

நான் பிறந்த இடம் புகுந்த இடம் இரண்டுமே செல்வ நிலை உடையவைதாம். எங்கள் புது வாழ்வு ஆரம்பமான சிறிது காலத்திற் குள்ளாகவே இருதரப்புப் பெரியோர்களும் கிரமமாகக் காலமானார்கள். என் பெற்றோருக்கு நான் ஒரே பெண். எனவே, அவர்களின் சொத்தும் என்னிடமே சேர்ந்தது. எங்கள் தனி வாழ்க்கை மிக்க ஆனந்தமாகவே ஓடிக் கொண்டிருந்தது. அவர் உத்தியோகத்தில் படிப் படியாக உயர்ந்து ஆபீஸர் ஆனார்.

ஆனால் எங்கள் மகிழ்ச்சி மேலும் மேலும் வளர்ச்சி பெறவில்லை. கல்யாணமாகிப் பதினைந்து ஆண்டுகள் வரையிலேதான் எங்களால் அந்தக் குறையைச் சகித்துக் கொள்ள முடிந்தது. என்ன செல்வம் இருந்தென்ன, எப்பேர்ப்பட்ட உத்தியோகம் இருந்தென்ன? எவ்வளவு செல்வாக்கு இருந்தென்ன, மற்றும் எது இருந்துதான் என்ன? அனைத்தையும் புல்லாக மதிக்கச் செய்தது, சந்தான பாக்கியம் இல்லாத குறை!

வைத்திய நிபுணர்களிடம் சென்றோம். எங்கள் உடற்கூற்றில் எவ்விதக் குறையும் இல்லை என்றார்கள். நாகப் பிரதிஷ்டை செய்தோம், ஸர்ப்ப சாந்தி செய்தோம்; மற்றும் அநேகம் தான தருமங்கள் செய்தோம். தல யாத்திரை போனோம். என்ன செய்து என்ன? எங்கள் குறை தீருவதாக இல்லை. நாங்கள் சதா ஏக்கத்தில் மூழ்கிக் கிடந்தோம்.

ஒரு சமயம் மலையாளம், பக்கம் யாத்திரை செய்தோம். அங்கே பிரபல மந்திரவாதி ஒருவரைக் கண்டோம். அவர் தம் உபாஸனை தெய்வத்திற்குப் பூசை போட்டுக் குறி கேட்டார். முடிவில், "உங்கள் குலத்திற்குக் கன்னியின் சாபம் இருக்கிறது. அதுதான் பிள்ளைப் பேறு இல்லாமல் தடை செய்கிறது" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று கணவரைத் திரும்பிப் பார்த்தேன். அவர் முகம் பேயறைந்தாற்போல் மாறி இருந்தது. "என்ன, இப்படிச் சொல்கிறீரே?" என்று பயந்து போய்க் கேட்டேன் நான்.

"வெறும் பிதற்றல்!"—இப்படிக் கூறிவிட்டு எழுந்து அப்பாற் சென்று விட்டார் அவர்.

மந்திரவாதிக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன? பிதற்றலா? மூன்று நாள் என் பூசையிலே உட்காருங்கள், என்ன சாபம், எதனால் நேர்ந்தது, எப்

போது நேர்ந்தது என்கிற விவரமெல்லாம் தெளிவு படுத்துகிறேன்!" என்று கர்ஜித்தார். என் கணவர் எங்கோ நின்றுகொண்டு, "ஆமாமாம். பெரிய சூரப்புலிதான்!" என்று முணு முணுப்பது கேட்டது.

எனக்கு மந்திரவாதியின் பௌருஷப் பேச்சில் நம்பிக்கை பிறந்தது; கணவரின் போக்கிலே வியப்பு ஏற்பட்டது; விஷயத்தைத் தெள்ளத் தெளிய உணர்ந்து பரிகாரம் தேடுவதிலே ஆர்வம் பொங்கிற்று. நான் கிடந்து துடியாய்த் துடித்தேன்.

என்ன பிரயோசனம்? என் கணவர் என்னோடு ஒத்துழைக்கவில்லை. சந்தான பாக்கியத்தைப் பெற என்னிலும் ஆர்வம் உடையவர் அவர். அதற்குக் குறுக்கே நிற்கிற தீய சக்திகளை அழித்து அனுகூலச் சக்திகளைத் திரட்டுவதில் மிகத் தீவிரம் உடையவர், அப்படிப்பட்டவர் இந்த விஷயத்திலே இப்படி முரண்டு செய்தது எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று. இதனால் அவரிடம் உருப்புரியாத ஒரு சந்தேகமும் என் மனத்தில் தலை காட்டலாயிற்று. எனவே, பலமாகப் பிடிவாதம் பிடித்தேன். அவரும் மிகப் பலமாகவே மறுத்தார். லீவ இல்லையென்றார்; உடனேயே புறப்படவேண்டும் என்றார். கடைசியில் அவர் பிடிவாதத்தில் வெற்றியும் பெற்றுவிட்டார். நாங்கள் அன்றிரவே அங்கிருந்தும் கிளம்பிவிட்டோம்.

ஒரு வாரத்திற்கு அதிகமான லீவு பாக்கி இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். மனம் வைத்தால் மாதக் கணக்கிலே லீவு எடுக்க அவரால் முடியும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் மனம் வைத்தால் தானே?

என்னைச் சமாதானம் செய்ய வழி நெடுக அவர் எவ்வளவோ பாடுபட்டார். "நீலா, மந்திரவாதி சொன்னதைக் கேட்டு நான் ஏதோ பயந்துவிட்டதாக நீ நினைக்கிறாய். அது சரியல்ல. மலையாளத்து மந்திரவாதிகள் இருக்கிறார்களே, அவர்கள் மிகவும் பொல்லாதவர்கள். இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து நம்ப வைப்பதில் பலே சூரர்கள். நம் இருவர் குடும்பங்களும் துல்லியமான பரம்பரைகள். இவற்றில் எதிலோ ஒன்றில் களங்கம் இருப்பதாக அந்த மந்திரவாதி கதை கட்டிவிட்டால்....? அப்புறம் அது நம் நெஞ்சை அறுத்துக்கொண்டே இருக்குமே! அதற்கு இடந்தர எனக்கு இஷ்டம் இல்லை. அதுதான் முறித்துக்கொண்டு உடனே கிளம்பிவிட்டேன்" என்றார்.

சமாதானம் என்னவோ மிகவும் அழகாகவும் பொருத்தமாகவும் தான் இருந்தது. அப்போதைக்கு அதை என் உள்ளம் சிறிது நம்பவும் நம்பிற்று. என்றாலும் முழுத் தெளிவு இல்லை.

இந்தப் பிரயாணத்திற்குப் பின் என் கணவர் அடியோடு மாறியே போய்விட்டார். கலகலப்பான பேச்சில்லை, சிரிப்பில்லை. எப்பொழுதும் 'உம்' என்றே இருந்தார். அவரது இச் செய்கைகளினால் என் மனம் மேலும் நொந்தது.

3

ஒரு சமயம் வெளியூரில் நடைபெற்ற உறவினர் வீட்டுக் கல்யாணம் ஒன்றிற்குச் சென்றிருந்தோம். எங்களுக்குத் தனி விடுதி ஏற்படுத்தி இருந்தார்கள். சாப்பாடு, சிற்றுண்டி, காப்பி யாவும் விடுதிக்கே வந்தன. எங்களுக்கு ராஜோபசாரம் நடந்தது.

கல்யாணத்தன்று பிற்பகல் சிற்றுண்டி காப்பியை சிறுவயதுடைய பையன் ஒருவன் எடுத்து வந்தான். பார்வைக்கு மிகவும் நன்ருக இருந்தான். மிகவும் பவ்வியமாக நடந்துகொண்டான். இனிமையாக, இங்கிதமாகப் பேசினான். என் கணவர் அவன் வந்த உடனேயே அவனை ஊன்றி நோக்கினார். பிறகும் அடிக்கடி உன்னிப்பாகப் பார்த்தபடி இருந்தார். அதைக் கவனித்திருந்த நான் அவன் சென்றதும், "அவனை ஏன் அப்படிப் பார்த்தீர்கள்?" என்று வினவினேன். அவர் சட்டென்று பதில் சொல்லவில்லை. பிறகு என் உபத்திரவம் தாளாது, "ஏன்? அவன் புருஷப் பையன்தானே? அவனைப் பார்ப்பது கூடத் தவரு?" என்று சீறிவிழுந்தார்.

அதைக் கேட்டு நான் வருத்தமுறவில்லை. "எதற்கு இப்படி ஒன்றுமில்லாததற்கெல்லாம் வெடு வெடுக்கிறீர்கள்? வந்ததே முதல் நானும் அவனைக் கவனித்துக் கொண்டேதான் இருந்தேன். முகத்திலும் பார்வையிலும் பேச்சிலும் சிரிப்பிலும் நடவடிக்கைகளிலும் பெரிய மனிதத்தன்மையும் நேர்மையும் நிறைந்திருந்தன. நல்ல செயலில் உள்ள குடும்பத்திலிருந்து ஏதோ கோபதாபத்திலே வந்து பரிசாரகக் கோஷ்டியிலே சேர்ந்தவனுக இருப்பான் என எண்ணினேன். என்னைப் போலவேதான் நீங்களும் எண்ணினீர்களோ என்பதை அறிவதற்காகத்தான் கேட்டேன். அதற்காக இப்படிக் கோபிக்கிறீர்களே!" என்றேன் நிதானமாக.

அவர் முகம் மாறிற்று; அல்லது மாற்றிக்கொண்டார்.

"நீ நினைத்தது மிகவும் சரிதான் நீலா. நானும் அவனைப்பற்றி அப்படியேதான் எண்ணினேன்....ஏதோ கவனத்தில் சற்று படபடப்பாகப் பேசிவிட்டேன். வருத்தப் படாதே" என்று என்னைச் சமாதானம் செய்யத் தொடங்கினார்.

அன்றிரவு நான் அயர்ந்த தூக்கத்தில் இருந்தேன். யாரோ வந்து என்னைத் தட்டி எழுப்பவும் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். வேறு யாரும் இல்லை. கல்யாண வீட்டைச் சேர்ந்த ஒரு பெண்தான். "ஊர்வலம் கிளம்பப் போகிறது. எழுந்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்ருள். எழுந்தேன், படுக்கையில் அவரைக் காணவில்லை. கவலையோடு வாசற்புறம் போனேன். பக்கத்திலிருந்த பாழ் மனையில் அவர் யாருடனே நின்று பேசிக்கொண்டிருந்தது மங்கின நிலவொளியில் கண்ணில் பட்டது. 'சாயங்காலம் ஏதோ சம்பந்தித் தகராறு என்ருர்களே, அதைப்பற்றின விவகாரமாக இருக்குமோ, அல்லது மத்தியானம் இவருடைய வைர மோதிரம் கெட்டுப்போயிற்றே, அதைப் பற்றிய தகவலாக இருக்கக் கூடுமோ?' என்றெல்லாம் பல பல எண்ணினேன். இரண்டடி முன்னுக்குச் சென்று நன்கு கவனித்தேன்.

என்ன ஆச்சரியம்! அவரோடு பேசித்

தங்கம், வெள்ளி ஆபரணங்களுக்கு
சிறந்த இடம்
தி ஜெயின் ஜுவல்லெரி கம்பெனி
1, நாகேஸ்வர ராவ் ரோடு
தியாகராய நகர் :: சென்னை.

கொண்டிருந்தவன் அந்தச் சமையற்காரப் பையன்தான்!

என் வியப்பை அடக்கிக்கொண்டு, என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தேன். சில வார்த்தைகள் காதில் விழுந்தன; சில விழவில்லை. கடைசியில் அவர் அவனிடம் கடித உறை ஒன்றைக் கொடுத்தார். "இதில் நூறு ரூபாயும் என் விலாசமும் இருக்கிறது. இப்போதைக்கு இதைச் செலவுக்கு வைத்துக் கொள். நன்றாகப் படி. ஒழுங்காய் இரு. வாரம் தவறாது கடிதம் எழுது. மாதம் தவறாது நான் பணம் அனுப்புகிறேன்" என்றார். அவன் கையெடுத்துக் கும்பிட்டான்.

அதே சமயத்தில் ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. கியாஸ் லைட்டுகள் நடமாடத் தொடங்கின. அவற்றின் ஒளியில் நான் அங்கே நின்றிருப்பதை அவர் பார்த்துவிட்டுப் போகிறாரே என்று ஓட்டமாக ஓடிச் சென்று படுக்கையில் படுத்தேன். சற்றுப் பொறுத்து அவரும் வந்து தலை சாய்த்தார். அதற்குள் சிலர் வந்து எங்களை வற்புறுத்தி ஊர்வலத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டனர்.

அதன் பிறகு, ஊர் திரும்பி எங்கள் வீட்டை அடைகிற வரைக்கும் எனக்கு அவரோடு தனிமையில் பேசும் வாய்ப்புக் கிட்டவேயில்லை.

4

"ஆபீஸ் விஷயமாகத் தொடர்ந்து வாரக் கணக்கில் எங்கெல்லாமோ சுற்றி அலைந்துவிட்டு வருகிற போதெல்லாங் கூட இல்லாத ஒரு சிரமம் இந்தச் சின்னப் பிரயாணத்திலே உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறார்ப்போல் தெரிகிறதே."

"ஆமாம். மிகவும் சிரமமாகத்தான் இருக்கிறது."

"சிரமம் உடம்பிற்கா, மனதுக்கா?"

"எ...ன்....ன!"—அவர் கண்களைத் திறந்து என்னைப் பார்த்தார்.

"உங்களிடம்........ஒன்று.........கேட்கலாமா?"

"பீடிகை எதற்கு?....கேளேன்"

"அந்தப் பரிசாரகப் பையன்...."

"அட, சட்! உனக்கு வேறே வேலை இல்லையா? ஊரில் இருக்கிற பரிசாரகப் பயல்களையும் பிச்சைக்காரப் பயல்களையும் பற்றித்தானா இப்பொழுது கவலையெல்லாம்?"

நான் பொறுமையின் எல்லையைக் கடந்தேன்.

"அதிகம் கோபித்துக் கொள்ளாதீர்கள். அந்தப் பிச்சைக்காரப் பயலிடம் நடு இரவில், கொட்டுகிற பனியில், பாழ்மனையில், கல்லிலும் முள்ளிலும் மணிக் கணக்காக நின்று பேசிவிட்டு, கடைசியில் பணமும் விலாசமும் கொடுத்தீர்களே? அது வீட்டு விலாசமா என்றுதான் கேட்க வந்தேன்...."

"நீலா!........" அவர் தொண்டை நடுங்கிற்று. "உனக்கு எப்படித் தெரியும் நீலா? அப்பொழுது நீ அயர்ந்து தூங்கிக் கொண்டல்லவா இருந்தாய்?"

"முதலில் ஒரு தரம் வந்து ஊர்வலத்திற்காக அழைத்தார்கள். உங்களைக் காணாது தேடிக் கொண்டு வாசலுக்கு வந்தேன், பார்த்தேன்."

"பேசிக் கொண்டிருந்தது பூராவையும் கேட்டாயா?"

"இல்லை, கடைசியில் சில வார்த்தைகள் மட்டுந்தான்."

அவர் முகம் சிறிது தெளிவடைந்தது.

"யார் அந்தப் பையன்?"

"மிகவும் வேண்டிய நண்பரின் பிள்ளை, பாவம், ஏதோ சிறிது......."

நான் சிரித்தேன். மறுபடியும் அவர் முகம் சுருங்கிற்று.

"இதோ பாருங்கள், நான் உங்கள் மனைவி, என்னை அறியாது உங்களிடம் ஒரு ரகசியமும் இருக்கலாகாது. நீங்கள் தனவந்தர்; பெரிய ஆபீஸர்; பிள்ளையில்லாச் சொத்திலிருந்து நீங்கள் உங்கள் நண்பரின் பிள்ளைக்கு உதவுவதை யார் தடுக்க முடியும்? அதில் அத்தனை ரகசியம் என்ன? இங்கே கவனியுங்கள். இனியும் என்னை ஏமாற்ற முடியாது. உங்கள் சம்பாஷணையை அடி முதல் முடிவு வரை அணு அணுவாக நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். வீணாக என் மனதிலே புதைத்துக் கொண்டு திண்டாடுகிறீர்கள்? எதுவானாலும் மனம் விட்டு, வாய்விட்டுச் சொல்லுங்களேன். நான் உங்கள் நீலா இல்லையா? என்னிடம் எதற்காக ஒளிவு மறைவு?"

அவர் கண்கள் கலங்கின; உதடுகள் துடித்தன.

''உண்மைதான் நீலா. உன்னிடம் ஏன் ஒளிக்கவேண்டும்? செய்த பாவத்தைச் சொல்லித் தீர்த்துக்கொள் என் பார்கள் சொல்கிறேன். ஆனல், நீ உடனேயே அதை மறந்துவிட வேண்டும். என்ன?''

''அப்படியே ஆகட்டும். சொல்லுங்கள்.''

''சொல்வதற்குப் பிரமாதமாக ஒன்றும் இல்லை, நீலா. அந்தக் கண்ணருவிப் பேச்சை வளர்த்துக் கொண்டு போக நான் விரும்பவில்லை. நாலே வார்த்தைகளில் முடித்து விடுகிறேன்.

''பெரிய பெரிய மகான்கள்கூட சந்தர்ப்ப வசத்தால் தவறு இழைத்துவிடுகிருர்கள். பருவமும், சந்தர்ப்பமும் கொடிய சக்தி வாய்ந்தவை என்பதை நீ மறுக்கமாட்டாய்.

''கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தபோது மகத்தான ஒரு தவறைச் செய்துவிட்டேன், நீலா. எளிய நிலையில் இருந்த திக்கற்ற கிழவி தன் பேத்தியின் நிலை கண்டு வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். கன்னிப் பெண் கோகிலா பிரசவ ஆஸ்பத்திரியில் உயிர் நீத்தாள். பாட்டி பேரனை வளர்த்து வந்தாள், நான் பண உதவி செய்து வந்தேன்.

''என் படிப்பு முடிந்தது. ஊர் திரும்பினேன். நம் கல்யாணம் நடந்தது. உத்தியோகம் ஏற்றேன். உத்தியோக சம்பந்தமாகச் சென்னை சென்ற போது கிழவி இறந்துபோன செய்தி கிடைத்தது. பையன் என்ன ஆனன் என்ற தகவல் கிடைக்கவேயில்லை. என் நெஞ்சின் பளு அதிகமாயிற்று.

''உன் கூட்டுறவு பழைய விஷயங்களை ஓரளவு மறக்கச் செய்தது. ஆனல் அந்த மலையாளத்து மந்திரவாதி அதைக் கிளப்பி விட்டுவிட்டான். 'அந்த ஏழைப் பெண் கோகிலா ஜீவனைத் துறக்கும்போது என்னைச் சபித்துத்தான் இருப்பாள்; அந்தச் சாபமே தான் நம் குலத்தை விளங்கவைக்க வில்லை' என்று ஏற்கெனவே நான் எண்ணிக் குமுறிக் கொண்டிருந்ததற்கேற்ப அவன் 'கன்னியின் சாபம்' என்றதும் நான் பட்ட பாடு!

''நீலா, எந்த மனிதன் தான் தன் இழி நிலையைப் பகிரங்கப் படுத்திக் கொள்ள விரும்புவான்? ஆனல் இத்தனை வருஷங்களுக்குப் பின் அந்தப் பையன் எதிர்ப்படுவான் என்ருே, இதையெல்லாம் நீ அறியும் நிலை ஏற்படும் என்ருே நான் எதிர்பார்க்கவே இல்லை....''

''அவனிடம் உங்கள் சாயல் பரிபூர்ணமாக இருப்பதைக் கண்டு, மந்திரவாதி சொன்னதையும் கொண்டு நானே சிறிது சந்தேகித்தேன். அது சரியாகி விட்டது. ஏன் அவனை விட்டு விட்டீர்கள்?''

''சிறிது காலம் பொறுத்துப் பக்குவமாக உன்னிடம் விஷயத்தைச் சொல்லி உன் அநுமதி பெற்று, அழைத்துக் கொள்ளலாமென்பது என் எண்ணம். இப்போதுதான் என்ன? 'வா' என்று எழுதினல் வருகிருன்.''

''உடனே எழுதி வரவழையுங்கள். ஏனென்ருல், நமக்குத் தான் சந்ததி இல்லை என்று ஆகிவிட்டது. அவனையே தத்தாகக் கொண்டு வளர்க்கலாம். அப்போதுதான் அந்த ஏழைப் பெண்ணின் ஆன்மாவும் சாந்தி பெறும். அந்தக் கன்னிப் பெண்ணின் சாபம் எனக்கு சந்தான பாக்கியம் இல்லாமற் செய்ததோடு போகட்டும். இந்தப் பரிகாரத்தினல் என் மங்கல வாழ்வாவது நிலைக்கட்டும்....''

அவர் சட்டென்று எழுந்து வந்து, என் கண்ணீரைத் துடைத்தார்.

நடையிலே காலடி ஓசை கேட்டது. இருவரும் எட்டிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! அந்தப் பையனே வந்து கொண்டிருந்தான். சிரித்த முகத்துடன் உள்ளே வந்த அவன் சொன்னன்:

''இரவு சென்னைக்குப் புறப்படுகிற வரைக்கும் பழகின பையன்களோடு பொழுதைக் கழிக்கலாம் என்று அங்கே தங்கினதற்கு நல்ல பலன் கிடைத்தது. நீங்கள் தங்கியிருந்த விடுதியிலே இரண்டாங் கட்டிலே குளிக்கும் இடத்திலே குப்பைகளின் நடுவே இது கிடந்தது. இதுதானே நேற்று காணமற் போன மோதிரம்.......''

தொலைந்து போயிருந்த அவருடைய வைர மோதிரத்தை அவன் கொண்டு வந்து கொடுத்தது—அவன் நல்ல பையன் என்பதற்குத் தகுந்த ருஜுவாக இருந்தது. எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

பாஸ்கரன் வந்தது முதல் வீட்டிலே ஜீவ களை நிறைந்தது. அது மட்டுமா? அவன் காலடி வைத்த வேளை எங்கள் நெடுநாளையக் கவியும் தீர்ந்து போய்விட்டது. குழந்தைக்கு அவன தாயின் பெயரையே சூட்டி, 'கோசிலா' என்று அழைத்து மகிழ்ந்தோம்.

ஒரு நாள் அவர் பழைய காகிதங்களைப் புரட்டினபோது அவற்றிலிருந்து கோகிலா ஆஸ்பத்திரியில் மறைந்த நாள் குறிப்புக் கிடைத்தது. அதுமுதல் பாஸ்கரனைக் கொண்டு ஆண்டுதோறும் முறைபபடி திதியைச செய்வித்ததும் அல்லாமல் அதற்கு மறுநாள் தவருமல் சுமங்கலிப் பிரார்த்தனையையும் விமரிசையாக நடத்தி வருகிருேம். இன்றளவும் ஒரு குறைவும் இல்லை. ஆனல்.... இன்று....இது என்ன சோதனை !....

என்னல் அதற்குமேல் சிந்தித்துப் பாக்க முடியவில்லை. 'கன்னித் தாயே இத்தனை நாளும் இந்தக் குடும்பத்தைக் காத்துத் தழைககச் செயத நீ இன்றும் என வயிற்றிலே பாலை வார்க்கவேணும் அம்மா!' என்று மானசீகமாக வேண்டியபடி கண்ணை மூடிக் கரங் குவித்து வணங்கினேன்.

6

"**போ**தாகிவிட்டதே நீலாம்பா. பெண்டுகள் அதிக நாழிகை பசியோடு காத்திருக்கப படாதே"—அடுத்த வீட்டு அம்மாள் என் அருகே வந்து இப்படிச் சொன்னதும் நான் நினைவு பெற்றுச் சட்டென்று எழுந்தேன்.

"வாஸ்தவந்தான், அபசாரம்! அபசாரம்! சீககிரம் இலையைப் போட்டுப் பரிமாறச் சொல்லுங்கள்" என்றேன்.

நொடிப்பொழுதில் பந்தி தயாராகிவிட்டது. வெளியே சென்றிருந்த பாஸ்கரனும் வந்துவிட்டான். நீர் வார்க்கும் சமயம் அப்போது........

"அம்மா, தெருக்கோடியிலே ஹாரன் கேட்கிறதம்மா" என்ருன் பாஸ்கரன்.

'வெறும் பிரமை' என்று சொல்ல நான் வாய் திறக்குமுன், 'பாம், பாம்!' என்று தெருவிலே மோட்டார் குழலின் ஓசை கேட்டது. 'அவர் தாமோ, வேறு யாரோ' என்று நான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிலேயே படபட வென்று தெருக் கதவு தட்டப்பட்டது. பாஸ்கரன் எழுநது ஓடினன்.

அவர் சிரித்த முகத்துடன் உள்ளே வந்தார். "எங்கெல்லாமோ சுற்றியலைந்து, பறந்து விழுந்துகொண்டு வந்தேன், நீலா. எப்படியோ சரியான சமயத்திற்கு வந்துவிட்டேன் போல் இருக்கிறதே?" என்ருர்.

"ஆமாமாம்!" என்ருள் கோகிலா, கன்னங் குழையச் சிரித்தபடி.

"எல்லாம் அந்தக் கன்னித் தாயின் அருள்" என்றேன் நான், உணர்ச்சி வசமாகிக் கண்களில் நீர் ததும்ப. அதற்குள் அந்தப் போக்கிரி கோகிலா, "ஆமாம், அம்மா, ஆமாம்" என்று நீட்டி முழக்கினுள். அவளுடைய கல்விப் பேச்சைக் கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

[20ம் பக்கத் தொடர்ச்சி]

சினிமா புரொஜக்டர்கள் தயாரிப்பதற்காக திட்டம் ஒன்று ஏற்கனவே அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. சாதனங்கள் உள் நாட்டில் தயாரிப்பது சம்பந்தமாய் சர்க்காருக்குச் சமர்ப்பிக்கப் படக்கூடிய இதர பிரேரணைகள் கமிட்டியாரின் சிபார்சை அனுசரித்து பரிசீலனை செய்யப்படும்.

வேறு பல சிபாரிசுகள் சம்பந்தமாகவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சினிமாக் கொட்டகைகளுக்கு லைசென்ஸ்கள் கொடுக்க மறுத்து லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரிகள் செய்யும் தீர்ப்புகள் மீது அப்பீல் செய்து கொள்வதற்கு மத்திய சட்டத்திலும் பல ராஜ்யங்களின் சட்டங்களிலும் நிபந்தனை கண்டிருக்கிறது. பில்ம்களை பொது ஜனங்களுககுக் காட்டுவதற்காக அளிக்கப்படும் அத்தாட்சிப் பத்திரங்கள் ஐந்து வருஷத்துக்குச் செல்லுபடியாகும்படி வரையறை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. காப்பிரைட் உரிமைப் பற்றிய எல்லா அம்சங்களும் அடங்கியதாயும் எழுத்தறிவு, கலை, வேலை, இவை சம்பந்தமான விளக்கங்களை சினிமாப் படங்களுக்கும் பிரயோகப்படும்படி விஸ்தரிப்பதாயும் உள்ள மசோதா ஒன்று தயாராகிறது. கட்டடச் சாமான்கள் பற்ருக்குறை காரணமாக புதிய சினிமாக் கொட்டகைகள் கட்டுவதன் மீது 1948-ல் விதிக்கப்பட்ட தடை, இதர தேவைகளுக்கு அதிகமில்லாத வகையில் நீக்கிவிடப் பட்டிருக்கிறது.

பிரம்ம லோகம்

ஔவை புரொடக்ஷன்ஸின் "ரத்த பாசம்" தமிழ்ப் படம் பெரும் பகுதி நெப்டியூன் ஸ்டுடியோவில் படமாகிவிட்டது. பம்பாய்த் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நாடக விழாவில் பங்கெடுத்துக் கொள்ள பம்பாய் சென்றிருந்த டி.கே. எஸ். பிரதர்ஸ் இப்படத்திற்கென சில வெளிப்புறக் காட்சிகளை அங்கு படமாக்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படத்தில், ஊதாரி அண்ணனாக டி. கே. பகவதியும், நாடோடித் தம்பியாக டி. கே. ஷண்முகமும் நடிக்கின்றனர். வில்லனாக பாலய்யாவும், வில்லியாக வித்யாவதியும், நாடோடியின் மனதைக் கவர்ந்த ராணியாக அஞ்சலி தேவியும் நடித்து வருகின்றனர். சங்கீத டைரெக்ஷன் ஆத்மநாதன் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. ஜிக்கி, லீலா, ஆகியோரின் பாட்டுகள் பல இப்படத்தில் இடம் பெற்றிருக்கின்றன. ஆர். எஸ். மணி டைரெக்ஷனில் தயராகி வருகிறது இந்த சமூகப் படம்.

என் மகள்

அசோகா பிக்சர்ஸார் ரேவதி ஸ்டுடியோவில் தயாரித்து வரும் தங்கள் இரண்டாவது தமிழ்ப் படத்திற்கு "என் மகள்" எனப் பெயரிட்டிருக்கின்றனர். சமீபத்தில், ஜமீன்தார் பங்களாக் காட்சிகள் சில படமாயின. எஸ். வரலக்ஷ்மி, மைனாவதி, ரஞ்சன், எம். என். நம்பியார், எம். ஜி. சக்ரபாணி, டி. பாலசுப்ரமண்யம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். ஆச்சார்யா டைரெக்ட் செய்துவரும் இப் படம் ஓரிரண்டு மாதங்களில் திரைக்கு வந்துவிடுமாம்.

புது வாழ்வு

காரிகை ஒருத்தியைக் கயவன் ஒருவன் பலாத்காரம் செய்யும் கட்டத்தில் மூன்றாவது ஆசாமி தலையிட்டு கயவனை நையப்புடைத்து காரிகையை விடுவிக்கிறார். இந்த கட்டம் சமீபத்தில் நியூடோன் ஸ்டுடியோவில் படமாகியது. கயவனாக தங்கவேலுவும், காரிகையாக லலிதாவும் இக் கட்டத்தில் நடித்தனர். மேற்படி கட்டம் எம். கே. தியாகராஜ பாகவதரின் "புது வாழ்வு"க்காகத் தயாரிக்கப்பட்டது. "புது வாழ்வு" பாகவதர் பிரதம பாகத்தில் நடித்து, அவரே டைரெக்ட் செய்யும் முதல் சமூகப் படமாகும். படத்தின் வசனங்களை இளங்கோவனும், பாட்டுகளை பாபநாசம் சிவனும் எழுதியிருக்கின்றனர். இப் படத்தில் மற்றும் மாதுரி தேவி, டி. எஸ். பாலய்யா, குமாரி துளஸி ஆகியோரும் நடிக்கின்றனர்.

கூண்டுக் கிளி

நீண்ட காலமாகப் பிரிந்திருந்த நண்பர்கள் கூடும் காட்சி ஒன்று ஆர். ஆர். பிக்சர்ஸின் "கூண்டுக் கிளி"க்காக சமீபத்தில் ரேவதி ஸ்டுடியோவில் படமாகியது. நண்பர்களாக எம். ஜி. ராமச்சந்திரனும் சிவாஜி கணேசனும் நடித்தார்கள். இப் படம் சீக்கிரமே திரைக்கு வந்துவிடக்கூடும். "ஔவை" மூலம் ரஸிகர்கள் உள்ளத்தில் இடம் பெற்றுள்ள குசல குமாரி இப்படத்தில் முக்கியமான ஒரு பாத்திரத்தில் நடித்து வருகிறார். மற்றும் கே. சாரங்கபாணி, ஏழுமலை, பி. எஸ். சரோஜா. முத்துலக்ஷ்மி ஆகியோரும் இப் படத்தில் நடித்து வருகின்றனர். ராமண்ணா டைரெக்ஷனில் தயாராகும் இப் படத்தின் வசனங்களை "விந்தன்" எழுதியிருக்கிறார்.

ஜோதி

சீக்கிரமே திரைக்கு வரக்கூடிய படங்களில் நவயுகா பிக்சர்ஸின் தமிழாக்கப்படும் "ஜோதி"யும் ஒன்றாக இருக்கும். வாஹினி ஸ்டுடியோவில் இப் படத்தின் இறுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. தெலுங்கில் தயாரிக்கப்படும் இப் படம் உடனுக்குடன் தமி

யாரோ, இவர் யாரோ?

சென்ற மாதம் இந்தப் பகுதியில் மாறு வேஷத்துடன் காட்சியளித்தவர்: **சாவித்திரி**

மூக்கப்பட்டு வருகிறது. ஜி. வரலக்ஷமி, ஸ்ரீராம மூர்த்தி, பிரதம பாகங்களில் நடிக்கும் படம்.

மலைக் கள்வன்

நாமக்கல் கவிஞரின் கதையை அடிப்படையாகக் கொண்ட "மலைக் கள்வன்" பக்ஷிராஜாவின் தயாரிப்பாக, கோவையில் அவர்கள் ஸ்டுடியோவில் மளமளவென்று படமாகி வருகிறது. இப்படத்தின் வசனங்களை மு. கருணாநிதி எழுதியிருக்கிறார். எம்.ஜி. ராமச்சந்திரன், பி. பானுமதி, ஸ்ரீராம், டி. எஸ். துரைராஜ் முக்கிய கதா பாத்திரங்களாக நடித்து வருகின்றனர். ஸ்ரீ ராமுலு நாயுடு டைரெக்ஷனில் படம் உருவாகி வருகிறது. இப்படம் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

துளி விஷம்

நரஸுவின் முத்திரையுடன் அவர்களது சொந்தப் படமாக வெளிவரவிருக்கிறது. "துளி விஷம்" ஏ. எஸ். ஏ. சாமியால் எழுதப்பட்டு நாடகமாக நடிக்கப் பட்டதாகும் இந்த "துளிவிஷம்". படத்தை டைரெக்ட் செய்யும் அவர் திரைக் கதையாக மாற்றி, வசனங்களையும் எழுதியுள்ளார். சிவாஜி கணேசன், கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணஸ்வாமி ரங்க ராவ், பி. கே. சரஸ்வதி, கிருஷ்ண குமாரி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, டி. பி. முத்துலக்ஷமி ஆகப் பலர் நடிக்கும் இப் படம் தமிழ் — தெலுங்கு இரு பாஷைகளில் தயாரிக்கப் படுகிறது.

சந்தேஹி

நடுவில் சிறிது காலம் தடைப்பட்டிருந்த நாகூரின் "சந்தேஹி" மீண்டும் நியூட்டோன் ஸ்டுடியோவில் வளரத் தொடங்கியிருக்கிறது. "சந்தேஹி" தமிழ்—மலையாளம் — தெலுங்கு ஆகிய 3 பாஷைகளில் படமாக்கப்பட்டு வருகிறது. தமிழ்ப் பதிப்பில் எம். வி. ராஜம்மா, நரசிம்மபாரதி டி. எஸ். துரைராஜ், எம். ஜி. சக்ரபாணி ஆகியோரும், தெலுங்குப் பதிப்பில் எம். வி. ராஜம்மா, என். டி. ராம ராவ், சிவராவ், ஸி. எஸ். ஆர். ஆகியோரும், நாகூரின் டைரெக்ஷனில் நடிக்கின றனர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82. MAIN ST., கொழும்பு-11.

சங்கமம்

[54ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு நாள் என்னிடம் சொன்னார் : "நர்மதா, இனிமேல் இந்த ஊரில், இந்த முப்பத்தைந்து ரூபாய்ச் சம்பளத்தில் இருந்து கொண்டிருந்தால், வண்டி ஓடாது: நான் பம்பாய்க்குப் போய் அதிகச் சம்பளம் கிடைக்கும் வேறு ஒரு உத்தியோகத்தைத் தேட நினைக்கிறேன்."

"பம்பாய்க்கா?" என்று ஏங்கினேன் நான்.

"ஆமாம்."

"அவ்வளவு தொலைவில்....எங்களைத் தனியே விட்டு, விட்டு......."

"கொஞ்ச நாட்கள் தானே, நர்மதா; வேலை கிடைத்ததும் உன்னையும் மாயியையும் கூட்டிக் கொண்டு போய்விடுவேனே!"

கண்ணற்ற கபோதி தான் நான்; இருந்தாலும் காதற் சுவை அறியாத முண்டமல்ல. கணவரைச் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டும் என்பது எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்ததோ, அவ்வளவு ஆசை பம்பாய் நகரத்தில் அவருடன் குடித்தனம் செய்து ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பதிலும் இருந்தது. ஆனால் அம்மாவிடம் அவர் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்தபோது, அவள் ஒரேயடியாக "வேண்டாமடா, அப்பா; கிடைக்கிற வரும்படி போதும். பிறக்கிற குழந்தை நீங்கள் குடிக்கிற கூழைப் பகிர்ந்து குடித்து வளர்ந்தாலே போதும்" என்றாள்.

"அது சரிதான் மாயி; இப்போதைக்கு இது போதும் என்று இருந்து விடலாம். ஆனால், இந்த ஒரு குழந்தைக்குப் பிறகு உங்கள் பெண்ணுக்குக் கர்ப்பத்தடை உத்தரவு போட்டு, நிறைவேற்றி விட உங்களுக்குச் சாமர்த்திய முண்டானால், நான் எங்குமே போகாமல் இங்கேயே தங்கிவிடுகிறேன்" என்றார் கணவர்.

அவருடைய பேச்சே இப்படித்தான்; நறுக்குத் தெறித்தார்ப்போல் நாலு வார்த்தைகளில் எதிராளியின் வாயை அடைத்துவிடும்.

வேறு வழியின்றி அவர் பம்பாய் செல்லுவதை அனுமதித்தாள், அம்மா.

கடவுளின் கருணையால் அங்கு போனதுமே அவருக்கு நல்ல சம்பளத்தில் தக்க வேலை ஒன்று கிடைத்து விட்டது. அந்த மகிழ்ச்சி நிறைந்த செய்தியுடன் வந்த கடிதத்திலே. அவர் என்னையும் அம்மாவையும் அடுத்த கப்பலில் பம்பாய் வந்து சேரும்படி எழுதியிருந்தார்.

ஆனால், அம்மாவுக்கு ஊரைவிட்டுக் கிளம்ப மனதேயில்லை. அதற்கு. நான் கர்ப்பமாக இருந்ததை ஒரு சாக்காக்கிக் கொண்டாள். "எல்லாம், நர்மதா பெற்றுப் பிழைத்த பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்று என் கணவருக்குப் பதில் எழுதச் செய்துவிட்டாள்.

பிரிவுத் துயரைச் சிறிதும் அறியாதவள் அம்மா. கணவர் வீட்டில் புகுந்த நாள் தொட்டு அதையே பிறந்தகமாக ஆக்கிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டதனால், கணவரை நெடுங்காலம் பிரிந்திருக்க வேண்டிய நிலை அவளுக்கு ஏற்படவில்லை. எனவே இளந் தம்பதிகளின் பிரிவு ஏக்கத்தைப் பற்றிய அநுபவமும் அவளுக்கு இல்லை.

இதுதான் போகட்டுமென்றால், என்னுடைய வேறொரு துர்ப்பாக்கியங்கூட அம்மாவுக்குத் தோன்றாமற் போனது ஏன்? மற்றப் பெண்களைப் போலவா நான்? காதல் வாழ்வில் எதிர்ப்படும் இத்தகைய பள்ளத் தாக்குகளை மற்ற

பனிரண்டே வயது நிரம்பப் பெற்ற குமாரி ஜி. லக்ஷ்மி தேவி மே 16ந் தேதியன்று இந்தியன் பைன் ஆர்ட் ஸொஸைட்டியின் ஆதரவில் சென்னை கோகலே மண்டபத்தில் பாராட்டத்தக்க முறையில் பாடினாள்.

வர்கள் கடிதப் பரிவர்த்தனைப் பாலமிட்டுக் கடந்துவிட முடியும். இந்த அபாக்கியவதிக்கு அந்தப் பாக்கியத்துக்கு 'வக்கு' இல்லையே! வெளி உலகம் எனக்கு இருட்டடித்துவிட்டது போலவே, அறிவு உலகமும் தனது இருள் போர்வையால் என்னை இழுத்து மூடிவிட்டிருந்ததே! என்றைக்குக் கண்களை இழந்தேனே அன்று முதலே கல்வியையும இழக்க நேரிட்ட நான் எங்ஙனம் கணவருக்குக் கடிதம் எழுதுவது? அல்லது அவர் எழுதுவதைத்தான் எப்படிப் படித்துப் புரிந்து கொள்ளுவது?

இத்தகைய ஆறு கஷ்டமான மாதங்களுக்குப்....பிறகு ஒரு நாள்:....

நான் தாயானேன்!

"ஆண் குழந்தை; கொட்டுக் கொட்டுக் கொட்டென்று விழிக்கிறது!" என்ற அம்மாவின் சொற்கள் அந்த வேதனைக் கிடையிலும் எனக்கு ஆனந்த பாஷ்பம் பொழிந்தன. இருந்தாலும், மரம் ஏறியவன் என்றென்றும் அங்கேயே தங்கிவிட முடியுமா? எப்பொழுதேனும் அவன் கீழே இறங்கித்தானே ஆகவேண்டும்? என்னுடைய ஆனந்தமும் அப்படித்தான் ஆயிற்று. கபோதியாக இருந்த போதிலும் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டுத் தாயாகவும் ஆகிவிட்டேன் என்ற என் சந்தோஷத்தைத் தொடர்ந்து சங்கடம் தோன்றியது.

நான் பிரசவ அறையைவிட்டு வெளி வந்தவுடனேயே அம்மா படுக்கையில் சாய்ந்து விட்டாள். அம்மாவின் மனசு மாத்திரம் திடமானது அல்ல; அவள் உடலும் திடமானதுதான். நான் அறிய ஒரு நாள் கூட அவள் ஒரு பத்து அரைத்துப்போட்டுக் கொண்டது கிடையாது; 'அந்த நோய்', 'இந்த நொடி' என்று படுக்கையை விரித்துப் படுத்ததில்லை. அப்படி இருந்தவள் ஒரு நாள் காலையில் என்னை எழுப்பி, "நர்மதா! என் உடம்பு 'புட்டுப் புட்'டாக வலிக்கிறது, அம்மா; என்ன காரணமோ தெரியவில்லை. நீ கொஞ்சம் எழுந்திருந்து, மெல்ல அடுப்பைப் பற்றவிட்டு, எனக்குக் கொஞ்சம் சுக்குக் கஷாயம் வைத்துக் கொடுக்கிருயா?" என்று கேட்டபோது நான் ஆச்சரிய மடைந்தேன்.

குருடியாக இருந்தாலும், என்னை வீட்டு வேலைகளில் ஒருவாறு பழக்கி

ரேடியோவிலும், மேடையிலும் அடிக்கடி பாடி வரும் டி. எம். சௌந்தரராஜனின் பாட்டுகளை முன்பே நீங்கள் " கன்னியின் காதலி ", " மந்திரி குமாரி ", " தேவகி ", "வளையாபதி" ஆகிய படங்களில் கேட்டிருக்கிறீர்கள். இப்பொழுது அவர் அடுத்து வரும் சில தமிழ்ப் படங்களில் பின்னணி பாடிவருகிருர்.

வைத்திருந்தாள் அம்மா. எவ்வித வேலையையும் என்னைச் செய்யவிடாது, தானே அனைத்தையும் செய்து வந்த போதிலும், நாலில் ஒன்றில் பிறர் உதவியின்றி வீட்டுக் காரியங்களைச் செய்யும் இயல்பு எனக்கு ஏற்பட்டுத்தான் இருந்தது. ஆகவே, எழுந்திருந்து அவளுக்குக் கஷாயம் தயாரித்துக் கொடுத்தேன். ஆனல், கஷாயத்துக்குப் பயந்தோடிவிடும் வியாதியா அவளுக்கு வந்திருந்தது? கிராமாந்திரமாக இருந்ததோ, நான் பிழைத்தேனே? அண்டை அயலில் வசித்த ஆணும் பெண்ணும் கூப்பிட்ட குரலுக்கெல்லாம் ஓடிவந்து உதவியிரா விட்டால், பிரசவித்துப் பதினைந்து நாட்கள்கூட ஆகியிராத இந்தக் குருடி, கைக்குழந்தையையும் வீட்டு வேலைகளையும், அம்மா சிசுருஷைகளையும் சமாளித்து மீண்டிருக்க முடியுமா?

மூன்று நாட்களாகியும் அம்மா படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை என்றதும் என்னை விசாரம் பற்றிக் கொண்டது.

(தொடரும்)

இது செய்தி

[72ம் பக்கத் தொடர்ச்சி]

வரலாற்றுப்படத்துக்கு அகில இந்தியப் பரிசும், "ராஷ்டிரபதி தங்கப் பதக்கம்" என்றும், பல்வேறு பாஷைத் தொகுதிகளில் சிறந்த முழு நீளப் படத்துக்கு வழங்கப்படும் பிராந்திய அரசாங்கப் பரிசுகள் "ராஷ்டிரபதி வெள்ளிப் பதக்கம்" என்றும் குறிப்பிடப்படும். சிறுவர்களுக்கான சிறந்த படத்துக்கு வழங்கப்படும் அகில இந்திய அரசாங்கப் பரிசு "பிரதம மந்திரி தங்கப் பதக்கம்" என்று குறிப்பிடப்படும்.

வாழ்த்துகிறோம்

சங்கீத வித்வானும் பின்னணிப் பாடகருமான டி. எஸ். தியாகராஜன் சென்ற மாதம் 5ம் தேதி சௌ. சீதா லக்ஷ்மியைத் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார், சென்னையில்.

திருக்கோயிலூர் சகோதரிகளில் மூத்தவரான எஸ். அலமேலு, ஜெமினி பிக்சர்ஸைச் சேர்ந்த கே. எஸ். அர்ஜுனனை மணாளனாக அடைந்தார் சென்ற மாதம் 9ந்தேதி, திருவானைக்கோயிலில்.

எழுத்தாளரும், ஏவி. எம். ஸ்டுடியோ கதை இலாகாவில் பணியாற்றுபவருமான வலம்புரி சோமநாதன், சென்ற மாதம் 16ம் தேதி செல்வி சிகப்பியை, வலையப்பட்டியில் மணந்துகொண்டார்.

அதே தினம், பிரபல நாவலாசிரியை "லக்ஷ்மி"யின் சகோதரி சௌ. கல்யாணியின் திருமணம் சென்னையில் நடந்தது. மணமகன் வி. கே. மூர்த்தி.

"எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்"டில் டைரெக்டருமான என். ரங்கநாதன் தமது மகள் சௌ பாக்கியவதி மீனாக்ஷியின் திருமணத்தை வெகு சிறப்பாக சென்ற மாதம் 26ம் தேதி சென்னையில் தம் பங்களாவில் நடத்தினர். நாகபுரி என். இ. எல். பி. கம்பெனியில் ரெஸிடென்ட் என்ஜினீராக வேலை பார்க்கும் சிரஞ்சீவி சந்திரசேகரன் பி. இ., மணமகன். திருமணத்திற்கும், மாலையில் குமாரி வனஜா நாட்டியக் கச்சேரியுடன் நடந்த வரவேற்பிற்கும் பல பிரபலஸ்தர்கள் விஜயம் செய்து ஆசிகூறிப் பரிசுகளை வழங்கினர்.

கும்பகோணம், மிதிலா இண்டஸ்ட்ரீஸ் சொந்தக்காரர் ஏ. ஆர். விஸ்வநாதன் செட்டியார் தமது குமாரத்தி சௌ. வஸந்தாவை, கல்லகுறிச்சி, பாங்கர் கே. ராஜகோபால் செட்டியார் மகன் ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு திருமணம் செய்து கொடுத்தார். கும்பகோணத்தில் சென்ற மாதம் 27ம தேதி வெகு சிறப்பாக நடைபெற்ற இந்த விவாகத்தில் வி. வி. சடகோபனின் இன்னிசைக் கச்சேரியும், வீருசாமி பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றன.

பிரபல ஆர்ட் டைரெக்டரான ஏ. கே. சேகர், தமது செல்வி சௌ. ராமதிலகத்தை, சிரஞ்சீவி எம். பரவாஸுதேவ் பி.ஏ.,க்குத் திருமணம் செய்து வைத்தார். சென்ற மாதம் 23ம் தேதி சென்னையில் நடைபெற்ற இந்தத் திருமணத்திற்குப் பல பிரமுகர்கள் விஜயம் செய்தனர்.

நடிகர் - டைரெக்டர் வி. நாகய்யா தமது மருமாள் சௌ. அம்ருதவல்லியின் திருமணத்தை சோளிங்கபுரத்தில் சென்ற மாதம் 20ம் தேதி வெகு சிறப்பாக நடத்தினர். மணமகன் சிரஞ்சீவி வி. எஸ். நாகராஜாவும் அவரது உறவினர்தான்.

தம்பதிகளுக்கு "குண்டூசி"யின் மனமார்ந்த ஆசிகள் உரித்தாகுக.

"உஜலா"

சென்ற மாதம் 2-ம் தேதி பர்மா-ஷெல் ஸ்தாபனத்தார் தாங்கள் தயாரித்துள்ள "உஜலா" என்ற கலர்ப் படத்தைப் பத்திரிகைக்காரர்களுக்குத் திரையிட்டுக் காட்டினர்கள்.

ஸ்ரீ கலா நிகேதன்

சென்னையில்-ஜார்ஜ் டவுன் பகுதியில் புதியதாக ஸ்ரீ கலா நிகேதன் என்ற ஒரு சங்கீத நாடக நடன சபா ஆரம்பமாகியுள்ளது. சென்ற மாதம் 23-ம் தேதி இந்த ஸ்ரீ கலா நிகேதனை திருப்புகழ் மணி தலைமை வகிக்க, மந்திரி ஸி. சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார். நிகேதனின் டைரெக்டர்களில் சில பொறுப்பான ஆசாமிகளின் பெயர்களும் இருக்கின்றன. இந்த சபை பிரதி மாதமும் நடன, நாடக, சங்கீத, கதா காலக்ஷேப நிகழ்ச்சிகளை நடத்துமாம். முதல் நாள் ஆரம்ப தினத்தன்று, பி. ஏ. பெரியநாயகி பதம் பாட, குமாரிகள் ஸாயி சுப்புலக்ஷ்மியின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. ஆரம்ப விழாவை முன்னிட்டு ஒரு நல்ல சிறு மலரையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

44 ஆண்டுகளாக புகழ்பெற்ற..
மேரிராம்
பற்பொடி
(REGD.)
சகல விதமான பல் நோய்
களையும் அறவே ஒழிக்க
வைத்திய முறைப்படி
தயாரிக்கப்படுகிறது.
*
பாக்கெட், டின், இருவித பாக்
கிங்குகளில் விற்பனையாகிறது.
Parthan
தயாரிப்பவர்கள்
ஆர். எஸ். பதி அண்டு கோ.,
(REGD.)
தபால் பெட்டி நிர்: 99. மதுரை.

GUNDOOSI June 1954 Regd. No. M. 4924